YARL OSAI
Regested No. QD/130/News/2011
# யாழ் ஓசை
வார இதழ்
ஓசை : 01 நாதம் : 38 வெள்ளிக்கிழமை 22.07.2011 வார இதழ் விலை ரூபா: 15.00
பொதுசன
நகர சபை, யாழ்ப்பாணம்.

# வடக்கில் சூறாவளி பிரசாரம் ஓய்ந்தது
# வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் பூர்த்தி




*பாடசாலைகளுக்கு விடுமுறை *மதுக்கடைகளும் பூட்டு
* 19 சபைகள், 317 உறுப்பினர்கள் * 4 ,35,557 பேர் வாக்களிக்க தகுதி
*554 வாக்களிப்பு நிலையங்கள் *பாதுகாப்பு பன்மடங்கு

(அ. கனகராஜ்)

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பு நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கின்ற நிலையில், வடக்கில் ஏட்டிக்குப் போட்டியாக மேற்கொள்ளப்பட்ட சூறாவளிப் பிரசாரம் ஓய்ந்துள்ளது. வடக்கில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்க ளிலும் 19 சபைகளுக்கான தேர்தல் நடைபெறுவதுடன், (6ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரங்கள் ஓய்ந்தன சுவரொட்டிகள் ஓயவில்லை

(அ. கனகராஜ்)

ஒத்திவைக்கப்பட்ட 65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் யாவும் புதன்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைந்த போதிலும் வடக்கில் தேர்தல் பிரசாரத்திற்காக ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் யாவும் அகற்றப்படா மல் இருக்கின்றன. (6ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

வெற்றி யாருக்கு? 15
தடம் மாறும் யாழ்ப்பான கலாசாரம் 21
எழுத்தாளர் சத்தியபாலனுடன் சந்திப்பு 25

## கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலமே எம்மை நெருங்கிவரும் உலகிற்கு வலுவூட்ட முடியும்

(வடமராட்சி, பளை நிருபர்கள்)

**சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு**

தமிழ் மக்களுக்கும் அரசுக்குமிடையே இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுகிறது. தாம் கொன்றொழித்த இனத்தையே தமது வெற்றிக்கும் சர்வதேச பிரசாரத்திற்கும் அரசு பயன்படுத்த முனைகிறது. (6ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் லண்டன் பயணம்

பிரிட்டனின் லண்டன் நகரில் இன்று முதல் இம் மாதம் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள (6ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குகள் எண்ணும் பணிக்கு வெளிமாவட்ட அதிகாரிகளை அனுமதிக்கக் கூடாது

**தமிழ்க்கூட்டமைப்பு வேண்டுகோள்**

வாக்கு எண்ணும் பணிகளுக்காக வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தரும் 130 அதிகாரிகளை அனுமதிக்கக் கூடாது; அவர்களை நிறுத்தவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6ஆம் பக்கம் பார்க்க)

SOUTH KOREA
Rs. 4/-
IDD Per Minute Package
Dialog

ஜெயசந்திரன்ஸ் பட்டாடைகளால் உங்கள் திருமண விழாவை அலங்கரித்திடுங்கள்


JEYECHANDRANS
No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்துள்ள அமைச்சர் குழாமை கண்டு மக்கள் பயப்படத்தேவையில்லை

## மானிப்பாய் தொகுதி த.அ.க. அமைப்பாளர் கஜதீபன்

வண்ணார்பண்ணை,

யுத்த குற்றத்தை மறைப்பதற்கு யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்துள்ள அமைச்சர் குழாமை கண்டு மக்கள் பயப்படத் தேவையில்லை. இவர்கள் தேர்தலுக்கு மட்டுமே வருவார்கள் எனத் தெரிவிக்கிறார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் கஜதீபன்.

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும்அங்கு தெரிவிக்கையில்-

எம்மை நாம் ஆளுவதற்கான இந்தத் தேர்தலை சிங்கள கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு பிரசாரம் செய்கின்றன. இந்த நிலை ஏன் நமக்கு. நாம் எமது ஒற்றுமையை எமது பலத்தை நிரூபிக்கவேண்டும். சாதாரணமாக நடைபெறுகின்ற இந்தத் தேர்தலை அரசாங்கம் கடும் பிரசாரத்தை வெளிக் கொணர்ந்து இலவசங்களையும் நிதியொதுக்கீடுகளையும் திறப்பு விழாக்களையும் செய்து வருகின்றது.

இது ஒரு புறம் இருக்க அரசாங்கத்துடன் தொங்கிக்கொண்டிருக்கும் அமைச்சர் கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது தமிழ் மக்கள் எவரும் கொல்லப்படவில்லையென பறைசாற்றுகின்றார். இவர் தமிழ் மக்களின் விடிவுக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர். பின்பு அதனைக் கைவிட்டு அரசியலில் இணைந்தார். பல கோரிக்கைகளை முன்வைத்து எதுவும் கிடைக்காத நிலையில் தனது கட்சியின் சின்னத்தை கைவிட்டு வெற்றிலையில் தொங்கிக்கொண்டு உள்ளார். அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் எமது மூத்த அரசியல் தலைவரான இரா. சம்பந்தன் கூட்டங்களுக்கு பேச வரும்போது மேடை ஏறுகின்ற போது 4 , 5 பேர் பிடித்து ஏற்ற வேண்டும் எனவும் இவ்வாறானவர் எவ்வாறு தலைவராக இருக்க முடியும் என்றும் கூறுகிறார். இவ்வாறு தெரிவிப்பவர் அவருக்கு வயது வராது என நினைக்கிறாரா?

எம்மை நாம் ஆளுகின்ற இந்தத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. போன்ற பெரும்பான்மைக் கட்சிகள் போட்டியிடுகின்றன. எமது பகுதியில் எம்மை நாம் ஆளுவதற்கு நாம் எமது கட்சியையே தெரிவு செய்ய வேண்டும்.

இறுதிக் கட்ட யுத்தத்தில் மனித படுகொலை செய்த அரசு அதனை மூடி மறைப்பதற்காக எமது கால்களில் விழுந்துள்ளது. இதனை கண்டு மக்கள் பயந்து விடக்கூடாது. இறந்தவர்களின் ஆவிகள் சும்மாவிடாது.

எமது இனப்பிரச்சினைக்குத் தீர்வை காண்பதற்கு ஒரே குடையின் கீழ் ஒன்று பட்டு எமது வீட்டிற்கு வாக்களித்து எம்மை பலப்படுத்தி சர்வதேசத்திற்கு காட்டுவோம் எனத் தெரிவித்தார்.

# ஓமந்தை மத்திய கல்லூரி இன்று திறப்பு

நெடுங்கேணி,

ஓமந்தை மத்திய கல்லூரி இன்று 22 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இத் திறப்பு விழாவில் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவனும் கலந்துகொள்ளவுள்ளார்.

கடந்த ஆண்டுவரை இராணுவ முகாமாக செயற்பட்டு வந்த இப் பாடசாலைக் கட்டடம் தற்போது இராணுவத்தினரால் முழுமையாக விடுவிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதுவரை காலமும் பாடசாலையின் முன்னால் உள்ள ஆலய வளவில் தற்காலிக கொட்டகையில் இப்பாடசாலை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய எதிர்ப்புப் போக்கை விதைக்க பலர் முயற்சி

## அமைச்சர் டலஸ்

இலங்கையில் அரசியல் தீர்வை காண வேண்டும் என்பது தொடர்பான விடயத்தில் இந்தியாவிடம் இருந்து எவ்விதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை என்பதனை உறுதியாக தெரிவிக்கின்றோம். ஆனால் இலங்கையில் இந்திய எதிர்ப்புப் போக்கை விதைக்க பலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசியல் தீர்வு செயற்பாட்டில் இந்தியாவின் செயற்பாடுகள் மற்றும் நகர்வுகள் தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் :-

அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவிடம் இருந்து எவ்விதமான அழுத்தங்களும் இலங்கைக்கு பிரயோகிக்கப்படவில்லை. இந்தியா இலங்கையுடன் உயர்ந்தமட்ட உறவுகளைக் கொண்டுள்ள நாடாக உள்ளது.

ஆனால் இலங்கையில் இந்திய எதிர்ப்புப் போக்கை விதைக்க பலர் முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர். இதே சக்திகள் சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் இந்திய எதிர்ப்பை உருவாக்கி நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்தன.

இன்று மேற்கின் சில சக்திகளினால் தூண்டப்படும் இவ்வாறான சக்திகள் இந்திய எதிர்ப்புப் போக்கை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இந்தியாவில் நெருக்கடியை ஏற்படுத்தவும் இந்திய அரசியலில் தளம்பல் நிலையை உருவாக்கவும் வேறு வெளிநாட்டு சக்திகளுக்கு தேவையேற்பட்டுள்ளது.

அந்த தேவையை நிறைவேற்றும் பொருட்டு இலங்கையில் உள்ள இந்திய எதிர்ப்பு சக்திகளை பயன்படுத்தி நகர்வுகளை முன்னெடுக்க முயற்சிக்கின்றன. எனவே இந்தியாவினால் அரசியல் தீர்வு விடயத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுவதை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

ஆனால் இந்தியாவின் எம்முடனான தொடர்புகள் தவிர்க்கப்பட முடியாதவையாகும். இந்தியா மிக அருகில் உள்ள நாடு. இந்தியாவில் 65 மில்லியன் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். எமது கலாசார விவகாரங்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட நாடாக அந்நாடு திகழ்கின்றது.

அத்துடன் தமிழகத்தினால் முன்வைக்கப்படும் நெருக்குதல்கள் மத்திய அரசாங்கத்தில் தாக்கத்தை செலுத்தும். எனினும் தென்னிந்தியாவில் பாரிய எதிர்ப்புக்கள் இருந்த நிலையில்தான் இந்திய மத்திய அரசாங்கம் யுத்த நடவடிக்கையின்போது எங்களுக்கு உதவிகளை வழங்கியது. எனவே நாம் இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும் என்றார்.

# தேர்தலின் மூலம் சர்வதேசத்துக்கு தமிழ் மக்கள் செய்தி சொல்லவேண்டும்

## விநாயகமூர்த்தி எம்.பி. வேண்டுகோள்

வடமராட்சி,

இந்த உள்ளூராட்சித் தேர்தல் சர்வதேசமயமாக்கப்பட்டுள்ளதால் சர்வதேசத்திற்குத் தமிழ்மக்கள் ஒரு செய்தியை வெளிப்படுத்த வேண்டும். ஒட்டு மொத்தமாகத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பின்னால்தான் நிற்கிறார்கள் என்பதைச் சொல்லவேண்டும் என்று பருத்தித்துறை தும்பளையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் இறுதிப் பிரசாரக்கூட்டத்தில் பேசிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சர்வதேசமயமாக்கப்பட்டுள்ளதால் இன்று அத் தேர்தல் முக்கியமானது. இத் தேர்தலை சர்வதேச நாடுகள் மிக உன்னிப்பாகக் கவனிக்கின்றன. அதற்கேற்ற வகையில் இத் தேர்தலை நாம் அணுக வேண்டும். எமது தலை விதியையும் இத் தேர்தல் தீர்மானிக்கின்றது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு 17 வீத வாக்குகளே கிடைத்தன. அப்படியிருந்தும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என வெளிநாடுகள் தெரிவித்துள்ளன. இது தமிழ் மக்கள் எமக்குத் தந்த ஆணை.

எமக்கு தமிழ் மக்கள் தந்த ஆணையை வைத்துத்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எம்முடன் பேசுகிறார். ஆனால் பேச்சு சூனியத்தில் போய் முடியுமோ தெரியாது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உண்டு. ஆனால் இந்தியாவிலிருந்து நிருபமா ராவும் மேனனும் வரும்போது காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கமுடியாது என ஜனாதிபதி கூறினார். முள்ளிவாய்க்காலுக்கு பின்னரும் எமது மக்கள் பட்ட அவலங்கள் எம்மக்களுக்குத்தான் தெரியும்.

இங்கு நிலை கொண்டுள்ள இராணுவம் இராணுவ வேலையைப் பார்க்கட்டும். தேர்தல் மற்றும் அரச நிர்வாகக் கடமைகளில் தலையிடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

# சர்வதேசத்துக்கும் அரசுக்குமிடையில் இடம்பெறும் இராஜதந்திரப் போர் தமிழரின் விடுதலைக்கு சாதகம்

## பருத்தித்துறையில் மாவை எம்.பி.

வடமராட்சி,

கடந்த 60 ஆண்டுகளில் ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களை எந்த அரசுகளோ சிங்களத்தலைமைகளோ வெற்றிகொள்ளவில்லை என்பது வரலாறு. இந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் தமிழ் மக்கள் அரசுக்கும் சிங்களத் தலைமைகளுக்கும் அந்தப் பாடத்தைப் புகட்டவேண்டும். இந்தப் பாடத்தின்மூலம் தமிழ் மக்கள் அரசியல் தீர்வு ஒன்றைப் பெறத் திடசங்கற்பம் கொண்டுள்ளார்கள் என்பதை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் நிரூபிக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பருத்தித்துறை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் கலை அரங்கத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்தில் பேசுகையில் கூறினார்.

பருத்தித்துறை நகர சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி சபா ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது-

கடந்த தேர்தலில் படித்தவர்கள்கூட வாக்களிக்கவில்லை. அதனால் யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று பிரதிநிதிகள் அரசு பக்கத்திலிருந்து வந்து விட்டார்கள். கிழக்கு மாகாணத்தில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வடகிழக்குப் பிரிக்கப்பட்ட நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக்கள் பேராதரவைத் தந்துள்ளார்கள். கடந்த தேர்தல்களில் எல்லாம் கிழக்கு மக்கள் மாத்திரமன்றி முள்வேலிக்குள் வன்னியில் அகப்பட்ட மக்களும் பேராதரவைத் தந்து வாக்களித்துள்ளார்கள். யாழ். மக்களுக்கு என்ன நடந்தது. ஏன் வாக்களிக்க முன்வரவில்லை. இத் தேர்தலில் யாழ். மக்கள் வாக்குகளை அளித்து எமக்குள்ள அரசியல் பலத்தை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும். இதன் மூலம் எமது தீர்வுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வாய்ப்பாக இருக்கும்.

இன்று நடைபெறும் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். அதற்காக ஒரு வாக்கையேனும் விடாமல் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து எம் மக்கள் வெற்றி பெற்று நாம் ஓரணியில் நிற்கின்றோம் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி உதவியாளர் சேவைக்கு புதிய பிரமாணக் குறிப்பு தயாரிப்பு


(யாழ். மத்தி நிருபர்)

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர் சேவைக்கு புதிய சேவை பிரமாணக் குறிப்பு வெளியிடப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரையின் பேரில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் புதிய சேவை பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிதாக தயாரிக்கப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான சேவை பிரமாணக் குறிப்பு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வட மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படும் என பொதுச் சேவை ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 09.07.1999 இல் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு கடந்த காலங்களில் மூன்று சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டபோதும் அவை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்படவில்லையென ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பளைப்பகுதியில் இனம் தெரியாத விஷமிகளால் அதிகாலை தீயிட்டு கொழுத்தி நாசமாக்கப்பட்ட அறிவொளி கல்வி நிலையத்தைப் படத்தில் காணலாம். (படம் -வண்ணார்பண்ணை நிருபர்)

# சேதமடைந்துள்ள ஆஸ்பத்திரி வீதி

ஏழாலை,

கோண்டாவில் ஆஸ்பத்திரி வீதி நீண்டகாலமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

நல்லூர் பிரதேச சபையின் கீழுள்ள கோண்டாவில் ஆஸ்பத்திரி வீதியானது குண்டும் குழியுமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியூடாக பிரயாணம் செய்யும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இவ்வீதியினைப் புனரமைப்புச் செய்யுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றார்கள்.

# முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா

ஏழாலை

குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் விக்னேஸ்வரா முன்பள்ளியின் மழலைகள் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

விக்னேஸ்வரா சனசமூக நிலையத் தலைவர் என். வைரவநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் எஸ். ஏ. சுகுணராஜ், குப்பிளான் வடக்கு கிராம அலுவலர் செ. ஞானசபேசன், குப்பிளான் தெற்கு கிராம அலுவலர் எஸ். பரமநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வலிகாமம் மேற்கு முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

நல்லூர், சங்கானை,

வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்க சங்கானைக் கோட்ட சுழிபுரம் 1 குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா மூளாய் வேரம் சுவாமி ஞானப்பிரகாசர் முன்பள்ளி மைதானத்தில் அண்மையில் சுழிபுரம் 1 குடும்ப முன்பள்ளிச் செயலாளர் செல்வி இ. சரஸ்வதி தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக மூளாய் அ.மி.த.க. பாடசாலை அதிபர் திருமதி பு. பஞ்சாட்சரம் கலந்துகொண்டார். சுழிபுரம் குடும்ப முன்பள்ளிகளைச் சேர்ந்த 10 முன்பள்ளிச் சிறார்கள் இவ்விளையாட்டு விழாவில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சி இசை ஆசிரியர் சங்கத்தினால் பாராட்டு விழா

சாவகச்சேரி,

தென்மராட்சி இசை ஆசிரியர் சங்கத்தினால் சங்கீத பூஷணம் பொன்.ஸ்ரீ வாமதேவனுக்கு பாராட்டுவிழா நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழநேசன் தலைமையில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இவ்விழா நடைபெறவுள்ளது.

ஆசியுரையை மண்டுவில் இலஞ்சியாரணியம் கண்ணகை அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. க. கிருபானந்தக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

பாராட்டுரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட இசைத் துறை வளாக விரிவுரையாளர் தவநாதன் றொபேட், யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ. ரவீந்திரன் , தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் , ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீஸ்கந்தராசா , அதிபர்களான ச. புண்ணியசீலன், அ. கைலாயபிள்ளை , க. அருந்தவபாலன், திருமதி சி. சிவத்திரை , பவளகுமாரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத்தலைவர் சங்கீத கலாநிதி ந.வி.மு. நவரத்தினம் நிகழ்த்தவுள்ளார். விழா நாயகன் வாழ்த்துப் பா வழங்கி பொன்னாடை போர்த்தி கேடயமும் பொற்கிழியும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார் என்று விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி

கைதடி,

வவுனியா, ஓமந்தை மத்திய கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் விமரிசையாகக் கொண்டாடவுள்ளது. இதற்கென அமைக்கப்பட்ட விழாக்குழு ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியீடு, நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டபம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரியின் நூற்றாண்டு தினம் ஜனவரி மாதம் 20 ஆம் திகதியே. ஆனால் பாடசாலை தற்போது தான் சுமுகமாக இயங்கத் தொடங்கியுள்ளது.

இதனால்தான் செப்டெம்பர் மாதம் கல்லூரியின் நூற்றாண்டு நிகழ்வைக் கொண்டாடவுள்ளதாக விழாக் குழுவினர் தெரிவித்தனர். வவுனியா மாவட்டத்தில் பேராசிரியர்கள், உயரதிகாரிகள், கல்விமான்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோரை உருவாக்கிய புகழ்பூத்த கல்லூரியாகவும் இதுவுள்ளது.

கடந்த இருபது வருட கால யுத்தத்தினால் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள இக்கல்லூரி அண்மையில் தான் புனரமைக்கப்பட்டது. இக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒத்துழைப்பை பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர் ஆகியோரிடமிருந்து விழாக் குழுவினர் வேண்டிநிற்கின்றனர்.

# மனைப் பொருளியல் முகாமைத்துவப் பயிற்சி

தெல்லிப்பழை

வலிகாமம் கல்வி வலயத்தினரால் முறைசாராக் கல்விப் பிரிவினரின் ஏற்பாட்டில் சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் இலவச மனைப் பொருளியல் முகாமைத்துவப் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கேக் ஐசிங் , அலங்கார வேலைகள், கைவினைப்பொருள் உற்பத்தி, தலையலங்காரம், சிற்றுண்டி தயாரித்தல் போன்றன கற்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள முடியும். இப்பயிற்சி நெறிகள் யாவும் இலவசமாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயப்பண்ணை அமைப்பதற்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி தெரிவு

ஏழாலை,

வலிகாமம் கல்வி வலயப் பிரிவில் ஒரு கல்வி வலயத்திற்கு ஒரு விவசாயப் பண்ணை அமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இச் செயற்திட்டத்தின் கீழ் யா / பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியே விவசாயப் பண்ணை அமைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலையாகும்.

வலிகாமம் வலய மட்டத்திலான விவசாய செயற்பாடுகளில் முன் மாதிரியான செயற்பாடுகளையும் விவசாயப் பயிர்கள் செய்யக்கூடிய நிலத்தினையும் கொண்டமைந்துள்ளதாக இக் கல்லூரி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yaal Osai

# யாழ் ஓசை

2011 ஜூலை 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 021-2222730, Fax: 0212222730

E-mail-jaffna@virakesari.lk

## நேரகாலத்துடன் சென்று மக்கள் வாக்களிக்கவேண்டும்

நாட்டில் 65 உள்ளூராட்சிமன்றங்களுக்கு நாளை சனிக்கிழமை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 19 உள்ளூராட்சிமன்றங்களுக்கு பிரதிநிதிகளை தெரிவு செய்யும்பொருட்டு தேர்தல் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. காலை ஏழு மணி தொடக்கம் மாலை நான்கு மணிவரை தேர்தல் வாக்களிப்பு நடைபெறவுள்ள நிலையில் வாக்காளர்கள் நேரகாலத்துடன் தமது வாக்குப் பதிவை மேற்கொள்வது சிறந்த விடயமாக அமையும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இம்முறை வடக்கின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 19 உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்த நிலையிலேயே காணப்பட்டன. வடக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வீட்டு சின்னத்திலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிலை சின்னத்திலும் மக்கள் விடுதலை முன்னணி மணி சின்னத்திலும் போட்டியிடுகின்றன.

தேர்தலுக்கான பிரசார பணிகள் புதன் கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ள நிலையில் வடக்கில் ஆளும் கூட்டமைப்பு சார்பில் சூறாவளி பிரசார பணிகளில் ஈடுபட்டிருந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்கள் தெற்குக்கு திரும்பிவிட்டனர். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் ஒவ்வொரு அமைச்சர் என்ற வகையில் வடக்கில் ஆளும் கூட்டணி சார்பில் தீவிர பிரசார பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகளும் இக்காலப்பகுதியில் அடிக்கடி வடக்கில் இடம்பெற்றதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மூன்று நாட்கள் வடக்கில் தங்கியிருந்து கூட்டங்களிலும் பல நிகழ்வுகளிலும் கலந்துகொண்டிருந்தார். பிரசார பணிகளின்போது வெற்றிலைச் சின்னத்தை மறந்துவிடவேண்டாம் என்று ஜனாதிபதி யாழ். மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தமையும் இங்கு முக்கிய அம்சமாகும்.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பிலும் தீவிரமான பிரசாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார். அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பிலும் மிகப்பெரிய பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படாவிடினும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் பிரசார பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் அரசியல் கட்சிகளின் பிரசார பணிகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில் நாளை சனிக்கிழமை உள்ளூராட்சிமன்றங்களுக்கு பிரதிநிதிகளை தெரிவு செய்யும் நோக்கில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. இம்முறை தேர்தல் 2010 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் நடைபெறவுள்ளதுடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 19 சபைகளுக்கு மொத்தமாக 317 உறுப்பினர்களை தெரிவு செய்ய 4 இலட்சத்து 35 ஆயிரத்து 557 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்காளர்கள் வாக்களிப்பதற்கென 459 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடொன்றின் ஜனநாயகக் கட்டமைப்பின் முக்கிய அம்சமான தேர்தல் வாக்களிப்பில் மக்கள் கலந்துகொண்டு வாக்களிப்பதும் நிர்வாகத்தை நிர்ணயிப்பதில் தமது பங்களிப்பை வழங்குவதும் மிகவும் முக்கியமானதாகும். இதேவேளை இவ்வாறு மக்கள் ஜனநாயக ரீதியில் வாக்களிப்பதற்கு சுதந்திரமான தேர்தல் வாக்களிப்பை உறுதிப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். காரணம் வடக்கில் தேர்தல் பிரசார பணிகளின்போது குறிப்பிடத்தக்களவில் வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுவந்தது.

மேலும் வடக்கில் நேர்மையான தேர்தல் நடைபெறும் என்ற நம்பிக்கை இல்லை என்றும் சுதந்திரமான முறையில் தேர்தல் நடைபெறாவிடின் அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதமடைந்துவிடும் என்றும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்மை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதன்மூலம் வடக்குத் தேர்தலை சுதந்திரமானதாகவும் நேர்மையானதாகவும் நடத்துவதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் வடக்கில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் மிகவும் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடத்தப்படவேண்டும் என்பதும் மக்கள் நேரகாலத்துடன் வாக்களிப்பில் கலந்துகொண்டு தமது வாக்கை பதிவு செய்வதும் அவசியம்.

கடந்தகால துயரங்களை மறக்க முடியாதவர்களாகவும் எதிர்காலம் குறித்து நிறைந்த ஏக்கங்களுக்கு மத்தியிலும் வாழ்ந்துவரும் வட பகுதி மக்கள் தங்கள் அரசியல் பலத்தையும் ஒற்றுமையையும் காட்டக்கூடிய வகையில் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை வெறுமனே நழுவவிடக்கூடாது. அந்த வகையில் எவரேனும் வாக்களிக்கத் தவறுவார்களேயானால் அது அவர்களின் உரிமையை இழப்பதற்கான ஆரம்பமாகவே இருக்கும் என்பதனை மறந்துபோகக்கூடாது. எனவே மக்கள் தாம் விரும்பும் உண்மையான பிரதிநிதிகளை தெரிவு செய்ய முன்வரவேண்டும்.

## மாஓ சேதுங்கிடமிருந்து தமிழ் அரசியல் கட்சிகள் அறிய வேண்டியவை

### சீனக் கம்யூனிச கட்சியின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி எழுதப்பட்டுள்ள கட்டுரை

1

1894 ஆம் ஆண்டு சீன,யப்பான் யுத்தம் தொடங்கியபோது சீனா துண்டாடப்படப் போகின்றது என்பதை உணர்ந்தவர்கள் 'ஐயோ! சீனா அழியப்போகின்றதே' என்ற அபாயச் செய்தியைப் பரப்பினர். அதனை ஏற்ற மாஓசேதுங்கின் அரசியல் வழிகாட்டலே இன்று சீனாவை உலகின் ஏகாதிபத்திய முதலாளித்துவ பொதுவுடமை வல்லரசாக்கி உள்ளது. அதேபோல ஒரு நிலையே இன்று வடக்கு கிழக்கில் ஈழத்தமிழர்களில் ஏற்பட்டு உள்ளது. எனவே தமிழ்க்கட்சிகள் மாசேதுங் வழிகாட்டலை மீட்டிப்பார்க்க வேண்டும்.

நாம் பொதுமக்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். கட்சி மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இவை இரண்டு ஆதாரக் கோட்பாடுகள், இந்தக் கோட்பாடுகளில் நாம் சந்தேகம் கொண்டால் நம்மால் ஒன்றையுமே சாதிக்க முடியாது.

ஒரு மகத்தான புரட்சி இயக்கத்துக்கு வழிகாட்டும். எந்த ஒரு அரசியல் கட்சியும் புரட்சிகர தத்துவம் , வரலாற்று அறிவு , நடைமுறை இயக்கம் பற்றிய ஓர் ஆழ்ந்த விளக்கம் ஆகியவற்றைப் பெற்றிராவிட்டால், அதை வெற்றிக்கு வழி நடத்துவது சாத்தியமாகாது.

சிறந்த ஒரு வாழ்வை உத்தரவாதம் செய்வதும், பொருளாதாரத்திலும், கலாசாரத்திலும் பின் தங்கிய தமது நாட்டை வளங்கொழிக்கும், பலமும் உயர்ந்த கலாசாரத் தரமும் உடைய ஒரு நாடாக மாற்றுவதும் ஒரு கடினமான கடமையாகும். இந்தக் கடமைக்கு மேலும் திறமையாகத் தோள் கொடுத்து, உன்னத இலட்சியங்களால் உந்தப்பட்டு, சீர்திருத்தங்களை நிறைவேற்றும் திடசித்தமுடைய கட்சிக்கு வெளியேயுள்ள எல்லாருடனும் நன்றாக வேலை செய்யக்கூடியவர்கள் ஆக வேண்டுமானால், நாம் இன்று மாத்திரமல்ல , எதிர்காலத்திலும் சீர் செய் இயக்கங்களை நடத்த வேண்டும். இடைவிடாது தவறானவை எல்லாவற்றையும் நம்மிடமிருந்து நீக்க வேண்டும். இதை தமிழ் அரசியல் கட்சிகள் கருத்தில் எடுக்கவேண்டும்.

கொள்கை என்பது ஒரு புரட்சிகரக் கட்சியின் சகல நடைமுறை நடவடிக்கைகளினதும் தொடக்கப்புள்ளி. அது கட்சி நடவடிக்கைகளின் வளர்ச்சிப் போக்கிலும், இறுதி விளைவிலும் தன்னைத் தானே வெளிப்படுத்துகிறது. ஒரு புரட்சிகரக் கட்சி எந்த ஒரு நடவடிக்கையை எடுக்கும்போது, ஒரு கொள்கையை அமுல்படுத்துகின்றது. ஒரு குறிப்பிட்ட கொள்கைகளை உணர்வு பூர்வமாக கடைப்பிடிக்காவிட்டால் அவை கண்மூடித்தனமாக அமுல்படுத்தப்படுகின்றது. ஒரு கொள்கை அமுல்படுத்தப்பட்டு நடந்தால் அதன் வளர்ச்சிப்போக்கையும், இறுதி விளைவையுமே நாம் அனுபவம் என்று கூறுகிறோம்.

வர்க்கங்கள் போரிடுகின்றன: சில வர்க்கங்கள் வெற்றியடைகின்றன. சில வர்க்கங்கள் ஒழிக்கப்படுகின்றன. இத்தகையது தான் ஆயிரமாயிரம் ஆண்டு கால நாகரீகத்தின் வரலாறு. இந்தக் கண்ணோட்டத்திலுருந்த வரலாற்றை விளக்குவது வரலாற்றியல் பொருள் முதல் வாதம்: இந்தக் கண்ணோட்டத்திற்கு எதிராக நிற்பது வரலாற்றியல் கருத்து முதல் வாதம்.

வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராகவோ வாழ்கின்றார்; ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.

சமுதாய மாற்றங்கள் பிரதானமாகச் சமுதாயத்தில் காணும் அக முரண்பாடுகளின் வளர்சியால் அதாவது, உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்குமிடையிலான முரண்பாடு, வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடு, பழமைக்கும் புதுமைக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியால் ஏற்படுகின்றன. பழைய சமுதாயத்தின் இடத்தில் புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் உந்து சக்தியாக விளங்குகின்றது.

எதிரி தானாகவே அழிய மாட்டான். பிற்போக்குவாதிகளோ அல்லது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகளோ [illegible] வரலாற்று அரங்கிலிருந்து சுயமாக இறங்க மாட்டார்கள். இந்த உண்மை தமிழர்களைப் பொறுத்தவரை மிகவும் உண்மையானதாகும்.

அவை உண்யையான பகைவர்களைத் தாக்குவதற்கு உண்மையான நண்பர்களை ஐக்கியப்படுத்தத் தவறியதேயாகும். புரட்சிகரக் கட்சி என்பது பொதுமக்களின் வழிகாட்டி. அது பொது மக்களை தவறான பாதையில் வழிநடத்தினால், புரட்சி என்பது தோல்வி அடையாமல் இருக்க முடியாது. மக்களை நாம் தவறான பாதையில் இட்டுச் செல்லாமல், நமது புரட்சியின் நிச்சய வெற்றியை உத்தரவாதம் செய்ய வேண்டுமானால், நாம் உண்மையான விரோதிகளைத் தாக்குவதற்கு உண்மையான நண்பர்களையும் ஐக்கியப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

எங்களை பொறுத்தவரையில், ஒரு தனிநபர், ஒரு அரசியல்கட்சி, ஒரு படை அல்லது ஒரு கல்வி நிலையம் எதிரியால் தாக்கப்படாவிட்டால், அது தீயது. ஏனென்றால் அது எதிரியின் மட்டத்துக்கு நாம் தாழ்ந்து விட்டோம் என்று உண்மையில் அர்த்தமாகும். நாம் எதிரியால் தாக்கப்பட்டால் அது சிறந்தது. காரணம் எதிரிக்கும் நமக்கும் இடையில் நாம் ஒரு தெளிவான எல்லைக்கோட்டை வரைந்துள்ளோம் என்பதை அது நிரூபிக்கின்றது.

(தொடரும்)

டாக்டர். சி. யமுனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டாலினுக்கு புதிய பதவி கொடுக்கப்படும் வாய்ப்பு பொதுக்குழு கூட்டத்தை புறக்கணிக்கும் அழகிரி?



**சென்னை:**
கோவையில் இடம்பெறவிருக்கும் தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் மு.க. ஸ்டாலினுக்கு புதிய பதவி கொடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அது குறித்து அதிருப்தி அடைந்துள்ள மத்திய அமைச்சர் மு.க. அழகிரி பொதுக்குழுவில் கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோவையில் எதிர்வரும் 23 ஆம் 24 ஆம் திகதிகளில் தி.மு.க.வின் தலைமைச்செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. இந்தக் கூட்டம் திருப்பூருக்கு மாறலாம் என்றும் கூறப்படுகிறது.

சட்டசபை தேர்தலின் பின்னர் இடம்பெறும் முதல் பொதுக்குழு கூட்டம் இது என்பதால் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

2ஜி ஊழல் வழக்கில் சிக்கி தி.மு.க. பெரும் நெருக்கடியில் உள்ளது. தலைவர் கருணாநிதியின் மகளும், எம்.பி.யுமான கனிமொழி திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தயாநிதி மாறனும் 2ஜி ஊழல் புகாரில் சிக்கி தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். தற்போது தினமும் குறைந்தது ஒரு தி.மு.க. நிர்வாகியாவது நில மோசடி புகாரில் சிக்குகிறார்.

இத்தனை நெருக்கடிகளுக்கு இடையே இந்த கூட்டம் நடக்கவிருப்பதால் அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் கட்சியை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது. மாவட்டம், மாநகரம், நகரம், ஒன்றியம் என்று இருக்கும் கட்சி அமைப்பை மாற்றி மக்களவை, சட்டப்பேரவைக் குழுக்கள் என்று அமைப்பது குறித்து விவாதிக்கப்படுகிறது.



இந்த கட்சி அமைப்பை மாற்றுவதற்கு கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஒரு சில மாவட்டச் செயலாளர்கள் முறையாக செயற்படவில்லை என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் கட்சி அமைப்பை மாற்றக்கூடாது என்று கட்சியினர் கூறுகின்றனர்.

கட்சி அமைப்பை மாற்றினால் மாவட்டச் செயலாளர்களின் அதிகாரம் பறிபோய் விடும் என்பதால் மாவட்டச் செயலாளர்கள் தொகுதி குழுக்கள் அமைக்க எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.


இந்த பொதுக்குழு கூட்டத்தில் கட்சியின் பொருளாளர் மு.க. ஸ்டாலினுக்கு புதிய பொறுப்புகள் கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இதை மத்திய அமைச்சரும், தென்மண்டல அமைப்புச் செயலாளருமான அழகிரி ஏற்கவில்லை என்று தெரிகிறது.

இந்நிலையில் கோவையில் நடைபெறவிருக்கும் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று அழகிரி தனது ஆதரவாளர்களை கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

அதே போல அழகிரியும் இக் கூட்டத்தைப் புறக்கணிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## சாயி பாபாவின் பெங்களூர் ஆசிரமத்திலும் பெறுமதியான ஆபரணங்கள்



**பெங்களூர்:**
பெங்களூர் ‘வயிட் பீல்ட்’ பகுதியில் உள்ள சத்திய சாயி பாபா ஆசிரமத்திலிருந்து நேற்று முன்தினம் சுமார் 5 கோடி ரூபா மதிப்புள்ள தங்க, வெள்ளி ஆபரணங்களும், பணமும் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்து.

புட்டபர்த்தி சாயிபாபா இறந்த பிறகு, பிரசாந்தி ஆசிரமத்தில் அவர் தங்கியிருந்த யஜூர் மந்திரில் சோதனை நடத்தப்பட்டதில் ரூ.59 கோடி மதிப்புள்ள ஆபரணங்களும், பணமும் கிடைத்தன. இந்நிலையில், சாயிபாபா மற்ற இடங்களில் தங்கும் ஆசிரமங்களிலும் ஆபரணங்கள் மற்றும் பணக்குவியல்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்தது.


இதனைத்தொடர்ந்து பெங்களூர் அருகே உள்ள ‘வயிட் பீல்ட்’ பகுதியிலுள்ள சாயி பாபாவின் ஆசிரமத்தில் அவர் தங்கும் அறைகளை கர்நாடக, ஆந்திர பொலிஸார் சோதனை நடத்தினர்.

பிருந்தாவனம் என்று பெயர் கொண்ட இப்பகுதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மாவட்ட கலெக்டர் ஜயப்பன், துணை பொலிஸ் ஆணையாளர் ஹர்ஷா, தாசில்தார் சிவக்குமார், சாயிபாபா அறக்கட்டளை நிர்வாகிகள் ரத்னாகர், வினய்குமார் ஆகியோரும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சோதனை நடவடிக்கையின் போது அங்கிருந்து 6.09 கிலோ தங்கம், 245.36 கிலோ வெள்ளி, விலை உயர்ந்த கற்கள் மற்றும் ரூ.80 இலட்சம் பணம் கிடைத்ததாகவும் இவற்றின் மதிப்பு சுமார் 5 கோடி ரூபாவாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பிருந்தாவனம் ஆசிரமத்தில் பல ஆண்டுகளாக பூட்டப்பட்டுள்ள ஒரு சில அறைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. ஆனால் அங்கு குறிப்பிடத்தக்க வகையில் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

7 மணி நேர சோதனையில் மீட்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் சூட்கேஸ் மற்றும் பெரிய பெட்டிகளில் வைத்து சீல் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவற்றை காடுகோடியில் உள்ள கனரா வங்கி லொக்கரில் அதிகாரிகள் வைத்தனர்.



இந்தியாவிற்கு வருகை தந்திருந்த அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டன் சென்னை கலாசேத்திராவில் இடம்பெற்ற நடன நிகழ்வினை கண்டுகளித்த பின்னர் அதில் பங்கேற்றிருந்த கலைஞர்களுடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## சத்தீஸ்கரில் நக்சலைட்டுகள் தாக்குதல் காங்கிரஸ் தொண்டர்கள் 8 பேர் பலி

**ராய்ப்பூர்:**
சத்தீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்ட்கள் நடத்திய கண்ணி வெடி தாக்குதலில் 8 காங்கிரஸ் தொண்டர்கள் பலியாகியுள்ளனர்.

ராய்ப்பூர் மாவட்டத்தில் உள்ள அரமோராவில் நேற்றுமுன்தினம் விவசாயிகள் பேரணி நடந்தது. இதில் கலந்து கொள்ள ராய்ப்பூரிலிருந்து சத்தீஸ்கர் காங்கிரஸ் குழு தலைவர் நந்த் குமார் பட்டேல் தலைமையில் ஏராளமான காங்கிரஸார் 25 வாகனங்களில் சென்றனர்.

பேரணியை முடித்துக் கொண்டு அவர்கள் இந்தகான் மற்றும் உதாந்தி இடையே சென்றபோது அங்கு மறைந்திருந்த மாவோயிஸ்ட்கள் கண்ணி வெடி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதல் நேற்றுமுன்தினம் மாலை 6 மணி அளவில் நடந்துள்ளது. இதில் 8 காங்கிரஸ் தொண்டர்கள் பலியானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாநாயகர்...(தொடர்ச்சி)

பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் 57 ஆவது ஆண்டு மாநாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் நேற்று லண்டன் பயணமானார்கள்.

பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் 57 ஆவது ஆண்டு மாநாடு இன்று 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை லண்டன் நகரில் நடைபெறவுள்ளது.

இரண்டாம் எலிசபத் மகாராணியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் 53 நாடுகளின் சிரேஷ்ட அரசியல்வாதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி. சில்வா, மஹிந்த சமரசிங்க, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

மேலும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல்கொட மற்றும் பிரதி செயலாளர் நாயகம் டப்ளியு. பி.டி. தசநாயக்க ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

ஜனநாயகத்தை பலப்படுத்தல் என்பதே இம்முறை மாநாட்டின் கருப்பொருளாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த மாநாட்டில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் அடுத்த தலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் பிரதி போஷகராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளார் என்றும் அடுத்த மாநாடு 2012 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்குகள்...(தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கட்சி பிரதிநிதிகளின் கூட்டத்தொடரிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை 23 ஆம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு வாக்கு எண்ணும் பணிகளுக்காக, அங்கு வருகை தரும் வெளிமாவட்ட அதிகாரங்களை நிறுத்த வேண்டும். அதேவேளை தமிழ் மொழி தெரிந்த அதிகாரிகளை இந்தப் பணியில் ஈடுபடுத்தவும் வேண்டும்.

மேலும் தேர்தலை முன்னிட்டு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்காக தற்காலிக அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்ற இப்பணியானது இடை நிறுத்தப்படக் கூடாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தேர்தல்...(தொடர்ச்சி)

எதிரணியின் சுவரொட்டிகள் யாழில் வெகுவாக பிரகாசிக்காத போதிலும் வீடுகள், கட்டிடங்கள் மற்றும் பொது இடங்களில் மதில்களை முழுமையாக மறைத்து ஒட்டப்பட்டிருந்த ஆளும் தரப்பின் சுவரொட்டிகளே நேற்று மாலை வரையிலும் அகற்றப்படாத நிலையில் அவ்வாறே இருந்தன.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் முக்கியமான இடங்களில் ஏனைய கட்சிகளின் சுவரொட்டிகள் வெகுவாக காட்சியளிக்கவில்லை. ஒருசில குறுக்கு வீதிகளிலேயே ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான சுவரொட்டிகளை காணக்கூடியதாக இருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கும் வகையில் கறுப்பு வெள்ளை சுவரொட்டிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஒட்டப்பட்டிருந்தன.

எனினும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஆதரித்து வெற்றிலையின் மேல் புள்ளடியிட்ட நீல நிறத்தினாலான சுவரொட்டிகள் வீடுகள், கட்டிடங்கள் மற்றும் பொது இடங்களில் மதில்களை முழுமையாக மறைத்து ஒட்டப்பட்டிருந்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பஷில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் உருவப்படங்கள் தாங்கிய சுவரொட்டிகளே இவ்வாறு மதில்களை மறைத்து ஒட்டப்பட்டிருந்தன. அந்த சுவரொட்டிகளில் 'அபிவிருத்திக்கும் அரசியல் தீர்விற்கும் இணைந்த கரங்கள் ' என்ற வாசகமும் பொறிக்கப்பட்டிருந்தன.

தேர்தல் பிரசாரத்திற்கான சுவரொட்டியாக இல்லாத போதிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் திட்டங்களையும் மக்களுக்கு எடுத்தியம்பும் வகையில் வீதி அபிவிருத்தி உங்களுக்காக, விளையாட்டு மைதானம் உங்களுக்காக, மீன்பிடி வசதிவாய்ப்புகள் உங்களுக்காக, கல்விச்செல்வம் உங்களுக்காக, பாடசாலைகள் உங்களுக்காக, மின்சாரம் உங்களுக்காக, தொழில்நுட்பம் உங்களுக்காக உள்ளிட்ட வாசங்கள் அடங்கிய சுவரொட்டிகள் படங்களுடன் ஒட்டப்பட்டிருந்தன.

தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் வாக்களிப்பு தினத்திற்கு 48 மணிநேரத்திற்கு முன்னதாக நிறைவுக்கு கொண்டுவரப்படும் அதேவேளை தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தப்படும் சுவரொட்டிகள் யாவும் ஏனைய பிரதேசங்களில் முழுமையாக அகற்றப்படும் எனினும் வடக்கில் நேற்று வியாழக்கிழமை மாலை வரையிலும் அகற்றப்படாமலும் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கூட்டமைப்பு...(தொடர்ச்சி)

இத்தருணத்தில் தமது உணர்வுகளை தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தி அரசினது பொய் முகத்திரையைக் கிளித்தெறிய வேண்டும். இத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்துச் சரியான தீர்ப்பை வழங்குவதன் மூலமே எம்மை நோக்கி நெருங்கிவரும் உலகுக்கு நாம் வலுவூட்டக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார். வடமராட்சி தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கலை அரங்கில் இடம்பெற்ற பருத்தித்துறை நகர சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே இவ்வாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை நகர சபை வேட்பாளர் சட்டத்தரணி சபா. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் சரவணபவன் எம்.பி. மேலும் பேசுகையில் கூறியதாவது-

இத் தேர்தலில் தமிழ் மக்கள் மிக நிதானமாகவும் அவதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும். இங்குள்ள மொத்த வாக்குகளில் 7 ஆயிரம் வாக்குகளைப் பெறும் விதத்தில் மக்கள் வாக்களித்து 9 உறுப்பினர்கள் கொண்ட இச் சபை கூட்டமைப்பு சார்பில் அனைத்து உறுப்பினர்களையும் நாம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த ஆதரவினால்தான் அரசுக்கு எம்முடன் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப் பேச்சுவார்த்தையில் தற்போது நழுவல் போக்குக் காணப்படுகிறது. அதனை நியாயப்படுத்துவதற்காக இத் தேர்தலில் அரசு வெற்றியடைய முயற்சிக்கின்றது.

இலங்கை மீது உலக நாடுகள் போர்க் குற்றத்தைச் சுமத்தியுள்ளன. இப் போர்க்குற்றத்தின் தாற்பரியங்களை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இவ்வறிக்கையை பொய்யானதாக மாற்றுவதற்கு அரசு முயற்சிக்கின்றது. போர்க் குற்ற அறிக்கையை பொய்யாக்குவதற்கு ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற சிங்களப் பேரினவாதக் கட்சிகள் முனைந்து வருகின்றன. இவ்விடயத்தில் ஐ.தே.க. வும் தனது சுயரூபத்தைக் காட்டி அரசுக்கு ஆதரவளிக்க முனைகின்றது. இந்த முனைப்பை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் மேற்கொண்டுள்ளார். இதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க தமிழருக்கு எதிரான இனவாதி என்பதை நிரூபித்துள்ளார்.

இறுதிக்கட்டப் போரில் மரணித்த 40 ஆயிரம் ஆன்மாக்களுக்கும் நாம் செய்கின்ற கைமாறு வாக்குப் பலத்தின் மூலம் அரசைத் தோற்கடிப்பதேயாகும். இதனை தக்கமுறையில் பயன்படுத்தவேண்டும்.

இந்த அரசினால் அழிக்கப்பட்ட கட்டடங்கள், வீதிகள், சுண்ணாம்பு பூசி தார் போட்டு போலியாக புனரமைக்கப்பட்டு திறந்து வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எம்மை ஏமாற்றி வருகின்றார். யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி எல்லாம் தருவேன் எனக் கூறிய போதிலும் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து எதுவும் சொல்லவில்லை எனக்கூறினார்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அ. விநாயகமூர்த்தி, சி. ஸ்ரீதரன், புளொட் தலைவர் த. சித்தார்த்தன், தமிழரசுக் கட்சிச் செயலாளர் சி.வி.கே. சிவஞானம், வி.ஜி. தங்கவேல் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

நகர சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

## வடக்கில்...(தொடர்ச்சி)

வாக்களிப்பிற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாக யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

வெற்றிலை சின்னத்தில் போட்டியிடும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, யானை சின்னத்தில் போட்டியிடும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, வீடு சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மணி சின்னத்தில் போட்டியிடும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகிய கட்சிகளே ஏட்டிக்கு போட்டியாக சூறாவளி பிரசாரங்களை முன்னெடுத்தன.

ஆளும் தரப்பின் வெற்றிக்காக பிரசார பீரங்கிகளாக செயற்பட்ட அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் ஆளும் தரப்பு எம்.பி.க்கள் சிலர் தங்களுடைய பிரசாரங்களை நிறைவுசெய்துகொண்டு தெற்கிற்கு திரும்பிவிட்டனர். இந்நிலையில் வாக்களிப்பு நிலையங்களாக செயற்படுகின்ற பாடசாலைகள் மட்டுமல்லாது யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைகளில் அதிர்பர், ஆசிரியர்கள் ஈடுபடுவதுடன் வாக்களிப்பு நிலையங்களாக செயற்படும் பாடசாலைகளை தயார்படுத்தும் நோக்கிலேயே பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை தேர்தல் நடைபெறுகின்ற பிரதேசங்களிலுள்ள மது பானக் கடைகள் யாவும் நாளை சனிக்கிழமை மூடப்படும் என்று கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கில் யாழ். மாவட்டத்தில் வல்வெட்டித்துறை நகர சபைக்கு 12 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 5,500 பேரும், பருத்தித்துறை நகர சபைக்கு 12 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 7,376 பேரும், சாவகச்சேரி நகர சபைக்கு 15 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 10,987 பேரும் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றுள்ளனர்.

காரைநகர் பிரதேச சபைக்கு 07 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 8,140 பேரும், ஊறுகாவற்றுறை பிரதேச சபைக்கு 07 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 6,349 பேரும், நெடுந்தீவு பிரதேச சபைக்கு 12 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 3,082 பேரும் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, வேலணை பிரதேச சபைக்கு 19 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 12,028 பேரும், வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு 19 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 30,214 பேரும், வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு 27 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 63,224 பேரும், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைக்கு 21 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 31,022 பேரும் இம்முறை வாக்களிப்பதற்கு தகுதிபெற்றுள்ளனர்.

அத்துடன் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு 21 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 32,857 பேரும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு 27 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 46,570 பேரும், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு 24 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 32,565 பேரும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு 12 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 25,348 பேரும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு 20 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 37,015 பேரும், நல்லூர் பிரதேச சபைக்கு 16 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 27,012 பேரும் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 12 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 7,116 பேரும், கரைச்சி பிரதேச சபைக்கு 25 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு 42,800 பேரும் பூநகரி பிரதேச சபைக்கு 13 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 11,301 பேரும் என கிளிநொச்சி மாவட்டத்தில் 61217 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் இம்முறை வாக்களிப்பு நடத்தப்படவிருப்பதுடன் இரு மாவட்டங்களிலும் 19 சபைகளுக்கு மொத்தமாக 1169 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 4 இலட்சத்து 35ஆயிரத்து 557 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர் இவர்களுக்கென 459 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிறைவடைந்ததன் பின்னர் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் முதலாவது பெறுபேற்றை உத்தியோகபூர்வமாக வெளியிடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் முதலாவதாக தபால் மூலமான வாக்குகளே எண்ணப்படும் என்றும் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

தேர்தல் பெறுபேறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றிருந்தால் அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்களிப்பு முழுமையாக இரத்து செய்யப்படும் என்பதுடன் தேர்தல் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தாமதம் ஏற்படும் என்றும் செயலகம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய கூந்தல்



கூந்தலைப் பற்றி பல காப்பியங்களிலும் இதிகாசங்களிலும் அதிகம் பேசப்படுகிறது. நீண்ட தலைமுடியை கூந்தல் என அழைக்கிறோம். நீண்ட கூந்தலை விரும்பாத பெண்கள் எவரும் இருக்க முடியாது. நம் முன்னோர்களில் ஆண்களும் பெண்களும் பாரபட்சமின்றி கூந்தல் வளர்த்தனர். நாகரிகம் வளர வளர இன்று பெண்கள் கூட கூந்தலை கத்தரித்துவிட்டு மிகக் குறைந்த அளவே முடிவைத்துக் கொண்டுள்ளனர். இன்றைய நவின இரசாயனம் கலந்த உணவுகள் மற்றும் பருவ மாற்றங்களால் நீண்ட கூந்தல் என்பது சில பெண்களுக்கு கனவாக அமைந்துவிடுகிறது.

### பொடுகு என்றால் என்ன?

கூந்தலை வளர்ப்பது பெரிதல்ல... அதைப் பராமரிப்பதுதான் மிகவும் கஷ்டமான விஷயம். சிலர் முடி உதிர்வதால் பெரிதும் மனவேதனைக்கு ஆளாகியிருக்கின்றனர். பகட்டு விளம்பரங்களில் வரும் இரசாயனக் கலவையான ஷம்போக்களை ப் பயன்படுத்தி சிலர் மேலும் முடிகளை இழக்கின்றனர்.

முடி உதிர்வதைத் தடுக்கவும் நீண்ட நெடிய கூந்தலைப் பெற பொடுகின் தொல்லை இல்லாமல் இருப்பது அவசியம். பொடுகினால் தான் அநேக பேருக்கு முடி உதிர்கிறது. தலையில் அரிப்பு இருந்தாலே பொடுகு இருக்கிறது என்று உணர்ந்து கொள்ளலாம்.

பொடுகு என்பது ஒருவகை நுண்ணிய காரணிகளால் தலையில் உண்டாகும் நோய். இந்த நோய் தாக்கினால் தலையில் அரிப்பு ஏற்படும். அந்த அரிப்பு உள்ள இடத்தை சொரிந்தால் தவிடு போல் தலையிலிருந்து உதிரும். பின் அரிப்பானது தலை முழுவதும் பரவி சொரியச் செய்துவிடும். அந்த இடங்கள் வெண்மையாய் சாம்பல் பூத்தது போல் தோன்றி முடி உதிர ஆரம்பிக்கும். பொடுகு எல்லாக் காலங்களிலும் இருக்குமென்றாலும் மழை மற்றும் பனிக்காலங்களில் தான் அதிகம் காணப்படும். இந்த காலகட்டத்தில் பொடுகை அடியோடு ஒழித்துக்கட்ட இங்கே நிறைய முறைகளைப் பின்பற்றி பயனடையுங்கள்.

### பொடுகு வராமல் தடுக்க

வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்.

சோற்றுக்கற்றாழை தேய்த்தும் குளிக்கலாம்.

நெய், பால், வெண்ணெய் முதலிய கொழுப்பு சத்து நிறைந்த உணவுகளை சாப்பிடலாம். இந்த கொழுப்பு சத்துள்ள உணவுகளால் தோலுக்குத் தேவையான எண்ணெய் பசை கிடைக்கிறது. இதனால் பொடுகு கிருமிகளின் தாக்கத்திலிருந்து முடிகளைக் காப்பாற்றலாம்.

தொடரும்)

# வேர்கடலை போண்டா

போண்டா சாப்பிட ஆசையா இருக்கு.. ஆனா கடலைமா ஒத்துக்காது. அஜீரணத்தொல்லையால அவதிப்பட வேண்டியிருக்குமே என அலுத்துக்கொள்கிறவரா நீங்கள்.. இதோ இந்த சத்தான வேர்க்கடலை போண்டா



### தேவையான பொருட்கள்:

- வறுத்த வேர்கடலை - ஒரு கப்
- முந்திரி பருப்பு - அரை கப்
- பாண் துண்டுகள் - 2 கப்
- பால் - ஒரு கப்
- வெங்காயம் - ஒன்று
- பச்சை மிளகாய் - 4
- இஞ்சி - ஒரு சிறிய துண்டு
- கறிவேப்பிலை, கொத்தமல்லி - சிறிதளவு
- உப்பு - தேவையான அளவு
- பொரிப்பதற்கு எண்ணை - சிறிதளவு

### செய்முறை:

கரகரப்பாக அரைத்து எடுக்கவும்.

பிரட் துண்டுகளை உதிர்த்து, கறிவேப்பிலை, கொத்தமல்லி சேர்த்து, பால் விட்டு கெட்டியாகப் பிசையவும். தேவையான உப்பைக் கடைசியாகச் சேர்த்து நன்கு கலக்கவும்.

கடாயில் எண்ணை ஊற்றி நன்கு காய்ந்ததும், செய்துவைத்திருக்கும் கலவையை போண்டாக்களாக கிள்ளி எண்ணையில் போடவும்.

நன்கு சிவந்து மொறு, மொறுப்பானதும் வடிகட்டியில் போடவும். பின்னர் ஒருதட்டில் வைத்து சூடாகப் பரிமாறவும்.

***குறிப்பு : கடலை மாவு சேர்க்காததால் குழந்தைகள், பெரியவர்கள் என எல்லாருக்குமே கொடுக்கலாம்.***

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117,புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்ப கல்வியில் முன்னணி வகிக்கும் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம்




(அதிபர்) முருகேசு முரளிதரன்

யாழ். நகரில் ஆனைப்பந்தியில் நெருக்கமான குடியிருப்புக்களின் மத்தியில் அமைந்துள்ளது யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம். யாழ்ப்பாண கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி வளர்ச்சியில் முன்னணி வகிக்கும் பாடசாலைகளில் இவ் வித்தியாலயம் சிறப்பிடம் பெறுகின்றது. பொருளாதார வசதி குறைந்த மாணவர்களின் கல்விப் பெறுபேற்று விருத்திக்காக அரிய பணியை இக் கல்விக் கூடம் ஆற்றிவருகின்றது.

ஏறத்தாழ 175 வருடங்களுக்கு முன் இப் பிரதேச கல்வி வளர்ச்சிக்காக மெதடிஸ்த மிஷனரியினால் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலை ஆரம்பத்தில் மெதடிஸ்த மிஷன் பாடசாலை என்ற பெயரில் வண்ணை பெருமாள் ஆலயத்திற்கு முன்னால் சன்மார்க்க வித்தியாலயத்திற்கு அருகில் இயங்கி வந்ததாக கூறப்படுகின்றது. 1932-1946 ஆண்டுகளில் இந்து போர்ட்டிடற்கும் மெதடிஸ்த மிஷனிற்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டிற்கு இணங்க ஆனைப்பந்தி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை யாழ். சன்மார்க்க வித்தியாலயத்துடன் இணைந்து பாடசாலை கட்டுவதற்கு காணி ஒன்றை வழங்கியது. ஆனைப்பந்தி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை இயங்கிய இடத்திற்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை மாற்றப்பட்டது. அக்காலத்தில் இப்பாடசாலையில் 8 ஆம் வகுப்பு வரை வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன. எனினும் 1972 முதல் 5 ஆம் வகுப்பு வரையே வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளது.

நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இப்பாடசாலையை 1962 ஆம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது.

இவ் வித்தியாலயம் ஆறரைப்பரப்புக்காணியில் அமைந்துள்ளதுடன் 1976 ஆம் ஆண்டு வரை செங்கல் கட்டிடமாகவும், கிடுகு வேய்ந்த கூரையுடனும் இருந்துள்ளது. 1976, 1978 மற்றும் 1979 இல் வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

1999 ஆண்டின் பின் மின்னிணைப்பு பெறப்பட்டதுடன் ஆசிரியர் அறை, சிறுவர் பூங்கா, நீர்த்தாங்கி, செயற்பாட்டறை, மலசலகூடம், மகாகணபதி கோவில், வாசல் அலங்கார பெயர் வளைவு, பூந்தோட்டம் மற்றும் சரஸ்வதி சிலை என்பனவும் அமைக்கப்பட்டன.

2008 ஆம் ஆண்டில் பாடசாலை வளவில் மழை நீர் தேங்காது வெளியேற நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கலையரங்கம் அமைக்கப்பட்டு பான்ட் வாத்திய கருவிகளும் வழங்கப்பட்டன. இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களாக 1943 ஆம் ஆண்டு முதல் எ.பி. தம்பிராசா, 1947 இல் ஜே. கே. செல்லத்துரை தொடர்ந்து ஆர். கே . தியாகராசா, ஜி. எம். செல்லத்துரை, ப. முருகேசு, த. ராஜேந்திரம் , வே. குலசேகரம், பொன்னம்பலம், நா. கந்தையா, எஸ். பரமானந்தம், க. கைலாயபிள்ளை, இ. தங்கராசா, கே. கணேசன் மற்றும் நயினை எஸ். சோமேஸ்வரபிள்ளை ஆகியோர் கடமையாற்றியுள்ளார்கள்.

2007 ஆண்டு முதல் முருகேசு முரளிதரன் என்பவர் தற்போதும் அதிபராக கடமையாற்றி வருகின்றார். இப்பாடசாலையில் 315 மாணவர்கள் கல்வி கற்க 12 ஆசிரியர்களும் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ்வித்தியாலய மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மிகத்திறமையாக செயற்பட்டுவருகின்றார்கள். விளையாட்டுப்போட்டிகள் மற்றும் தமிழ்த்தின போட்டிகளிலும் பங்குபற்றி சிறந்த இடங்களையும் பெற்றுவருகின்றார்கள். குறிப்பிட்டளவு மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வருகின்றார்கள்.

நல்லூர் கோட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வருடாந்தம் அதிகளவான மாணவர்கள் சித்தியடையும் பாடசாலைகளில் இக்கல்விக் கூடமும் ஒன்றாகும். 2006 ஆம் ஆண்டில். 10 பேரும் , 2007இல் 10 பேரும் , 2008 இல் 17 பேரும் , 2009 இல் 15 பேரும் , மற்றும் 2010 இல் 7 பேரும் சித்தியடைந்துள்ளமையினைக் குறிப்பிடமுடியும்.

மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவருவதற்கு ஏற்றவாறு கற்பித்தல் செயற்பாடுகளில் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ் வித்தியாலயம் ‘கல்வி அறிவில் மேம்பட்ட சமுதாயத்தை உருவாக்குதல்’ என்ற நோக்குடனும் மாணவர்களுக்கான அடிப்படை அறிவை முறையாக வழங்குதல் என்ற பணிக்கூற்றுடனும் இயங்கிவருகின்றது.

இப்பாடசாலையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு ஏற்ற மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் காணப்படுகின்றது. வகுப்பறைக் கட்டடங்களின் வெளிச்சுவர்களில் சுற்றாடல் படங்கள், மற்றும் சித்திரங்களும் வரையப்பட்டுள்ளமையினை காணக் கூடியதாக உள்ளது. இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு பலரும் பலவிதமாக உதவி புரிந்து வருகின்றார்கள். இவ்வருடம் பாடசாலையின் வகுப்பறைத் திருத்தத்திற்காக வலயக் கல்வி அலுவலகத்தினால் 4 இலட்சத்து50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலையில் தற்போது பெரும் இடநெருக்கடியினை எதிர்நோக்கி வருகின்றது. மாணவர்களின் கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளினை மேற்கொள்ள வகுப்பறைகள் பற்றாக்குறையாக உள்ளது. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும் மற்றும் பிரர்த்தனைக்கும் ஏற்றவாறு பிரார்த்தனை மண்டபத்துடனான வகுப்பறைக் கட்டடம் அவசியமாகவும் அவசரமாகவும் தேவையாகவும் உள்ளது.

இவ்வித்தியாலய மாணவர்களின் விளையாட்டு திறமைகளினை வெளிக்கொண்டு வருவதற்கு ஏற்ற விளையாட்டு மைதான வசதியில்லை.

இப்பாடசாலையில் மாணவர்களுக்கு நவீன கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஏற்ற நவீன இலத்திரனியல் சாதனங்கள் இல்லை. மாணவர்களுக்கு ஏற்ற நவீன கற்றல் செயற்பாடுகளுக்கு ஏற்ற நவீன இலத்திரனியல் சாதனங்களான பல்லூடக எறியி மற்றும் கணினிகள் தேவையாகவுள்ளன. இவ்வித்தியாலயத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்கு கணினி மற்றும் போட்டோ கொப்பி இயந்திரம் என்பன தேவையாகவுள்ளது. ஆரம்ப கல்விக்கு அடித்தளமிடும் இக்கல்வி கூடத்தின் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டால் எதிர்காலத்தில் மாணவர்களின் கல்விப் பெபேறுகளில்உயர்வு ஏற்படும் என்பது திண்ணம்.



● ஞா. செந்தமிழ்ச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் மலர்

## நல் வாழ்வு

ஆசானை மதிப்போம்
ஆசானை மதிப்போம்
அன்போடு வாழ்வோம்
அன்போடு வாழ்வோம்.

நல்லதே செய்திடுவோம்
நல்லதே செய்திடுவோம்
நலமாய் நாம் வாழ
நல்லதே செய்திடுவோம்.

பெற்றாரை மதிப்போம்
உற்றரைப் பேணுவோம்
பண்புடன் வாழ்ந்து
பணிவுடன் உயர்ந்திடுவோம்.


ச. கதுஸ்ரிகா, தரம்-04
மயிலணி சைவ ம.வி

## ஹலோ மாமா


றிங் றிங் ரெலிபோன்
ஹலோ மாமா நீங்களா?
வீட்ட வாறீங்களா?
அம்மா கையில் காப்பு
அப்பா கையில் சீப்பு
குளிக்க போடனும் சோப்பு
வேண்டி வரனும் கொத்தாபூ

தி. பிரணவி
திருஞான சம்பந்தர் முன்பள்ளி
சுன்னாகம்

## பூமியை தோண்டத் தோண்ட வெப்பம் அதிகரிக்கும்



தரை மட்டத்திலிருந்து 30 மீற்றர் ஆழம் முதல் வெப்பநிலை அதிகரிக்கும். ஒவ்வொரு 300 மீற்றர் ஆழத்திற்கும் வெப்பநிலை வேகமாக அதிகரிக்கும். உதாரணமாக தங்க சுரங்கங்களில் 130 டிகிரி செல்ஸியஸ் வெப்பநிலை வரை இருக்கும். பூமியின் மையப்பகுதி சூரியனின் மையப்பகுதியை விட வெப்பநிலை அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.



ஜெ.சானுஜன்
தரம் 4
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்



# சிறந்த நட்பு

முன்னொரு காலத்தில் சோழ நாட்டைக் கோப்பெருஞ்சோழன் என்ற அரசர் ஆண்டு வந்தார். நல்லாட்சி செய்த அவர் புலமையிலும் சிறந்து விளங்கினார். புலவர்களை மதித்த அவர் வந்தவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கினார்.

இப்படி அவர் செல்வத்தை வாரி வழங்குவது அவர் மகன்களுக்குப் பிடிக்கவில்லை. பொருளாசை அவர்கள் கண்களை மறைத்தது. தந்தையை எதிர்த்துப் போர் முரசும் கொட்டினர்.

''பெற்ற மகன்களே என்னை எதிர்க்கிறார்களே... என் மானமே போய் விட்டது'' என்று கலங்கினார் அவர். மானம் அழிந்த பின் உயிர் வாழ வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தார். யார் தடுத்தும் கேளாமல் வடக்கு நோக்கி உண்ணா நோன்பிருக்கத் தொடங்கினார்.

அவரிடம் அன்பு கொண்ட பலர் அவருடன் வடக்கிருந்து உயிர் துறக்க முன்வந்தனர். இதனால் அவர் வடக்கிருந்த இடத்தில் மிகுந்த கூட்டமாக இருந்தது. சிலர் அமர்வதற்கு இடம் இல்லாம் துன்பப்பட்டனர். இந்த நிலையைப் பார்த்தார் அவர். தன் அருகே இருந்த பொத்தியாரிடம் ''என் அருமை நண்பர் பிசிராந்தையார் வடக்கிருக்க இங்கே வருவார். என் அருகே அவருக்கு ஒரு இடத்தை ஒதுக்கி வையுங்கள்!'' என்றார்.

இதைக் கேட்டு வியப்படைந்த பொத்தியார். ''அரசே நான் உங்களுடன் நீண்ட காலமாகப் பழகி வருகிறேன். பாண்டிய நாட்டுப் புலவர் பிசிராந்தையார் உங்களைச் சந்தித்ததாகவோ பழகியதாகவோ தெரியவில்லை. உங்களுக்காக அவர் இவ்வளவு தொலைவிலிருந்து வந்து வடக்கிருப்பாரா? எனக்கு ஐயமாக உள்ளது'' என்றார். 'பொத்தியாரே! நீர் சொன்னது போல நானும் பிசிராந்தையாரும் நேரில் சந்தித்தது இல்லை. பழகாமலே நாங்கள் இருவரும் நெருங்கிய நட்பு கொண்டுள்ளோம். நான் பேருடனும், புகழுடனும் இருந்த போது அவர் வராமல் இருக்கலாம். இப்போது உள்ள சூழலில் கண்டிப்பாக வருவார்!'' என்று உறுதியுடன் சொன்னார்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும் செய்தியை அறிந்தார் பிசிராந்தையார். நண்பருக்காக உயிரைவிட முடிவு செய்தார். தன் கடமையை எல்லாம் விரைந்து முடித்துவிட்டுச் சோழ நாடு வந்தார். சோழன் வடக்கிருக்கும் இடத்தை அடைந்தார்.

அதற்குள் கோப்பெருஞ் சோழன் உயிர் நீத்துவிட்டார். பலர் அங்கே வடக்கிருந்தனர். அவர்களிடம் அவர், ''நான் பிசிராந்தையார்; கோப்பெருஞ் சோழனுடன் வடக்கிருக்க வந்தேன். அதற்குள் நண்பர் உயிர் நீங்கி விட்டதே. அவரைப் பார்க்க கொடுத்து வைக்கவில்லையே'' என்று கண் கலங்கினார்.

அங்கிருந்த பொத்தியார் இதைக் கேட்டார். பிசிராந்தையாரைப் பார்த்து, ''உங்களுக்காக ஒரு இடத்தை ஒதுக்கி வைக்கச் சொன்னார் கோப்பெருஞ்சோழன். நான் ஐயப்பட்டுக் கேட்டதற்கு என் அருமை நண்பர் கண்டிப்பாக வருவார் என்றார். உங்களுக்கு உரிய இடத்தில் அமருங்கள்.நெருங்கிப் பழகாமலே உங்களுக்குள் ஏற்பட்ட ஆழந்த நட்பைப் போற்றுகிறேன்!'' என்று உணர்ச்சி பொங்கச் சொன்னார்.

இதைக் கேட்டு அங்கே இருந்தவர்கள் வியப்பு அடைந்தனர். அங்கேயே வடக்கிருந்து பிசிராந்தையாரும் உயிர் நீத்தார்.

உலகிலேயே அதிகம் இராணுவ வீரர்கள் கொண்ட நாடு சீனா. இங்கே 25 லட்சம் இராணுவ வீரர்கள் உள்ளனர். இந்தியா மூன்றாம் இடம் வகிக்கிறது இங்கு 11 லட்சத்து 30 ஆயிரம் இராணுவ வீரர்கள் உள்ளனர்.



**மனிதனுக்கு மூன்று வகையான விலா எலும்பு உள்ளது**

ஏழு ஜோடி நிஜ விலா எலும்புகள் முதுகெலும்புடன் இணைக்கப்பட்டிருக்கும். மூன்று ஜோடி போலி எலும்புகள் ஏழாவது நிஜ எலும்புடன் இணைக்கப்பட்டிருக்கும். மற்றும் இரண்டு ஜோடி எலும்புகளின் முன்பகுதி எந்த எலும்புடனும் இணைக்கப்படாமல் இருக்கும்

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம். 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து பிரதமர் கமரூனிடம் பாராளுமன்றக் குழு விசாரணை



இங்கிலாந்தை உலுக்கியுள்ள தொலைபேசி ஒட்டுகேட்பு விவகாரத்தில் பிரதமர் டேவிட் கமரூனிடம் பாராளுமன்றக் குழு விசாரணை நடத்தியது.

இங்கிலாந்தின் பழம்பெரும் பத்திரிகையான 'நியூஸ் ஒப் த வேர்ல்ட்' அந்நாட்டு அரசு அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்து பிரபலங்களின் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டதாக அடிக்கடி செய்தி வெளியாகின்றது. குற்றச்சாட்டு வெளியானதும் 168 ஆண்டு கால பத்திரிகையை அதன் நிறுவனரான ரொபர்ட் முர்டோக் மூடிவிட்டார். எனினும், ஒட்டுக்கேட்பு விவகாரம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. இதையடுத்து, விரிவான விசாரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

முர்டோச் நடத்தும் நியூஸ் கூட்டுறவு குழுமத்தை சேர்ந்த பலர் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு அரசு அதிகாரிகளுடன் இருந்த தொடர்பு தொடர்பில் தீவிர விசாரணைகள் நடைபெறுகின்றன.

இந்நிலையில், ஆபிரிக்காவிற்கு பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் டேவிட் கமரூன் அவசரமாக லண்டன் திரும்பினார். நியூஸ் ஒப் த வேர்ல்ட் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஆண்டி கவுசனை அரசு பதவியில் அமர்த்தியதால் தொலைபேசி ஒட்டுக்கேட்பு நடந்திருக்கலாம் என்று கமரூன் மீதும் புகார் எழுந்துள்ளது. இதுபற்றி கமரூனிடம் பாராளுமன்றக் குழு விசாரணை நடத்தியது. அப்போது இது விடயத்தில் தவறு நடக்கவில்லை என்று கமரூன் மறுத்தார்.

# கென்யாவிற்கு கடத்தி கொண்டுவரப்பட்ட 5 தொன் யானைத்தந்தங்கள் தீயிட்டு அழிப்பு



சட்டவிரோதமாக வேட்டையாடப்பட்டு கென்யாவிற்குக் கடத்திகொண்டுவரப்பட்ட 5 தொன் யானைத் தந்தங்கள் தீயிட்டு அழிக்கப்பட்டன. சிங்கப்பூர், தன்சானியா ஆகிய நாடுகளிலிருந்து சட்டவிரோதமாக சுமார் 5 தொன் யானை தந்தங்கள் கென்யாவிற்கு கொண்டுவரப்பட்டன. இவற்றினை அந்நாட்டு பொலிசார் கைப்பற்றினர். அவற்றை மொத்தமாக அடுக்கிவைத்து தீயிட்டு கொளுத்தும்படி அந்நாட்டு ஜனாதிபதி மிவாய் கிபாகி உத்தரவிட்டார்.

சிங்கப்பூர், தன்சானியா, மாலாவி ஆகிய நாடுகளிலிருந்து ஏராளமான யானை தந்தங்கள் கென்யாவிற்கு விற்பனைக்காக கடத்தி வரப்படுவதாக கென்ய அரசுக்கு தகவல் கிடைத்தது. இதன்படி 335 யானைகளிடமிருந்து வெட்டி எடுக்கப்பட்ட 40 ஆயிரம் தந்தங்களை கென்ய அரசு பறிமுதல் செய்தது. கென்யாவின் தெற்கு மாகாணமான முன்யானி எனப்படும் பகுதியில் இந்த தந்தங்கள் மொத்தமாக அடுக்கி வைக்கப்பட்டன. ஜனாதிபதி மிவாய்கிபாகி, முன்னிலையில் அவைகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

இது தொடர்பில் அவர் கூறுகையில், இனிமேல் கென்யாவிற்கு சட்டவிரோத வியாபார நடவடிக்கைகள் இருக்கக் கூடாது. அது எதுவாக இருந்தாலும் சரி. அதற்கு முன்னோடியாகத் தான் இந்த யானைத்தந்தங்கள் எரிக்கப்பட்டன என்றார். இவற்றை தவிர தாய்லாந்து, நைஜீரியா, கொங்கோ ஆகிய நாடுகளிலும் யானைகள் தந்தங்களுக்காக வேட்டையாடப்பட்டு கொல்லப்படுவதாக உலக வனப்பாதுகாப்பு அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

# உஸ்பெகிஸ்தானில் நிலநடுக்கம் 13 பேர் பலி;86 பேர் காயம்

உஸ்பெகிஸ்தானில் உள்ள பெர்கானா நகரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 புள்ளிகளாக பதிவாகியுள்ளது. இதில் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்துள்ளதுடன் இவற்றில் சிக்கி 13 பேர் உயிரிழந்ததாகவும் 86 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 35 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பெர்கானா நகரில் இடிபாடுகளுக்குள் ஏராளமானோர் சிக்கி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதனையடுத்து அங்கு மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றனது. எனவே பலியானோரின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அதன் அயல் நாடான கிர்கிஸ்தான் நாட்டிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் அங்கு பாதிப்புகள் எதுவும் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை. இதன் மையப்பகுதி பூமிக்கு அடியில் 18 கிலோ மீட்டர் ஆழத்தில் இருந்தது. மேலும் இந்த நிலநடுக்கம் 3 நிமிடம் நீடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மலாவி நாட்டு ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி

மலாவி நாட்டில் ஜனாதிபதிக்கு எதிராக நடைபெற்ற மக்கள் கிளர்ச்சியில் பலர் காயமடைந்துள்ளனர்.ஆபிரிக்க நாடான மலாவி நாட்டின் ஜனாதிபதி பிங்கூ-வா-முத்தாரிகா மக்களுரிமை சட்டத்தினை மீறி பொருளாதரா சீர்திருத்தம் மேற்கொண்டதாக புகார் எழுந்தது.

இவரின் நடவடிக்கைக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன் நேற்று முன்தினம் வர்த்தக நகரான தலைநகர் லைனோகிவ் நகரில் ஒன்று கூடி ஜனாதிபதியை பதவி விலக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.இதன் போது சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவர்களை விரட்டியடித்ததுடன் பலரை கைது செய்தும் உள்ளனர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# செக்ஸ் வைத்துக் கொண்ட 12 வயது சிறுமிக்கு எயிட்ஸ்




பிலிப்பைன்ஸை சேர்ந்த 12 வயதுச் சிறுமி ஒருவர் பாதுகாப்பற்ற முறையில் உடலுறவு வைத்துக்கொண்டமை மூலம் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகி உள்ளார். செக்ஸ் வைத்துக் கொண்டமை மூலம் உலகிலேயே மிகச் சிறிய வயதில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகி இருப்பவர் இவர்தான். பிலிப்பைன்ஸ் நாட்டில் வயதில் சிறியவர்கள் செக்ஸில் ஈடுபடுகின்றமை அதிகரித்துச் செல்கின்றது.

# அபுதாபியில் நடப்பட்ட பழைமையான ஒலிவ் மரம்

லெபனான் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட 800 ஆண்டு பழைமையான ஒலிவ் மரம் அபுதாபியில் நடப்பட்டுள்ளது. லெபனான் நாட்டில் வளர்ந்த 800 ஆண்டு பழைமையான ஒலிவ் மரத்தை வேரோடு பெயர்த்து அதன் சீதோஷ்ண நிலை உள்ளிட்டவை மாறாமல் பாதுகாக்கப்பட்ட பெரிய லொறியில் கொண்டுவந்து அபுதாபியின் ராதட் நகரில் நடப்பட்டுள்ளது.

4 மீற்றர் உயரமும் 5 தொன் எடையும் கொண்ட இந்த ஒலிவ் மரம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அபுதாபிக்கு கொண்டுவரப்பட்டு அங்குள்ள தோட்டத்தில் வைக்கப்பட்டு அதன் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டது. மரம் தொடர்ந்து துளிர்த்ததால் தற்போது ராதட் பகுதியில் விமானநிலைய சாலையில் உள்ள மசூதி அருகே நடப்பட்டுள்ளது.

இந்த மரத்தை பாதுகாக்க தாவரவியல் வல்லுனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த மரம் இன்னும் 800 ஆண்டுகளுக்கு தழைத்து வளரும் என பால் பெர்னாண்டஸ் என்ற தாவரவியல் வல்லுனர் தெரிவித்துள்ளார்.

# ஈரானில் பறந்த அமெரிக்க உளவு விமானம் அழிப்பு

ஈரானில் பறந்த ஆளில்லா அமெரிக்க உளவு விமானத்தை அந்நாட்டின் புரட்சிகர பாதுகாப்புப் படையினர் தாக்கி அழித்ததாக அந்நாட்டிற்கான இணைய தளத்தில் செய்தி வெளியாகியுள்ளது. இது குறித்து அந்நாட்டு அரசின் இணைய தளத்தில் ஈரான் அரசியல்வாதியான அலி அகாசாடே கூறியதாக வெளியான செய்தியில் "ஈரானின் மத்தியில் யுரேனிய வளம் நிறைந்த பகுதியில் பறந்து கொண்டிருந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானத்தை ஈரான் புரட்சிகர பாதுகாப்புப் படையினர் தாக்கி அழித்தனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர் தரத்தில் தோற்றும் மாணவர்களுக்கு கைநூல் வழங்கல்

(வட்டுக்கோட்டை நிருபர்)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு புதிய பாடத் திட்டத்திற்கான மாதிரி வினாத்தாள்களையும் விடைகளையும் கொண்ட கைநூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வட மாகாண கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண வளவாளர்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இந்நூல்கள் கணக்கீடு, பொருளியல், வணிகக் கல்வி ஆகிய பாடங்களுக்கு தனியான நூலாகவும் தமிழ், புவியியல், வரலாறு, அரசியல் விஞ்ஞானம், அளவையியலும், விஞ்ஞான முறைகளும், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்குத் தனித்தனியான நூல்களாகவும் வெளிவந்துள்ளன. இதுவரை இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளாத க.பொ.த. உயர் வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் கிளிநொச்சி கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதிகள் புனரமைப்பு

ஏழாலை,

வலி. தெற்குப் பிரதேச சபையின் கீழுள்ள மூன்று வீதிகள் உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

இப் பிரதேசத்திலுள்ள ஏழாலை காளி கோவில் வீதி, உடுவில் மல்வம் 3 ஆம் குறுக்குத் தெரு வீதி மற்றும் குப்பிளான் காடகரம்பை மயான வீதி என்பனவே புனரமைக்கப்படவுள்ளன.

இவ் வீதிகள் புனரமைப்பு பணி அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன் 16 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கருத்தரங்கு

ஏழாலை,

சக்தி எப்.எம். ஊடக நிறுவனத்தினால் வலிகாமம் கல்வி வலயக் பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களுக்கு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகா சங்காபிஷேகம்

வடமராட்சி,

புலோலி குரும்பைகட்டி அருள்மிகு சாமுண்டிகா தேவி சமேத ஞான வைரவர் ஆலய மகா சங்காபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பகல் 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை 5 மணிக்கு சுவாமி வீதி உலா வருவார்.

இச் சங்காபிஷேகத்தை சாதகபானு சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார்.

# நீர்ப்பாசன திணைக்களத்தினால் வவுனியாவில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பு

கைதடி,

நீர்ப்பாசன, நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனியா மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களைச் செய்யவுள்ளது.

பாவற்குளத்தின் வலது கரை பிரதான வாய்க்காலுள்ள சப்பாத்து பால திருத்த வேலை, வலது கரை பிரதான வாய்க்கால் திருத்த வேலை ஆகியன நடைபெறவுள்ளன.

முகத்தான் குளத்தின் முதலாவது கை வாய்க்கால் திருத்த வேலை, முதலாவது கை வாய்க்கால் வீதி திருத்த வேலை ஆகியனவும் திருத்தப்படவுள்ளன.

பாவற்குளத்தின் வலது கரை பிரதான வாய்க்கால் திருத்த வேலை, மருதமடு வரையான மத்திய பிரதான வாய்க்காலின் திருத்த வேலை நடைபெறவுள்ளது.

பாவற்குளத்தின் வலது கரை குளக் கட்டுப்பாதை வாய்க்கால் திருத்த வேலை, இதே குளத்தின் குளக்கட்டிற்கு கருங்கற்கள் அடுக்கும் வேலை ஆகியன நடைபெறவுள்ளது.

தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் ஜூலை 29 ஆம் திகதி வரையும் கேள்விப் பத்திரங்களைச் சமர்பிக்க முடியுமென எந்திரி கு. சிவபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

# கொழும்பில் நடைபெற்ற மாற்று வலுவுள்ளோருக்கான போட்டிகள்

கைதடி,

சமூக சேவைகள் அமைச்சினால் மாற்று வலுவுள்ளோருக்கான அபிலிம்பிக் போட்டிகளுக்குத் தெரிவு செய்வதற்கான போட்டி ஜூலை 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இதில் வட மாகாண வீராங்கனை நடராசா ஜெயக்குமாரி - தையல் உயர் பாடநெறியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவருக்கு முதலாம் இடம் கிடைக்காமையால் தென் கொரியாவில் நடைபெறவுள்ள சர்வதேச போட்டியில் பங்கேற்கும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாகாணங்களுக்கிடையிலான தேசியப் போட்டிகள் ஜூலை 29 ஆம் திகதி சீதுவையிலும் நாரஹேன்பிட்டியவிலும் நடைபெறவுள்ளது. சீதுவை, லியனகே முல்லை, சமூக சேவைகள் திணைக்களத்தின் தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் வட மாகாண வீரர்கள் இருவர் பயங்கேற்கின்றனர்.

அழகியல் கலை போட்டியில் கனகராசா கார்த்திகேஸ்வரி, கதிரை பின்னலில் ஆசைப்பிள்ளை மகேந்திரன் ஆகியோர் பங்கேற்கின்றனர். நாரகேன்பிட்டிய எல்விற்றிகெல மாவத்தையிலுள்ள நிலையத்திலும் வட மாகாண வீரர்களான வி.தீபா, எஸ். சிராஜா ஆகியோர் ஆங்கில மொழியில் கணினிச் செய்முறை போட்டிகளில் பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கேட்டியளே சங்கதி

*கேட்டியளே.... யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி தேர்தலோட இன்னுமொரு விசயமுமெல்லே சூடு பிடிச்சிருக்கு. ஆண்டாண்டு காலமாய் கையில் வாளொடு நிமிர்ந்து நிண்ட சங்கிலியனின் சிலை உடைக்கப்பட்டதுதான் இப்ப சனத்துக்க சூடுபிடிச்சிருக்கு பாருங்கோ...*

*யாழ்ப்பாண முனிசூப்பாலிட்டி சங்கிலியனை வடிவாக்கப்போறதாக தங்களுக்குள் முடிவெடுத்துக் கொண்டு, வெளியில செல்லாமல் திடீரென அதை சுற்றியடைத்து உடைச்சுப் போட்டதுதான் சனத்தைக் குழப்பமடையச் செய்திருக்கு பாருங்கோ.... இது போதாதெண்டு இச்சிலையை இடிச்சுக்கொட்டுறதுக்கு முன்னதாக வடமாகாண ஆளுநர் பேசிய பேச்சுமெல்லே எங்கட சனத்தை மேலும் குழப்பியிருக்கு. யுத்த வெற்றிச் சின்னங்கள் எல்லாம் அழிக்கப்படும் எண்டு அவரும் சொன்னது தான் சனத்த பீதி கொள்ள வைச்சிருக்கு பாருங்கோ... இன்னுமொரு விசயம் கேளுங்கோவன். தென்பகுதிக்காரருக்கு சங்கிலிய மன்னன் வாளோட நிற்கிறதைப் பார்க்க பிடிக்குதில்லையாம். இப்பவெல்லாம் நிறையப் பேர் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து போகினமெல்லே... அவையளுக்கு சங்கிலியன் வீராவேசத்தோட வாளை நிமிர்த்திப் பிடிச்சிருக்கிறதப் பார்க்கப் பிடிக்கவில்லையாக்கும். இவயளின்ர நச்சரிப்புக்கள் தான் தென்னிலங்கை பெரிய தலைகளை யோசிக்க வைத்து ஏதாவது மாற்றத்தைச் செய்ய வைத்திருக்குதோ என்ற பயம் தான் யாழ்ப்பாண சனத்திட்ட... இனிவரும் தமிழ் இளம் தலைமுறையினரின் மனநிலையில் மாற்றத்தை இதன் மூலம் ஏற்படுத்தி அவயளின்ட உரிமை கேட்கும் போராட்ட குணத்தைத் குறைக்கும் நோக்கமாக இது இருக்கலாம் என தமிழ்ப் பெரும் தலைகள் கதைக்கினம் பாருங்கோ.*

*முன்னர் இருந்த சங்கிலியனின் கையிலுள்ள வாள் நேராகவும் மன்னனின் நெஞ்சுப்பகுதி நிமிர்ந்து நிற்பதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்ததை எல்லோரும் பார்த்திருப்பியள். அதோடு குதிரையின் தலையும் நிமிர்ந்த பார்வை யோடு தமிழரின் வீரத்தை வெளிப்படுத்துவதாக இருப்பதை எல்லாரும் பார்த்திருப்பியள் பாருங்கோ: இப்ப கட்டப்போற சங்கிலியனின் சிலையில் சங்கிலியனின் கையிலிருக்கும் வாள் சோர்வடைந்தும் , குதிரையின் தலை பூமியைப் பார்த்து கவிழந்திருப்பதையும் எல்லே மாதிரிப் படம் காட்டுது. இதுவும் ஒருவகையில் உளவியல் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை எங்கட சனம் விளங்கிக்கொண்டால் சரி. இப்பவாற தமிழ்ப் பாடப் புத்தகங்களில் எல்லாம் தமிழ் மன்னர்களின் வரலாறுகளும், படங்களும் குறைக்கப்பட்டு வருகுதாம். தமிழ் மொழியில் அழகாக வீரவசனங்களால் எழுதப்பட்ட வரலாறுகள் எல்லாம் இப்ப சுருக்கப்பட்டும் ஏனோத தானோ எண்டு பரீட்சைக்கு மட்டும் படிக்கக்கூடியதாக அச்சடித்து வெளியிடுகினம். இதைப் போல தான் தமிழரின் பாரம்பரிய சிற்பங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த ஆளுறவயள் நினைக்கினம் போல....*

*எங்கட கலை பண்பாட்டு கலாசாரத்தை சிதைப்பதை பக்கத்து வீட்டுக்காரர் மிகக்கச்சிதமாய் செய்து வருகினம். இதை எங்கட சனம் அறியாமலே அதற்கு அடிமையாகிவிட்டுதுகள் பாருங்கோ... முன்பெல்லாம் மாலை வேளையானால் நாடகங்கள், கூத்துக்கள் என கூடுகிற சனம் இப்ப ரீ.வி. நடகத்துக்கெல்லே முடங்கிக்கிடக்குதுகள். இதுவும் ஒரு வகையில் எங்கட பண்பாட்டை சிதைத்தும் சனத்த சோம்பேறி ஆக்கிவாற கைங்கரிய செயற்பாடுதான் பாருங்கோ....*

*சரி, நல்லூர் கந்தனின் கொடியேற்றத்துக்கு சங்கிலியன் எப்படி வந்து நிற்கிறான் எண்டு. பொறுத்திருந்து பாப்போம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரை ஆக்கிரமிக்கும் புகை கக்கும் வாகனங்கள்



சூழல் மாசடைதல் என்பது பற்றிய எண்ணக்கரு புத்தகப் படிப்புடன் மட்டும் நின்று விடுகின்றது. நடைமுறை வாழ்க்கையில் அதனை காணமுடியாதுள்ளது. தற்போது சூழல் மாசடைதல் பற்றி சூழலியலாளர்களின் கவனம் அதிகரித்துள்ளன. புவி வெப்பமயமாதல், ஓசோன் படலத்தில் துவாரம், பச்சை வீட்டு விளைவுகள், நீர் மாசுபடல் போன்றன சூழலியல் சார் காரணிகளை விளைவுகளுடன் தமது ஆராய்ச்சிகளை செய்து வருகின்றனர். ஆனால் நாம் கண்ணெதிரே நடக்கும் விளைவுகள் பற்றிச் சிந்திப்பதில்லை.

கடந்த சில காலங்களாக நாட்டில் வாகனங்களின் பெருக்கம் அபரிமிதமான முறையில் பெருகிச்செல்கின்றது. வாகனங்களின் பெருக்கத்திற்கேற்ப வீதிகளின் அகலம் அதிகரிக்கவில்லை. இதனால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் நெருக்கடி நிலை தோன்றுகின்றது. குடாநாட்டில் பேரூந்துகளின் சேவை அதிகரித்துள்ளன.

பேரூந்துகளில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கேற்ப பேரூந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்காவிட்டாலும் முன்னரை விட பேரூந்துகளின் பெருக்கம் அதிகரித்துள்ளன. இதனால் வருமானத்தை மட்டுமே குறியாகக் கொண்டு செயற்படும் பேரூந்து உரிமையாளர்கள் நீயா? நானா? என்று போட்டி போட்டுக் கொண்டு ஓடுகிறனர். இவ்வாறு போட்டி போட்டு அதி வேகமாக ஓடுவதனால் விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இதனால் பலர் உயிரிழந்தும் அங்கவீனமடைந்தும் வருகின்றனர்.

அத்துடன் வாகனங்களின் புகைகளினால் இயற்கை சூழல் பாதிப்படைந்து வருகின்றது. தற்போதுள்ள வாகனங்களின் இயந்திரங்கள் தரக்குறைவாகவுள்ளன. இதனால் அளவுக்கதிகமான புகை வெளியேற்றப்படுகின்றன. இத்தகைய நச்சுத் தன்மையான புகை இயற்கையின் சமநிலையை குழப்பிவிடுவதுடன் மனிதர்களுக்கு பலவிதமான நோய்களையும் உருவாக்கிவிடுகின்றன. இதைப்பற்றி சம்பந்தப்பட்டவர்கள் உரிய அக்கறை எடுப்பதாக தெரியவில்லை.

> **யாழ். நகரப் பிராந்தியத்தில் (Jaffna Metro Politant Region) புகை கக்கும் வாகனங்களின் பெருக்கத்தினால் அப்பிராந்தியம் விரைவான சூழல் மாசடைவுக்குட்பட்டுள்ளது. இதனால் இச்சூழலை அண்டி வாழும் மக்கள் சுவாசம் சம்பந்தமான மற்றும் இருதய சம்பந்தமான நோய்களுக்கு ஆட்படும் வீதம் கணிசமான அளவு அதிகரித்து வருகின்றது**

யாழ் நகரப் பிராந்தியத்தில் (Jaffna Metro Politant Region) புகை கக்கும் வாகனங்களின் பெருக்கத்தினால் அப்பிராந்தியம் விரைவான சூழல் மாசடைவுக்குட்படட்டுள்ளது. இதனால் இச்சூழலை அண்டி வாழும் மக்கள் சுவாசம் சம்பந்தமான மற்றும் இருதய சம்பந்தமான நோய்களுக்கு ஆட்படும் வீதம் கணிசமான அளவு அதிகரித்து வருகின்றது.

யாழ். நகரப்பிராந்தியம் மட்டுமன்றி தற்போது கிராமப்புறங்களிலும் அதாவது புகை விடும் வாகனங்களின் போக்குவரத்து இடம் பெறும் அனைத்து பிரதேசங்களிலும் சூழல் மாசடைந்து வருகிறது. இத்தகைய புகை வெளியேற்றத்தை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

நம் கண்ணுக்குத் தெரியாத இரசாயனச் சேர்வைகள் அடங்கிய புகை பிற்காலத்தில் உடல் ஆரோக்கியத்திற்கு கெடுதல் விளைவிப்பதுடன் சூழலுக்கும் பாதகத் தன்மையை உண்டுபண்ணிவிடுகிறது. வாகனங்களுக்கு பயன்படும் எரிபொருளில் அதிகளவு காபன் மொனொக்சைட்(carbon monoxide )காணப்படுகிறது. இக்காபன் மொனக்சைட்டானது எரிக்கப்பட்டால் புகை வடிவில் hydro carbon ஆக வெளிவருகிறது. இந்த hydro carbon ஒரு நச்சுப் பொருளாகும். இவற்றைச் சுவாசிக்கும் போது பலவித நோய்களுக்கு ஆட்படக்கூடிய ஏது நிலைகள் அதிகளவு காணப்படுகின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் தரமான இயந்திரங்களைக் கொண்ட வாகனங்களைப்பயன்படுத்தவே அனுமதிக்கப்படுகின்றது. அந்தந்த நாடுகளிலுள்ள அரசுகள் ஒவ்வொரு வாகனங்களையும் Vehicle Emmision Test புகை வெளிவரும் பரிசோதனையை நடத்தி சான்றிதழ் வழங்கிய பின்னரே வாகனங்களை வீதிக்கு இறக்க முடியும். சட்டத்தை மீறுவோர் கடும் தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆனால் எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் இத்தகைய பரிசோதனைகள் இடம்பெறுவதில்லை.

இதனால் வாகனச் சாரதிகள் தரமில்லாத வாகனங்களையும் வீதிக்கு இறக்கி வருமானத்தை வமட்டும் குறியாகக் கொண்டு செயற்படுவதால் எதிர்காலத்தில் நோயுள்ள சமூகத்தையே காணக்கூடியதாக இருக்கும். இந்த நிலையைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் உரிய அக்கறை செலுத்தி போக்குவரத்து வசதிகளை மீறும் சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் விரும்புகின்றனர்.

● உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவு, திருக்கோவில் சபைகளுக்கு கடந்த தேர்தலில் தெரிவானவர்கள் பெற்ற விருப்பு வாக்கு விபரங்கள்

காரைதீவு,

காரைதீவு பிரதேச சபைக்கான கன்னித் தேர்தலில் 6059 வாக்குகள் பெற்று தமிழரசுக்கட்சி 04 ஆசனங்களை பெற்றது.

தமிழரசுக்கட்சி சார்பில் ந.ஜீவராசா-4859, வீ. கிருஷ்ணமூர்த்தி-4522, எஸ். ஸ்ரீநவநாதன்-3188, எஸ். பகீரதன் -2307, ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் எம். ஜ..இஸ்மாயில் -4438 வாக்குகளைப் பெற்று தெரிவானார்கள்.

ந.ஜீவராசா தவிசாளராகவும் வீ. கிருஷ்ணமூர்த்தி உப தவிசாளராகவும் செயற்பட்டனர். இம்முறை இருவரும் இருவேறு அணிகளில் போட்டியிடுகின்றனர்.

திருக்கோவில் பிரதேச சபைக்கான 2006 தேர்தலில் 8318 வாக்குளைப் பெற்ற தமிழரசுக்கட்சி 09 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. ரி. உதயகுமார்-4525, எஸ். சபாபதி-3933, கேபி. சிவானந்தராஜா- 2379, ஏ. தமிழ்நேசன்-1279, எஸ்-பாக்கியராசா- 1202, யூ.எம். சசிகலா-846, கே.சுரேந்திரகுமார்-789,கே.என்.தர்மலிங்கம்-687, எஸ்.சதீஸ்குமார்-670 வாக்குகளுடன் தெரிவானார்கள். ரி. உதயகுமார் தவிசாளராகவும் சபாபதி உப தவிசாளராகவும் பணியாற்றினர். இடையில் உதயகுமார் சுட்டுக்கொல்லப்படட சபாபதி தவிசாளராணமை குறிப்பிடத்தக்கது.

# மாவடிவேம்பில் ஆயுதம் மீட்பு

வாழைச்சேனை,

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிவேம்பு 2 ஆம் பிரிவில் வீட்டு வளவொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதத்தை ஏறாவூர் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ரீ - 56 ரக துப்பாக்கியும் அதற்கு பயன்படுத்தப்படும் ரவைகளுமே மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி வீட்டுக்கு குடிநீர் பெறும் பொருட்டு நீர்க்குழாய் பொருத்துவதற்காக குழி வெட்டப்பட்ட போது மர்மப் பொருள் ஒன்று உரப்பையில் தென்படுவதை கண்ட வீட்டு உரிமையாளர் ஏறாவூர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். அதனையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்படி ஆயுதத்தை மீட்டுள்ளனர்.

# 86 வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(பாலமுனை மேலதிக நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நுகர்வோர் அதிகார சபையின் சட்டதிட்டங்களை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 86 வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக அதிகார சபையின் அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரி எச்.எல்.ஏ.குத்தூஸ் தெரிவித்தார்.

அதிகாரசபையின் மாவட்ட இணைப் பதிகாரி குத்தூஸ் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப் பின் போது கல்முனை தமிழ் பிரிவில் 14 வியாபாரிகளும் கல்முனை முஸ்லிம் பிரிவு, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் தலா 10 வியாபாரிகளும் அம்பாறை வரிபத்தான் சேனை, இறக்காமம், பாண்டிருப்பு, உகணை, வில்கம்புர, பொக்கபெத்த, வாத்துகல நிந்தவூர் மாளிகைக்காடு, மருதமுனை, சம்மாந்துறை மற்றும் ஆலையடிவேம்பு ஆகிய 52 வியாபாரிகளும் கண்டுபிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# அட்டன் செனன் சந்தி - வெளிஓயா பிரதான பாதை மோசமாகச் சேதம்

## திருத்தியமைக்குமாறு அமைச்சர் பஷிலுக்குக் கடிதம்

அட்டன் செனன் சந்தியிலிருந்து வெளிஓயாவிற்கு செல்லும் பிரதான பாதை மிகுந்த சேதமடைந்தமை பற்றி மலையக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி பாதை பல வருடங்களாக சேதமடைந்த நிலையிலுள்ளது. 15க்கும் அதிகமான தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாக இது அமைந்துள்ளது. ஐந்து பிரதான பாடசாலைகளுக்குச் செல்லும் மூவாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்த பாதையின் ஊடாகவே பயணிக்கின்றனர்.

வாகனங்களில் பயணிப்பதிலும் நடந்து செல்வதிலும் பொது மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இப்பகுதியில் உள்ள மூன்று பிரதான கல் உடைக்கும் ஆலைகளுக்கு கனரக வாகனங்கள் அடிக்கடி வந்து செல்வதால் ஏற்கனவே சேதமடைந்துள்ள பாதைகள் மேலும் சேதமடைவதோடு போக்குவரத்து நெருக்கடிகளும் ஏற்படுகின்றன. இந்த பாதை சீரமைக்கப்பட்டால் ஆயிரக்கணக்கான மக்கள் மிகுந்த பயனடைவர் என்று குறிப்பிட்டுள்ள அவர் மேலும் கருங்கல் உடைக்கும் ஆலைகளுக்கு செல்லும் கனரக வாகனங்கள் ஏதாவது மாற்றுப் பாதைகளை பாவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவுமாறு தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# செம்மண் ஓடையில் மீள்குடியேற்றம்

வாழைச்சேனை,

வாழைச்சேனை மத்திய செம்மண் ஓடை மக்கள் 26 வருடங்களின் பின்னர் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறியுள்ளனர்.

தமிழ், முஸ்லிம் எல்லைப் பிரதேசமான செம்மண் ஓடை பகுதி மக்கள் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக 1985 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிசாரும் காவல் கடமைக்காக காவல் அரண்களை அமைத்தனர்.

தற்போது அரச படையினர் அவ்விடத்தைவிட்டு வெளியேறியதினால் மக்கள் அப்பகுதியில் மீள்குடியேறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கோறளைப் பற்று மத்தி இலங்கை செஞ்சிலுவை சங்கச் செயலாளர் வை.எம்.மன்சூர் தெரிவித்தார்.

# கல்முனையில் மகாசித்தர் அருளானந்தரின் மகா யாகம்

காரைதீவு,

இந்தியாவிலிருந்து வருகை தந்த மகா சித்தர் அருளானந்தர் சுவாமிகளின் மகா யாகம் கல்முனையில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மட்டு. மாநில சுவாமி சற்குரு ஸ்ரீ புண்ணியரத்தினம் ஜீயின் ஏற்பாட்டில் கல்முனை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 81ம் இலக்க நாகேந்திரன் வீட்டிலுள்ள யாக நிலையத்தில் இது நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

உலக ஷேமம் கருதி கடந்த மாதம் இந்தியாவிலிருந்து இலங்கை வந்த அருளானந்தர் சுவாமிகள் களுவாஞ்சிக்குடியிலுள்ள மகா ஞான யோகப் பீடத்தில் மகா யாகத்தை முதலில் நடத்தினார்.

பின்னர் கதிர்காமத்திலும் தாந்தாமலையிலும் தொடர்ச்சியாக அன்னதானத்தை வழங்கியுள்ளார். இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பயனடைந்துள்ளார்கள். களுவாஞ்சிக்குடி யோகாசன பீடத்தின் கிளையான கல்முனையில் இப்பாரிய யாகம் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

அன்று 11 மணிக்கு இடம்பெறும் யாகத்தில் இந்திய மூலிகைகள் ஆகுதி செய்யப்படும் என்று பக்தர் ஸ்ரீ நாகேந்திரன் கூறினார்.

# வீட்டிலுள்ளவர்களை ஆயுத முனையில் பயமுறுத்தி பணம், நகைகள் திருட்டு

## - சொரகுன பிரதேசத்தில் சம்பவம்

பதுளை ,

வயோதிபர் ஒருவரையும் அவரது மகளையும் ஆயுத முனையில் பயமுறுத்தி முகமூடியணிந்த ஆயுததாரிகள் ஒரு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ள சம்பவம் அப்புத்தளைப் பகுதியின் சொரகுன என்ற இடத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக அப்புத்தளை பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியல்கர குமாரவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இம் முறைப்பாட்டினை அடுத்து அப்புத்தளைப் பொலிசார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதுடன் கொள்ளையர்களைத் தேடி வலை விரித்துள்ளனர்.

வயோதிபத் தந்தையும் அவரது மகளும் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது வீட்டின் சமையலறைப் பகுதியிலிருந்து வந்த முகமூடியணிந்த ஆயுத தாரிகள் இருவர் கொலை செய்யப் போவதாக மிரட்டி வீட்டின் அலுமாரிகளை திறந்து பணம், நகைகள் ஆகியன வற்றினை கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

இக் கொள்ளையை அடுத்து அப்புத்தளை சொரகுன பகுதியில் பெரும் பதற்றத்துடனும் பீதியுடனும் மக்கள் இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# உதைபந்தாட்டப் போட்டி

(பதுளை மேலதிக நிருபர்)

நலோ மாஸ்டர் (துவான் பாறூக்) வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி பதுளுப்பிட்டிய நிமல் விக்ரமதுங்க விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வை பதுளுப்பிட்டிய யூத் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. முதலாம் இடம்பெறும் அணிக்கு 30 ஆயிரம் ரொக்கப் பணமும் இரண்டாம் இடம்பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணம் சகிதம் வழங்கப்படும். இப்போட்டியின் போது சிறந்த விளையாட்டு வீரர், சிறந்த பந்து வீச்சாளராக தெரிவு செய்யப்படுவோருக்கு கையடக்க தொலைபேசி வெற்றிக் கிண்ணம் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

### சிங்களச் சொற்களுக்கான தமிழ்க்கருத்துக்கள்

***கொஸகந்த*** - இலைக்கஞ்சி

***வதுற*** - தண்ணீர்

***தே*** - தேநீர்

***பலதுறபீம*** - பழரசம்

***கெதரயன்ன*** - வீட்டுக்குப்போங்கள்

***வெசிகலிய*** - மலசலகூடம்

***வித்தியாகாரய*** - ஆய்வுகூடம்

***ஆயுபோவன்*** - வணக்கம்

***ஸ்(த்)துதிய*** - நன்றி

***மல்லி*** - தம்பி

***நங்கி*** - தங்கை

### நகரங்கள்

***யாப்பணய*** - யாழ்ப்பாணம்

***கொழ(ம்)ப*** - கொழும்பு

***புத்தளம*** - புத்தளம்

***கண்டி*** - மஹநுவர

***ரத்னபுர*** - இரத்தினபுரி

***நுவரஎலிய*** - நுவரெலியா

***திருகுணாமலய*** - திருகோணமலை

***மன்னாரம*** - மன்னார்

***வவுனியாவ*** - வவுனியா

***ஹலாவத*** - சிலாபம்

***கதரகம*** - கதிர்காமம்

***பதுள்ள*** - பதுளை

***கால்ல*** - காலி

***கன்தலே*** - கந்தளாய்

***அவிஸ்ஸாவெல்ல*** - அவிசாவளை

***பண்டாரவெல*** - பண்ராவளை

***ஹெடன்*** - ஹற்றன்

***ம(ட்)டகளபுவ*** - மட்டக்களப்பு

---

***ஒபட ஒனே மொனவாத?*** - உங்களுக்கு என்ன தேவை?

***பத் கன்ன*** - சோறு சாப்பிடுங்கள்

***கிரி பொன்ன*** - பால் குடியுங்கள்

***அப்பி இதி ஆப்ப கமு*** - நாங்கள் இடியப்பம் சாப்பிடுவோம்

***ஒப கவுத?***- நீங்கள் யார்?

***ஒயாகே கம கொஹேத?*** - உங்களுடைய ஊர் எங்கே உள்ளது?

***ஒயாகே கெதர தியென்னே கொய் பாரேத?*** - உங்கள் வீடு எந்த வீதியில் உள்ளது?

***ஒபே/ ஒயாகே கெதர லிப்பினய மொகத்த?***- உங்கள் வீட்டு முகவரி என்ன?

***செப்ப சனீப்ப கொஹொமத?*** - சுகம் எப்படி

***முத்தர கன்னே கொஹெந்த?*** - முத்திரை வாங்குவது எங்கே?

***ஒயாகே வயச கீயத?***- உங்களுடைய வயது எத்தனை?

***மம பத் கனவா*** - நான் சோறு சாப்பிடுகிறேன்.

***மம சிங்கள லியனவா*** - நான் சிங்களம் எழுதுகிறேன்.

***மம தே பொனவா*** - நான் தேநீர் குடிக்கிறேன்.

***மம பாசலட யனவா*** - நான் பாடசாலைக்கு போகிறேன்.

***லமய் செல்லம்கறனவா*** - பிள்ளைகள் விளையாடுகிறார்கள்.

***மம அம்மாட்ட ஆதரயகறனவா*** - நான் அம்மாவை விரும்புகிறேன்.

***கமலா கம கன்னவா*** - கமலா உணவு தருகிறார்.

# SPOKEN ENGLISH

## Howsi and Kavi are Talking about election

H:- Hi ! Kavi, glad to meet you
ஹாய் கவி சந்திப்பில் சந்தோசம்.
K:- Hi ! same to you
ஹாய் கௌசி எனக்கும் அப்படியே
H:- I didn't see you so many days
கன நாட்களாக உம்மை காணவில்லை.
K:- Oh I was in Kandy
ஓ, நான் கண்டியில் இருந்தேன்.
H:- When did you come to jaffna?
எப்பொழுது யாழ்ப்பாணத்திற்கு வந்தீர்?
K:- Came last monday because of the election
கடந்த திங்கள் தேர்தலுக்காக வந்தேன்.
H:- Oh, The pradesha sabha electoin
ஓ, பிரதேசசபை தேர்தல்
K:-Although everybody is talking about the election
எல்லோரும் தேர்தல் பற்றி தான் கதைக்கிறார்கள்.
H:- Isee, what is the speacial of it?
அப்படியா அதில் என்ன சிறப்பு?
K:- This election for local government?
இந்த தேர்தல் ஊருக்கு அதிகார சபைகளுக்கு
H:- So, Do we want to vote it?
ஆகவே நாம் வாக்களிக்க வேண்டுமா?
K:- Why not, Every one wants to do
ஏன் இல்லை ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டும்.
H:- What is the benifit of it?
அதனால் என்ன பயன்.
K:- Lots of benifits
நிறைய பயன்கள்.
H:- Can you say some thing about it?
எனக்கு கொஞ்சம் இதைப்பற்றிச் சொல்ல முடியுமா?
K:- This is help to develop our country also
இது எமது நாட்டை அபிவிருத்தி செய்ய உதவும்.
H:- I see, which development?
அப்படியா என்ன அபிவிருத்தி?
K:- Roads, ponds, tanks like that
வீதிகள், குட்டைகள், குளங்கள் போன்றவை
H:- You mean can develop our roads, tanks, ponds
உமது கருத்து வீதிகள், குளங்கள் மட்டுமா?
K:- No, no, not only roads but also many benifits are there
இல்லை இல்லை, பல நன்மைகள் இருக்கின்றன.
H:- So we can develop our roads can't it?
ஆகவே நாம் வீதிகளை அபிவிருத்திசெய்யமுடியும் இல்லையா?
K:-Oh yes, Jaffna roads are like moon land
ஓம், யாழ்ப்பாண வீதிகள், சந்தித்தரை போன்றதே சொல்லுகிறீர்கள்
H:- What do you mean!
என்ன சொல்லுகிறீர்கள்?
K:- We have studied in social studies book, have't it
நாம் சமூகக்கல்விப் புத்தகம் படித்தோம் இல்லையா?
H:- Oh,like a big and small cavity
ஓ பெரிய சிறிய குழிகள்
K:- Yes, I studied in Tamil verse also
ஓம் நான் தமிழிலும் படித்தேன்.
H:- Can you rember it?
அதை ஞாபகப்படுத்துவீரா?
K:- Yes i can.... "Kunrum kuzhiyum kuruki vazhi nadanthu senru thirivathu enrum theeratho"
ஓம் ஓம் ''குன்றும் குழியும் குறுகி வழி நடந்து சென்று திரிவது என்றும் தீராதோ''
H:- Ok, good so we want to vote
ஓ, நல்லது, ஆகவே வாக்களிக்க வேண்டும்.
K:- which is the division for you?
நீங்கள் எந்த பிரிவு
H:- Iam kopay division
நான் கோப்பாய் பிரிவு
K:- Ok, Don't miss it to your right,
சரி உமது உரிமையை தவறவிடவேண்டாம்.
H:-Ok, I will do tomorrow
சரி, நாளை வாக்களிப்பேன்
K:- Bye, see you
H:- Bye

S.Uthayabalan (M.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல்
# வெற்றி யாருக்கு?

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான நாட்கள் சுருங்கிவிட்டன. புயல் வேகப் பிரச்சாரங்கள் ஓய்ந்துள்ளன.

நடந்து முடிந்த ஜனாதிபதி பாராளுமன்ற தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களை விட இம்முறை தேர்தல் களம் சூடாகவே உள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலை



மையில், பெரும்பாலான அமைச்சர்கள் சுற்றிச் சுழன்று குடாநாடெங்கும் களமாடிவிட்டனர். ஜனாதிபதி கூட வந்து போய்விட்டார். ஒலிபெருக்கியின் அலறல்கள் ஓய்ந்து யாழ்ப்பாணம் அமைதியாகியிருக்கின்றன.

அரசியல்வாதிகள் வழங்கிய வாக்குறுதிகள் மட்டும் அங்கும் இங்குமாக காற்றில் மிதக்கின்றன. நாட்டி வைக்கப்பட்ட அடிக்கற்கள், கிராமங்கள், குச்சொழுங்கைகள் என பரவிக்கிடக்கின்றன. பொது மேடைகளில் வைத்து வழங்கப்பட்ட உதவிப்பொருட்கள் சில இடங்களில் வேட்பாளர்களால் மீளப்பெறப்பட்டுள்ளது. தமது வெற்றியை உறுதிப்டுத்திக்கொண்டு அன்பளிப்புக்களை திருப்பித்தருவதாக அவர்களால் உறுதிமொழிகளும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பாணியில் சேலைகளும், வேட்டிகளும் சில வேளைகளில் பணமும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

வழமை போன்றே தேர்தல் ஓட்டப் போட்டியில் கடைசி நேரத்தில், பதைபதைத்து இணைந்து கொள்ளும் கூட்டமைப்பு இம்முறையும் அவ்வாறே ஓடத் தொடங்கியுள்ளது. ஆனாலும் மூத்த தலைவர்களில் நம்பிக்கையற்று கணிசமான வேட்பாளர்கள் தாமே நேரடியாக வீடு வீடாக சென்று வாக்குகளை கோரியிருந்தனர்.ஆனாலும் வெளிநாடு போனவர்கள், வீடுகளுள் முடங்கியவர்கள் தவிர வன்னி மற்றும் கிழக்கை சேர்ந்த கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் எனப் பலரும் பிரசார நடவடிக்கைகளில் பங்கெடுத்தேயுள்ளனர்.

நடைபெறப்போகும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றி வாய்ப்புக்கள் எவ்வாறு இருக்கப்போகின்றது என இலகுவில் நாடி பிடித்துப் பார்க்க முடியாத வாக்காளர்களின் மனோநிலை, சலுகைகளால் மாறியிருக்குமோ அல்லது யுத்த வடுக்களுடன் தான் புதைந்து கிடக்கின்றதா என்பதையும் இத் தேர்தலே சொல்லப் போகின்றது.

### வடமராட்சி

வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை மற்றும் பருத்தித்துறை , வடமராட்சி தெற்கு- மேற்கு கரவெட்டி பிரதேச சபைகள் உள்ளடங்கியுள்ளன. வல்வெட்டி நகர சபை மற்றும் பருத்தித்துறை நகரசபை, கரவெட்டி பிரதேச சபை மூன்றிலும் கூட்டமைப்பிற்கான வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. குறிப்பாக கே. சிவாஜிலிங்கம் , ஆனந்தராஜ், கல்வியாளர் வியாகேஸ் என பல முன்னணியினர் களம் இறங்கியுள்ளனர். குறிப்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியும், கூட்டமைப்புடன் கூட்டுச் சேர்ந்துள்ளமை பலத்தை அதிகரிக்க வைத்துள்ளது. மக்களிடம் அறிமுகமான பலர் கூட்டமைப்பின் வேட்பாளராயுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபைக்கான வெற்றிவாய்ப்பு இழுபறியாகவே இருக்கின்றது. இப்பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளராவார். ஏற்கனவே இப்பிரதேச சபையின் தலைவராக இருந்ததுடன் வடமராட்சி கிழக்கை சொந்த இடமாக கொண்டவருமாவார். அதேவேளை கூட்டமைப்பு வடமராட்சி கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வேட்பாளர்களை நிறுத்த தவறிவிட்டது.

சட்டவிரோத மணல் அகழ்வு, சுற்றுச்சூழலியாளர் ஒருவர் படுகொலை, மீள்குடியமர்வு எனும் பெயரில் மக்கள் அநாதரவாக விடப்பட்டமை போன்றவை அரச தரப்பிற்கு பாதகமாகவே உள்ளன. இவற்றை மையப்படுத்தி கூட்டமைப்பின் சிவாஜிலிங்கம் மற்றும் குலநாயகம் ஆகியோர் அப்பகுதிகளில் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளனர். மீனவ சங்கங்களிடையேயும் கூட்டமைப்புக்கு ஆதரவான நிலைப்பாடே காணப்படுகின்றது.

### தென்மராட்சி

சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேசசபைகளுக்கு தேர்தல் நடக்கின்றது. முன்னதாக 1998 இல் நடைபெற்ற தேர்தலில் நகரசபையை புளொட் கைப்பற்றியிருந்தது. சாவகச்சேரி பிரதேச சபை ஈ.பி.டி.பி. வசம் போட்டியின்றி சென்றிருந்தது. புளொட் இம்முறை கூட்டமைப்புடன் இணைந்துள்ளது. கூட்டமைப்பும் பலமாகவே உள்ளது. மாணவன் கபில்நாத் படுகொலை தொடர்பான கறுப்புப்பக்கங்கள் உண்டு. மறுபுறத்தே முகமாலையின் பின்புறம் எழுதுமட்டுவாழ், மிருசுவில் பகுதிகளிலும் மீள்குடியமர்வு அரசதரப்பின் சாதனையாக கொள்ளப்படுகின்றது.

### கிளிநொச்சி

கரைச்சி, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனு தாக்கலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பு மனு நிராகரிப்பால் பங்காளிக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் சூரியன் சின்னத்தில் கூட்டமைப்பு போட்டியிடவேண்டியேற்பட்டுள்ளது. கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச சபைகள் வெற்றிவாய்ப்பு கூட்டமைப்பு பலமாக உள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வெற்றி கேள்விக்குறியாகவே உள்ளது. ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் சொந்த இடமென்ற வகையிலும், கிளிநொச்சியிலேயே அவர் தங்கி நின்று பிரசாரங்களை மேற்கொண்டுவருவதனாலும் இழுபறிநிலையே காணப்படுகின்றது. பெரும்பாலான குடும்பங்கள் அண்மைகாலங்களிலேயே மீளக்குடியமர்ந்துள்ளன. எனினும் மீள் குடியமர்த்தப்படவேண்டி பல கிராமங்கள் காத்திருக்கின்றன.

### தீவகம்

தீவகப் பகுதி தொடர்ந்தும் ஈ.பி.டி.பிக்கான வெற்றிவாய்ப்பை தருவதாகவே அமைந்திருக்கிறது. வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு மற்றும் காரைநகர் பிரதேச சபைகளுக்காக தேர்தல் நடைபெறுகின்றது. கூட்டமைப்பினர் பிரசார நடவடிக்கைகளுக்கு செல்ல முடியாத சூழலே நிலவியது. ஏற்கனவே கூட்டணியினர் நாரந்தனையில் தாக்கப்பட்ட சம்பவம் ஆதரவாளர்களைக் கூட அங்கு செல்ல அச்சம் கொள்ள வைத்துள்ளது.

எனினும் ஐக்கிய தேசியக்கட்சிக்காக பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார். அவருடையதும், அவரது கணவரும் அமைச்சருமான மகேஸ்வரனதும் சொந்த இடமென்ற வகையிலும், காரைநகர் பிரதேச சபையில் வெற்றி வாய்ப்பு அதிகமாகவுள்ளது. நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பி பங்காளிக்கட்சியாக உள்ள ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணிக்கு வாய்ப்பாக உள்ளது. வேலணை பிரதேசசபையின் வெற்றிவாய்ப்பு சரிபாதியாக உள்ளது. இறுதி நேரங்களில் இடம்பெறும் தடாலடிப்பிரசாரங்கள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

### வலிகாமம்

ஐந்து பிரதேச சபைகளைக் கொண்டதாக வலிகாமம் பிரதேசமே உள்ளது. காங்



கேசன்துறை தொகுதியை உள்ளடக்கிய வலி. வடக்கு, கோப்பாயை உள்ளடக்கிய வலி. கிழக்கு, வலி.மேற்கு வலி. தெற்கு மற்றும் வலி.தென்மேற்கு என பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெறுகின்றன. வலி.வடக்கு, வலி.தெற்கு, வலி. தென்மேற்கு என்பவை நிச்சயமாக வெற்றிகொள்ளக்கூடியவை என கூட்டமைப்பு நம்புகின்றது. ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்களென கனமானவேட்பாளர் பட்டியல் கூட்டமைப்பிடமுண்டு.

வலி.கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரமச்சந்திரனின் விருப்பிற்குரியது. கூடிய அளவு வேட்பாளர்களும் அவர் கட்சி சார்ந்தே போட்டிக்களத்திலுள்ளனர். கடுமையான பிரசாரம் மூலம் வென்றுவிட முடியுமென்ற நம்பிக்கை அவர்களிடமுண்டு.

### நல்லூர்

நல்லூர் பிரதேச சபை தொடர்பில் கூட்டமைப்புக்கு அதிகமாகவே நம்பிக்கையுள்ளது. கடந்த பாராளுமன்ற தேர்தலிலும், கூட்டமைப்பு கூடிய கவனம் செலுத்தியிருந்தது.

எது எவ்வாறு இருப்பினும் அரச இயந்திரம் அனைத்து வளங்களையும் பயன்படுத்தி முழுவீச்சில் பிரதேசத்தில் இறங்கியுள்ளது. இவற்றுக்கிடையில் தேசிய, தன்னாட்சி கோஷங்களை மட்டுமே முன்னிறுத்தி கூட்டமைப்பு களம் இறங்கியுள்ளது. யுத்த காலங்களிலும் சரி, சமாதான காலங்களிலும் சரி மக்களுடனேயே வாழ்ந்த வேட்பாளர்களே இன்று கூட்டமைப்பின் பலமாக உள்ளனர்.

பாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூடாததை செய்துவிட்டேன்



**சினிமாவுக்கு** வந்து நடிக்கக் கூடாத படங்கள் சிலவற்றில் நடித்துவிட்டேன். அந்தத் தவறை இப்போது உணர்கின்றேன் என்கிறார் நமீதா. கவர்ச்சியில் புது எல்லைகளைத் தொட்டவர். வேறு எந்த நடிகைக்கும் இல்லாத அளவு புகழைப் பெற்றவர் நமீதா தான். அவருக்காகவே ஒரு டி.வி ஷோ ஆரம்பிக்கப்பட்டு, 6 ஆறு மாதங்களில் அது மெகா ஹிட்டானதும் நமீதாவால்தான்.

தமிழில் இப்போதைக்கு வாய்ப்புக்களை தவிர்த்து வரும் நமீதா, தெலுங்கு மற்றும் கன்னடத்தில் தொடர்ந்து நடித்து வருகிறார். இந்த இரு மொழிகளிலும் தன்னை மையப்படுத்திய கதைகள் கிடைப்பதால் முன்னுரிமை அளிக்கிறாராம்.

ஹைதராபாதில் சமீபத்தில் நிருபர்களை சந்தித்தார் நமீதா அப்போது அவர் கூறுகையில் ''நான் சினிமாவுக்கு வந்து 9 வருடங்கள் ஈகிவிட்டன.

அப்பா அம்மாவுக்கு நான் நடிக்க வந்தது பிடிக்கவில்லை. முதன் முறையாக 'சொந்தம்' என்ற தெலுங்கு படத்தில் அறிமுகமானேன் அப்போது எனக்கு 17 வயது.

மேக்கப் ரூமில் இருந்து அரை ஆடையுடன் வெளியே வந்த என்னைப் பார்த்துவிட்ட அப்பா சங்கடத்தோடு தலையிலடித்துக்கொண்ட காட்சி இன்னும் மனதில் அப்படியே நிற்கிறது.

சினிமாக் காரர்களை கேவலமாகப் பார்க்கும் நிலைமைதான் எங்கும் உள்ளது. அதற்கு சினிமாக்காரர்களும் ஒரு காரணம்தான். மறுக்கவில்லை. இந்த நிலை மாற வேண்டும். நடிகைகளுக்கும் குடும்பம் உள்ளது. உறவினர்கள் இருக்கிறார்கள். அலுவலகம் போய் வருவது போன்ற தொழில் தான் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

## சூர்யாவுடன் கார்த்

**கமர்சியல்** பட இயக்குநரான ஹரி, தனுஷ் ம
'வேங்கை' படம் தற்போது திரைக்கு வந்து ஓடி
அடுத்த பட வேலையில் தீவிரமாக இறங்கிவிட்
சூர்யாவிற்காக கதையை தயார்செய்து கொண்டி
யாம் இதற்கான கதை விவாதத்தை கொடைக்க
தொடங்கிவிட்டாராம். அண்ணன் தம்பி இருவ
கதை நெடுக பின்னிக்கிடப்பதால் சூர்யாவுடன்
இணைந்துகொள்ளலாம் என்கிறார். இ தனால் இ
நடிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கி
ஆரம்பித்துள்ளது. அடடா.... டபுள் ஐஸ்க்ரீம் ஜ



## சினிபிட்ஸ்

- டாப்ஸியின் தமிழ் சினிமா வாழ்க்கை 'ஆடுகளம்' மூலம் மதுரையில் தொடங்கியதை மறக்க முடியாதாம்.
- 8ஆம் வகுப்பு படிக்கும் 15 வயதான கொச்சியை சேர்ந்த லட்சுமி மேனன்,'கும்மி' படத்தில் விக்ரம் பிரபு ஜோடியாக நடிக்கிறார்.
- 'தசாவதாரம்' கவர்ச்சி நடிகை மல்லிகா ஷெராவத், இந்தி இசை ஆல்பம் ஒன்றில் நடிக்க உள்ளார்.
- 'தேனீர் விடுதி' பட இயக்குனர் எஸ்.எஸ்.குமரன் அடுத்து இயக்கும் படத்தில் 9 ஹீ ரோயின்கள் நடிக்கின்றனர்.
- கமர்சியல் படங்களில் இனி அதிகம் தலைகாட்ட மாட்டாராம் பிரசன்னா.
- உபேந்திராவுடன் கன்னடப் படத்தில் நடித்து வருகிறார் இந்தி நடிகை செலினா ஜெட்லி.
- 'ரொம்ப பிடிச்ச ஊட்டி அங்கு இருள் சூழ்ந்த வேளையில் தனிமையில் வாக்கிங் போவது பிடிக்கும்' என டுவிட்டரில் குறிப்பிட்டிருக்கிறார் குஷ்பு.
- சூர்யா, கஜால் அகர்வால் நடிக்கும் 'மாற்றான்' ப் பாடல் டியூன்களை ரோம் நகரில் உருவாக்கிக்கொண்டு சென்னை திரும்பியுள்ளார் ஹரிஸ் ஜெயராஜ்.
- 'கோ' படத்தில் ஜீவா ஏற்று நடித்த போட்டோ ஜர்னலிஸ்ட் வேடத்தை இந்தி ரிமேக்கில் ஷாஹித் கபூர் அல்லது ரன்பிர் கபூர் ஏற்க உள்ளனர்.
- 'ரட்சா' தெலுங்கு படத்தில் ராம் சரண் தேஜாவுடன் நடிக்கிறார் அஜபுமல். இதில் அவருக்கு வில்லன் வேடம்.
- கேரள அரசின் திரைப்பட தேர்வு குழு தலைவராக இயக்குனர் பிரியதர்ஷன் நியமிக்கப்பட உள்ளார்.
- 'ஐ லவ் யூ நமீதா' கன்னட படத்தில் பேராசிரியையாக நடிக்கிறார் நமீதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரி அதிரடி!

ம் தமன்னாவை வைத்து இயக்கிய
காண்டிருக்கிறது. இதையடுத்து தனது
ாம் ஹரி முன்பே சொன்னது போல் நடிகர்
கிறார் இப்படம் அண்ணன் தம்பி கதை
லில் தனது உதவி இயக்குனர்களோடு
தம் முக்கியத்துவம் கொண்ட கேரக்டர்கள்
ந்து அவரது தம்பி கார்த்தியும் படத்தில்
டத்தில் சூர்யாவும், கார்த்தியும் இணைந்து
என்று கோலிவூட் இப்போதே பரபரக்க
ாப்பிட்ட மாதிரி இருக்கே...!


ரௌவுத்திரம்


ஒரு சொல்

# இவ்வளவு மோசமா அஜித்

**பணம்** பணம் பணம் என அலையும் அஜீத், என்ற தலைப்பை பார்த்ததும் அதிர்ச்சியடைந்து விடாதீர்கள். ரசிகர்களே! மங்காத்தா படத்தில் வரும் 2 அஜீத்களில் ஒரு அஜீத்தின் கேரடக்டர்தான் இது. மங்காத்தா படம் குறித்து அஜீத் அளித்துள்ள பேட்டியொன்றில் தான் இந்த தகவலை வெளியிட்டிருக்கிறார்.

தனது 50 வது படமான மங்காத்தா பற்றி அஜீத் அளித்துள்ள பேட்டியில், வெங்கட் பிரபு ஒரு தொழில்முறை இயக்குநர் மிக மிக பக்குவமானவர். அவரோடு பணியாற்றிய நாட்கள் இனிமையானவை. அனைவரையும் அனுசரித்து வேலை வாங்குவதில் வெங்கட்டுக்கு நிகர் யாருமில்லை. நான் இதுவரை வேலைபார்த்த இயக்குநர்களிலேயே பெஸ்ட் என்றால் வெங்கட்டைத்தான் சொல்வேன். இந்தப் படத்தில் நான் வினாயக மாதவன் என்ற ரோலில் வருகிறேன். பணம் பணம் என்று பணத்தையே குறியாகக் கொண்ட கேரக்டர் அது. இதுவரை நீங்கள் பார்த்திராத ஒரு மோசமான கேரக்டர். நிச்சயம் உங்களை ஆச்சரியப்படுத்தும் இன்னொரு கேரக்டர் பொலிஸ் கேரக்டர் எனத் தெரிவித்தார்.


நண்டு பாஸ்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நிலைத்திருக்கும்



**வீரபாண்டிய கட்டப்பொம்மனில் சிவாஜி பேசும் வசனத்தையும், பராசக்தியில் நீதிமன்றத்தில் பேசும் வசனத்தையும் பல நடிகர்கள் பேசி பழகி நேர்முகத் தெரிவுக்குச் சென்றுள்ளார்கள்**



# நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

தனது திறமையான நடிப்பால் நடிப்புலகில் சிகரம் தொட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 10 ஆவது நினைவு தினம் 21. 07. 2011 ஆகும்.

உலகெங்கும் பல்லாயிரக்கணக்கான ரசிகர் பட்டாளங்களை தன் வசப்படுத்தி வைத்திருந்த நடிகர் திலகத்தை நினைவு கூரும் வகையில் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.


தமிழ் சினிமா உலகில் 'பராசக்தி' தொடங்கி 'படையப்பா' வரை பிரகாசித்த சிவாஜி கணேசன் யதார்த்தப் படங்களுடன் வரலாற்று, புராண படங்களிலும் நடித்துள்ளார். இவரின் நடிப்பாற்றலை இவருக்கு பின் வந்த பல நடிகர்கள் தமது நடிகர் தெரிவுக்காக செல்லும் போது பயன்படுத்தி வந்துள்ளார்கள்.

வீரபாண்டிய கட்டப்பொம்மனில் சிவாஜி பேசும் வசனத்தையும், பராசக்தியில் நீதிமன்றத்தில் பேசும் வசனத்தையும் பல நடிகர்கள் பேசி பழகி நேர்முகத் தெரிவுக்குச் சென்றுள்ளார்கள்.

தமிழ் நாட்டில் வாழ்ந்த , வாழும் தமிழ் மக்களுக்கும், உலகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கும், இந்திய நாட்டிற்கும் பெருமை தேடித் தந்து வரும், தன் நடிப்பால் தமிழ்ப் பண்பாடுகளைச் சிறப்பாக எடுத்துக்காட்டியவரும், மேற்கூறிய அனைத்துத் தரப்பினரையும் மற்றும் உலக மக்களில் பலரையும் தனது நடிப்பாற்றலால் மகிழ்ச்சிப் படுத்தியவருமாகிய நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசனின் 10 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது பெருமைகள், சாதனைகள் நினைவு கூருவது மிகவும் பொருத்தமாகும்.

நடிப்புல அகராதியாக விளங்கும் நடிகர் திலகத்தை தமிழக அரசு பலமுறை சிறந்த நடிகராகத் தெரிவு செய்து சிறப்புப் பட்டங்களை வழங்கியுள்ளது. இந்திய அரசாங்கம் பத்மஶ்ரீ, பத்மவிபூஷண், தாதா சாகேப் பால்கே போன்ற சிறப்பு பட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளது. அமெரிக்க அரசாங்கம் தனது நாட்டிற்கு அழைத்து நாயகரா நகரத்திற்கு ஒரு நாள் அதிபராக நியமித்து கௌரவம் கொடுத்திருந்தது. பிரான்ஸ் நாடு தனது நாட்டின் உயர் கௌரவ விருதான 'செவாலியர்' விருதை தனது நாட்டிற்கு அழைத்து வழங்கிக் கௌரவித்தது. இவை இவருக்கு கிடைத்த முக்கிய கௌரவங்களாகும்.

1928 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி பிறந்த சிவாஜி கணேசன் 1952 ஆம் ஆண்டு மணவாழ்க்கையையும், திரையுலக வாழ்க்கையையும் ஒரு சேரத் தொடங்கி , வெற்றி நடைபோடத்தொடங்கினார். முதலாவது படமாகிய 'பராசக்தி' யில் கதாநாயகனாக அறிமுகமாகி வெள்ளிவிழாப்



படமாக பெரு வெற்றி பெறச் செய்து தமிழ்த் திரை உலகில் சாதனை படைத்தார். திறமையாகத் தமிழ் பேசும் இவரது நாவன்மையை உலகத் தமிழினம் கண்டு வியந்தது.பராசக்தியைத் தொடர்ந்து இவரின் பல நூறுநாள் படங்கள் வெளிவந்தன. பல வெள்ளிவிழாப் படங்கள் தொடர்ந்தன. வேறு எந்த தமிழ் கதாநாயக நடிகருக்கும் இல்லாத 100 நாள் படங்கள் 100 க்கு மேலும் வெள்ளிவிழாப் படங்கள் 15 க்கு மேலும் அமைந்தன. இவ்வளவும் மற்றெந்த கதாநாயக நடிகருக்கும் இல்லாதவாறு சராசரியாக ஒரு வருடத்திற்கு 8 படங்கள் வீதம் வெளியிட்டு நடந்தேறிய சாதனைகளே.

இவருக்கு மட்டுமே உரித்தான சாதனைகளில் சில பின்வருமாறு:-

ஒரே வருடத்தில் வெளிவந்த இரு படங்கள் வெள்ளி விழாக் கண்டன.

1959 இல் - வீரபாண்டிய கட்டபொம்மன் , பாகப்பிரிவினை

1961 இல் - பாவமன்னிப்பு, பாசமலர்

1972 இல் - பட்டிக்காடா பட்டணமா, வசந்தமாளிகை

1983 இல் - நீதிபதி, சந்திப்பு

ஒரே தினத்தில் வெளிவந்து இரு படங்களும் 100 நாள் ஓடிய சாதனை படைத்த பல படங்களும் உள்ளன.

அதே போல கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் ஒரே தினத்தில் வெளியிட்டு இரு படங்களும் 100 நாள் ஓடிய சாதனை வேறெந்த நடிகருக்கும் இல்லாதவாறு இவர் படங்களுக்கு மட்டுமே உண்டு (தீபம், அந்தமான் காதலி)



இலங்கையில் மற்றைய தமிழ் நடிகர் எவருக்கும் இல்லாதவாறு வெள்ளிவிழாப் படங்கள் கூடுதலாக அமைந்தன. அவை பராசக்தி, வசந்தமாளிகை, உத்தமன், பைலட் பிறேம்நாத் என்பன.

இவைகள் வசூலில் சாதனை புரிந்தவையாகும். வேறு எந்த நடிகரின் படமும் யாழ்ப்பாணத்தில் வெள்ளிவிழாக்காணவில்லை. அத்துடன் யாழ். நகரில் அந்தக் காலத்தில் வார நாட்களிலும் வசூலிலும் உச்ச நிலையில் இருப்பவை சிம்மக்குரலோனின் படங்கள் தான் என்பது யாவரும் அறிந்ததே.

திரை உலகத்தில் பல சரித்திர, புராண திரைப்படங்களை அளித்து மக்களை உணர்ச்சி பூர்வமாக மகிழ்வித்த காவியநாயகன் என்பதை இன்றைய தினத்தில் நினைவுகூருகின்றோம். இவரது மறைவு கலை உலகத்திற்குப் பேரிழப்பாகும் என்பதையும் குறிப்பிட முடியும்.

**சிவாஜிரசிகர்கள்**
*யாழ்.மாவட்டம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1970 பொதுத் தேர்தலும் அதன் விளைவுகளும் (பகுதி-11)

1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் பெறுபேறுகளின் விளைவாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதில் கலாநிதி என்.எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா தலைமையிலான லங்கா சமசமாயக் கட்சியும் டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்க, பீட்டர்கெனமன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அங்கம் வகித்தன.

1970 களில் பதவிக்கு வந்த இந்தக் கூட்டரசாங்கம் இனவாரியான தரப்படுத்தல் முறையை பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் அறிமுகம் செய்து வைத்தது. இது உயர்கல்வி பெற முனைந்த தமிழ் மாணவர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. அதாவது பல்கலைக்கழக புதுமுக வகுப்பில் ஒரே பாட விதானங்களில் சிங்கள மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களை பல்கலைக் கழக அனுமதிக்கு குறைந்த புள்ளியும் தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கூடிய புள்ளிகளையும் பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஒன்று உருவானது. இனவாரியான இந் தரப்படுத்தல் மேலும் தமிழ் மாணவர்களை விரக்தி நிலைக்குத் தள்ளியது. 1948 களில் பிரஜாவுரிமைச்சட்டம் 1950 களில் நடுப்பகுதியில் மொழிப்பிரச்சினை 1960 களில் வேலைவாய்ப்பு, பதவியுயர்வு, சம்பள உயர்வு போன்றவற்றில் புறக்கணிப்பு என வியாபகம் பெற்ற பேரினவாதம் 1970 களில் கல்வித் துறைக்குள் நுழைந்து தமிழ்ச் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் விசாலிப்புப்பெற்றது.

இதே வேளையில் 1970களில் ஸ்ரீமாவோ அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்திய சிங்கள மொழி பேசும் இளைஞர்களை தமது எதிர்காலம் தொடர்பில் அச்ச உணர்வுகளை வெளிப்படுத்த தொடங்கினார்கள். இதன் விளைவாக 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி சிங்கள இளைஞர்கள் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபடலானார்கள். இந்தக் கிளர்ச்சி 'சேகுவேரா கிளர்ச்சி' என்றும் 'ஜே.வி.பி.கிளர்ச்சி' என்றும் அழைக்கப்பட்டது. இந்தக்கிளர்ச்சி பின்னர் இந்திய மத்திய அரசின் உதவியுடன் அடக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு இலங்கையில் சோசலிச ஜனநாயக குடியரசு ஒன்றை உருவாக்கும் நோக்குடன் புதிய குடியரசு அரசியல் யாப்பு வரையப்பட்டது. 1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பாராளுமன்றத்திற்குத் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அரசியல் நிர்ணய சபை கொழும்பு 'ஒவரங்கலா' மண்டபத்தில் கூடியது. இந்த அரசியல் நிர்ணயசபையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பத்தில் பங்குபற்றிய போதும் மொழியுரிமைகள் தொடர்பில் எதுவித இணக்கத்தையும் அந்த அரசியலர் நிர்ணய சபையால் அடைய முடியாதபடியால் தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக்கட்சி அதிலிருந்து வெளியேறியது.

இதன் பின்னர் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் உருவாக்கத்திற்கு கதநாயகனாக நின்ற அமைச்சர் கொல்வின் ஆர்.டி. சில்வாவையும் பொதுநிர்வாகத் துறை, மற்றும் நீதியமைச்சருமான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவையும் தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் சந்தித்து தமிழ் மக்களது உரிமைகள் தொடர்பில் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றி எடுத்துரைத்து வலியுறுத்திக் கொண்டார்கள். ஆனால் வலதுசாரியான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் இடதுசாரியான கொல்வின் ஆர். டி.சில்வாவும் உத்தேச அரசியல் யாப்பில் தமிழர்களது உரிமைகள் எவற்றையுமே சேர்க்க முடியாது என்று கையை விரித்து விட்டார்கள், என தந்தை செல்வா கொள்ளுப்பிட்டி அல்பிரட் ஹவுஸ் வீட்டில் வைத்து எனக்குச் சொன்னார்கள்.

மேற்படி யாப்பு (1972) இற்கு முந்திய சோல்பரி யாப்பு வழங்கிய சிறுபான்மையினருக்கான சட்டப் பாதுகாப்பு போன்ற உரிமைகளையும் பறித்து எடுத்து விட்டார்கள். குறிப்பாக முன்னைய சோல்பரி யாப்பின் 29ஆம் ஹரத்து வழங்கிய சட்ட ஏற்பாடுகள் யாவும் நீக்கப்பட்டன. இந்த 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு அமுலுக்கு வந்த 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22-24ஆகிய நாட்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த அரசியல் யாப்பை ஏற்று அமைச்சர் செல்வா, குமாரசூர்யா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.எக்ஸ். மாட்டின் (யாழ்ப்பாணம்) எம். சி. சுப்பிரமணியம் (நியமன உறுப்பினர்) இராஜன் செல்வநாயகம் (மட்டக்களப்பு) சிமோல் அருளம்பலம் (நல்லூர்) ஆ. தியகராஜா (வட்டுக் கோட்டை) ஆறுபேரும் கையொப்பம் இட்டவை இதை அடுத்து வந்த 1977ஆம் ஆண்டு பொதுதுத் தேர்தலில் தமிழ் மக்களால் அவர்கள் யாவரும் தோற்கடிக்கப்பட்டார்கள். 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து பேரினவாதம் நிறுவனமயப்படுத்தப்பட்டு புத்துயிர் ஊட்டப்பட்டது.

**(தொடரும்)**

## சட்டமும் சமூகமும் 37






சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# பயபக்தியோடு எளிமையாக ஆலயம் செல்லும் காலம் எப்போது வரும்?

**யா**ழ். குடாநாட்டில் உள்ள சைவ ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. மேற்படி உற்சவங்களில் கலந்து கொள்ளும் ஆண்களும் பெண்களும் தங்கள் தங்கள் கிராமங்களில் உள்ள சைவ ஆலயங்களுக்குச் சென்று ஆசாரசீலர்களாகத் தொண்டுகள் செய்தும் பக்திபூர்வமாக வழிபட்டு தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிவருவதை காணமுடிகிறது.

சில குடும்ப பெண்கள் தங்கள் அடிப்பெட்டிகளுக்குள் பூட்டிவைத்துள்ள விதவிதமான சாறிகளையும் உடுத்துக் கொண்டும் கழுத்து நிறைய தங்க ஆபரணங்களை அணிந்தும் இளம் பெண்கள் விதமான கலர்களில் பஞ்சாபி அணிந்தும் மற்றும் நவ நாகரீக உடை அணிந்தும் களியாட்ட விழாக்களுக்கு செல்வது போல் செல்கின்றார்கள்.

யாழ். குடாநாட்டில் திருட்டுச்சம்பவங்கள் தினசரி நடைபெற்றுவருவதாக பத்திரிகைகளில் காணமுடிகிறது. இவ்வாறான திருடர்களில் எத்தனை பேர் அகப்பட்டு தண்டிக்கப்படுகின்றார்கள் இன்று தங்கபவுணின் விலை 45 ஆயிரத்தையும் தாண்டிவிட்டது. இதனால் தங்க நகைகள் திருடும் திருடர்களும் குடாநாட்டில் அதிகரித்து வருகின்றனர். ஆலய உற்சவங்களுக்கு செல்லும் பெண்களுக்கு தங்க ஆபாரணங்கள் அவசியமா? துன்பங்களை நாங்களே தேடிச்செல்கின்றோமே தவிர துன்பங்கள் எங்களைத் தேடி வருவதில்லை. ஆகவே ஆலய உற்சவங்களுக்குச் செல்லும் ஆண்களும், பெண்களும் தங்க நகைகள் அணிவதை தவிர்த்துக் கொள்வது நல்லதல்லவா? இந்த இடத்தில் ஒரு சினிமா பாடலின் வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றது. "திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்கும் அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்கும் திருடனாப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது..." பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் தத்துவ பாடல் இது.

யாழ் குடாநாட்டில்அன்றாடம் உழைத்து சீவியம் நடத்தும் குடும்பங்கள் ஒரு புறம், கைநிறைய மாத வருமானம் பெறுவோர் ஒருபுறம் கொள்கைலாபம் வைத்து விற்கும் வியாபாரிகள் இன்னொரு புறம் இதை விட குடாநாட்டில் இன்று வீட்டுக்கு ஒரு ஆணோ பெண்ணோ வெளிநாடுகளில் உத்தியோகம் பார்த்து மாதம் மாதம் தங்கள் வீடுகளுக்கு பெரும் தொகை பணத்தை அனுப்பி வருகின்றார்கள். இவர்களின் வீட்டுக்காரர்கள்அப்பணத்தை வங்கிகளில் மாற்றி மனம் போன போக்கில் செலவழித்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். தங்கள் உறவுகளில் வெளிநாடுகளில் எப்படி உழைக்கின்றார்கள். என்று இவர்கள் சிந்திப்பதாக தெரியவில்லை. பனியிலும், குளிரிலும் கஷ்டப்பட்டு உழைத்து அனுப்புவதை எவரும் உணருவதாக அறியமுடியவில்லை. இது இவ்வாறு இருக்க குடாநாட்டில் கலாசார சீரழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரியவருகின்றது. யுத்த முடிவுக்கு வந்த பின்பு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு சுதந்திரக் காற்று வீச ஆரம்பித்துள்ளது. வீதிகளில் ஒரே ஜனக்கூட்டம் அதோடு வீதிகளில் அதிக எண்ணிக்கையான வாகனங்களின் போக்கவரத்து. எங்கும் பார்த்தாலும் வியாபார நிலையங்கள்.

இதேவேளை சில பெண்கள் அளவுக்கு மீறிய பண வருமானத்தால் தங்கள் தமிழ் பண்பாட்டை மறந்து நவநாகரீக உடை அணிந்து நகர் புறங்களில் பொழுதை இனிமையாக கழித்து வருவதால் சில விரும்பாத சம்பவங்கள் உருவாக அவர்களே வழி வகுத்து கொடுத்துவருகின்றார்கள். குறிப்பாக எந்த இளம் பெண்ணும் தமிழ் கலாசாரத்தை பேணும் வகையில் குங்குமப்பொட்டுடன் ஆடை உடுத்து பூவோடும் பொட்டோடும் வந்தால் எந்த ஆண்களும் காம இச்சையோடு திரும்பிப் பார்க்கமாட்டார்கள். தெய்வீக உணர்வு தோன்ற வழிபிறக்கும். ஆகவே நாம் ஒவ்வொரு அற்ப ஆசைகளுக்குள் அகப்படாது ஒழுக்க சீலர்களாக பொன் பொருள் ஆசை அற்றவர்களாக மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து வந்தால் சமூகம் மதிக்கும்.

• **வேலணை நிருபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 37

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | ■ |
| 08 | ■ | 09 | 10 | 11 | ■ | ■ | 12 |
| 13 | 14 | ■ | 15 | ■ | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | ■ | 24 | 25 |
| 26 | 27 | 28 | ■ | 29 | 30 | 31 | ■ |
| ■ | 32 | 33 | 34 | ■ | 35 | 36 | 37 |
| 38 | ■ | 39 | 40 | 41 | 42 | ■ | 43 |
| 44 | 45 | ■ | 46 | 47 | 48 | 49 | ■ |

### இடமிருந்து வலம்

1. சமையல் கலையில் சிறந்து விளங்கிய மன்னன்
9. எண்ணெய் (குழம்பியுள்ளது)
13. இது 12 உள்ளது
19. தாமரை (குழம்பியுள்ளது)
24. 10 (முதல் எழுத்து இல்லை)
26. முதல் குடியினர் (திரும்பியுள்ளது)
29. மேளம் (திரும்பியுள்ளது)
32. பெண்களின் குணங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
35. பழைய கால நடிகை
39. வீட்டினுள் பொருத்தப்படும் பரத்தள பாடம்
44. கொம்பு இல்லாம மான் (திரும்பி யுள்ளது)
46. ஒரு ராசி

### லிருந்து கீழ்

1. சிவனின் ஒரு வடிவம்
3. புஸ்பம் (இறுதி எழுத்தில்லை)
4. காடு (குழம்பியுள்ளது)
5. கண்ணனின் காதலி
12. தண்ணீரில் வாழும் பறவை
14. வனராஜன்
17. கல்சிய சத்து மீன்
21. குற்றிக்காசு (குழம்பியுள்ளது)
23. குடிக்க உதவும் உறுப்பு
30. பாடலின் முதல் அங்கம் (தலைகீழ்)
34. இரண்டு தர இரண்டு
37. பெற்றவள்
38. இரும்புச்சத்துள்ள உணவு
41. பாரம் (முதல் எழுத்தில்லை)

### குறுக்கெழுத்துப் போட்டி 35க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சோ | மா | லி | யா | ■ | ச | ம | ன் |
| யா | ர் | ■ | க | ரு | வா | டு | ■ |
| ■ | ழ | ல | ம் | ப | ல் | ■ | ந |
| பு | ■ | ட் | ■ | த | ■ | கு | க |
| த | வி | டு | ■ | தி | ரு | மா | ல் |
| ல் | ச | ■ | ச | ■ | ம | ரி | ■ |
| வ | ம் | ச | ம் | ■ | த | க் | கை |
| ன் | ■ | தி | பா | ■ | ம் | கா | பு |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. திருமதி தி.சிதம்பரநாதன்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
2. ப.மகேந்திரதாசன்
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
3. எஸ்.பரந்தாமன்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுக்கெழுத்துப் போட்டி 37க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.

**அனுப்பவேண்டிய முகவரி**
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்ட சாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




'இந்தப் படத்தில் துணியில்லாமல் நடிக்க எப்படி ஒத்துக் கொண்டீங்க?''
நிருபர்
''துணிவோடுதான்!''




ஒரு பிச்சைக்காரன்: என்னப்பா இன்றைக்கு கெலக்ஷன் எப்படி?
மற்ற பிச்சைக்காரன்: வட்டியைக் கேட்கிறாயா பிச்சையைக் கேட்கிறாயா?




''என்னங்க நாம இதுவரை இரண்டு பேரா இருந்தோம் இனி மூன்று பேராகப் போகிறோம்!''
''அடி கள்ளி, சொல்லவே இல்லையே?''
''அதில்லீங்க எங்க அம்மா நாளைக்கு ஊரிலிருந்து வர்றாங்க!''




''நீ ஒரு ஆம்பிள்ளை சிங்கத்தைப் பெத்து வச்சிருக்கிறாயே எங்கே அவன்?''
''சர்க்கஸிலே வேலை பார்க்கிறான்!''




''அவன் கொடுத்து வைத்தவன்!'' எப்படிச் செல்றே?''
''அவனுக்கு மாதா மாதம் வட்டிப் பணம் வருதே!''




''என்னடி துணியை நீ கழுவுறே வோஷிங் மெஷின் எங்கே?''
''ஆபீஸுக்குப் போயிருக்குடீ!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ்ப்பாணப் பெண்களின் இன்றைய நிலை தொடர்பில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் தொடரும் நிலையில் யாழ்ப்பாணத்துப் பெண்களின் பெருமைக்கு வேட்டு வைக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றுவருகின்றமை அறிந்த விடயமே. இருந்தும் சில சம்பவங்கள் சிலருக்குத் தெரிந்தாலும் பல சங்கதிகள் பலருக்கு தெரியாமல் இருக்கலாம்.

யாழ். குடாநாட்டையும் தென்பகுதியையும் தொடுக்கும் A-9 நெடுஞ்சாலை மக்கள் போக்குவரவுக்காக திறக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்தோடிவிட்ட நிலையில் பாதை திறப்பினால் பல நன்மைகள் ஏற்பட்டது உண்மையோ என்னவோ யாழ்.குடாநாட்டுப் பெண்களின் வாழ்நிலையிலும் காத்திரமான மாறுதல்களை ஏற்படுத்திய பெருமை A-9 நெடுஞ்சாலைக்கே உரியது என்றால் அதில் தவறிருக்க முடியாது. இதைப் பற்றிய வாதப்பிரதிவாதங்களை, வியாக்கியானங்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு விடயத்துக்கு வருவோம்.

தற்போது தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் அதிகளவானோர் யாழ். குடாநாட்டிற்கு படையெடுத்து வருகின்றனர். தென்னிலங்கை மக்கள் யாழ். குடாநாட்டில் கால் பதிக்கும் போது அவர்கள் தம் மனங்களில் ஒரு வித பூரிப்பு. இழந்ததை மீட்டுவிட்டோம் என்பதே அவர்களது பூரிப்பிற்கு காரணம்.


''காதற்ற ஊசியும் வராது காண் கடைவழிக்கே'' என்கிற பழமொழி உண்டு. நாம் இப்பூமித்தாயில் பிறக்கும் போது கூட ஒன்றையும் கொண்டு செல்லப்போவதுமில்லை. இதுவே உலக நியதியும், வாழ்வியல் யதார்த்தமும் ஆகும். மாவீரன் அலெக்சாண்டர் பற்றி அனேகருக்கும் தெரிந்திருக்கும். எல்லா நாட்டையும் தனது குடையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற அவாவில் பல நாடுகளை வெற்றி கொண்டவன் தனது வாழ்வின் இறுதிப் பயணத்தின் போது சவப் பெட்டிக்கு வெளியே தனது இரு கைகளும் தெரியும் படி கொண்டு செல்ல வேண்டும் என்பதே அவனது இறுதி விருப்பமாக இருந்தது. நான் இங்கு பிறக்கும் போது வெறுங்கையுடன் தான் பிறந்தேன் அதுபோல இறந்து போனாலும் நான் ஒன்றையும் கொண்டுபோகப்போவதுமில்லை. ஆனால் வாழ்ந்த காலப்பகுதியில் நான் அடைந்த புகழ், தேடியசெல்வம், ஈட்டிய வெற்றி எல்லாமே பிரயோசமில்லாமற் போய்விட்டன என தனது வாழ்வின் இறுதிப் பயணத்திற்கு தயார்ப்படுத்திக்கொண்டிருக்கும் போது சவப் பெட்டிக்கு வெளியே எனது கைகள் தெரியும்படி கொண்டுசெல்லும்படி தனது சேவகர்களுக்கு கூறியதாக வரலாறு கூறுகிறது. இச்சம்பவத்தை எமது வாழ்வியல் நிலைகளுடனும் நாட்டுநடப்புக்களுடனும் பொருத்திப்பார்க்கும் போது பல வாழ்வியல் அர்த்தங்கள் வெளிப்படும். இவ்விடயத்தைப் பற்றியும் அதிகம் பேச முடியவில்லை. சரி அது இருக்கட்டும், தென்பகுதியிலிருந்து அதிகளவு வரும் மக்களில் இளைஞர்களும் கணிசமான அளவு இடத்தைப் பிடித்துள்ளனர். உல்லாசம் அனுபவிப்பதற்கு எல்லோரும் தேர்ந்தெடுப்பது பெரும்பாலும் கடற்கரையையே. யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை உல்லாசப்பயணிகளுக்கென காரைநகர் கசூரினா கடற்கரை, சாட்டி கடற்கரை என்பன ஒதுக்கப்பட்டுள்ளன. இக்கடற்கரைக்கு எம்மவர்களை விடவும் தென்பகுதி மக்களே அதிகம் வந்து போகின்றனர். இக்கடற்கரைகளில் நம்மவர்கள் பலர் கலாசார சீரழிவு நடத்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது தெரிந்த விடயம். இருந்தும் இச்சம்பவங்களுக்கு முத்தாய்ப்பாக இரவு வேளைகளில் குவியும் இளைஞர்கள் குடாநாட்டைச் சேர்ந்த பெண்களுடன் உல்லாசம் அனுபவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக சாட்டிக் கடற்கரையில் இரவுவேளைகளில் பொழுதைக் கழிப்பதற்காக வரும் இளைஞர்கள் பலருக்கு உடல் விருந்து படைக்க யாழ். குடாநாட்டு பெண்கள் சிலர் முற்பட்டுள்ளனர். இத்தகைய இளைஞர்களுக்கும் கலாசார துர்நடத்தைகளில் ஈடுபடுகின்ற பெண்களுக்கும் இடைத்தரகர்களாக சில ஆட்டோச் சாரதிகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடயத்தை வாசிக்கும் போது யாரும் இனவாதக் கண்ணோட்டத்துடன் தவறாக நோக்கவேண்டாம்.

யாழ்.குடாநாட்டிலுள்ள பெண்கள் கட்டுக்கோப்பானவர்கள். பொழுது சாயும் முன்னரே வீட்டுக்குள் முடங்கிவிடுவார்கள். ஒழுக்கம் மிகுந்தவர்கள், கலாசார அடையாளங்களை இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்கள் என்றெல்லாம் கூறப்பட்டது அந்தக்காலம். இப்போது அதெல்லாம் மலையேறிவிட்டது. இரவு வேளைகளில் ஒரு பெண் கடற்கரைக்குச் செல்லுகின்றாள் என்றால் அவளுடைய குடும்பத்தவர்கள், அதாவது தாய் தந்தையர்களின் விருப்பத்திற்கிணங்க ஒரு பெண் நிச்சயமாக செல்லமாட்டாள். ஆனால் இவ்வாறு இரவுவேளைகளில் எதுவித பயமோ, பீதியோ இன்றி சர்வசாதாரணமாக முன்பின் தெரியாத இளைஞர்களுடன் உல்லாசம் அனுபவிப்பதற்காக செல்வது இன்றைய பெண்களின் நிலை தொடர்பில் பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிக்கும் என்பது நிச்சயம். அண்மையில் பிரசித்தமான முருகன் ஆலயத்தின் முன்பாக இரவு 8 மணியிருக்கும் மூன்று இளம்பெண்கள் வந்தனர். ஏற்கனவே அவர்களுக்காக காத்திருந்த குறித்த சில இளைஞர்களுடன் அந்த மூன்று பெண்களும் அருகருகே இருந்து அரட்டையடித்தபடி இருந்தனர். சற்று நேரம் கழிய அந்த இளம் யுவதிகள் அவ்விளைஞர்களுடன் ஒன்றாக சேர்ந்து கதைத்தபடி எங்கோ சென்று மறைந்தனர். உண்மையில் இவர்கள் உறவினர்களாக இருக்கமுடியாது. காரணம் அவர்களது நடை, உடை, பாவனைகள் அவர்கள் உறவினர்கள் அல்லர் என்பதை உணர்த்தியது. யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக கலாசார சீர்கேடுகள் பற்றிய செய்திகளை பத்திரிகைகளில் அடிக்கடி பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. நாமும் பல சம்பவங்களை யாழ் ஓசை வாயிலாக சுட்டிக் காட்டி வருகின்றோம்.

எமக்கு பல தகவல்கள் வந்தாலும் அவற்றைச் சரி என உறுதிப்படுத்திய பின்னரே பிரசுரிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. சில சம்பவங்கள் பற்றி நாம் கூடிய அவதானிப்பைச் செலுத்தினாலும் அவற்றைப் பிரசுரிப்பதில் பல்வேறு சிக்கல் நிலைகள் காணப்படுகின்றன.

இங்கு நடக்கும் கலாசார சீர்கேடான சம்பவங்கள் அனைத்தையும் அப்படியே பிரசுரிக்கும் போது பத்திரிகைக்கு இருக்கும் சட்டங்கள் கோட்பாடுகளுடன் முரணிக்கும் சந்தர்ப்பங்களையும் நாட்டின் களநிலை யதார்த்தத்தையும் புறநிலை உண்மைகளையும் புறம் ஒதுக்கி விட்டு பிரசுரிக்கமுடியாதென்பதை வாசகர்களாகிய உங்களுக்கு சுட்டிக்காட்டுகிறோம்.

எது எப்படியோ யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கும் கலாசார சீரழிவுகளை பத்திரிகையில் நாகரிகத்துடனும் அதற்குரிய பாணியிலும் உங்களுக்குச் சொல்வதற்கு யாழ் ஓசை பின்னிற்காது என்றதுடன் இது சம்பந்தமான உங்கள் தரப்புக் கருத்துக்களையும், ஆக்கங்களையும், எண்ண ஓட்டங்களையும் எமக்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் ஆதரவும் எமது கருத்தியலுக்கு மேலும் வலுச்சேர்க்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ளவிரும்புகிறோம். அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் சமூக விரோத சம்பவங்களை ஆதாரத்துடன் முன்வைத்தால் அவற்றையும் சமூக விழிப்புணர்வுக்காக பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.



— உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ்!

## அப்பாவிகளை நெருங்காது பாதுகாப்போம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று தமிழர்களை பீதி செய்யக்கூடிய விடயமாக HIV வைரஸ் தாக்கம் தலைதூக்கியுள்ளது. இதனால் எதிர்கால சமூகமே கேள்விக்குறியாகும் நிலை தோன்றுமோ என மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே HIV வைரஸ் என்றால் என்ன என்பதை பாமர மக்களும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் தெளிவான விளக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பது சுகாதார அதிகாரிகளின் கடமையாகும். இருந்தாலும் கூட பாடசாலை மட்டத்திலே சுகாதார அதிகாரிகள் ஆசிரியர்களின் ஊடாக மாணவர்களுக்கு சென்றடையக்கூடிய வகையில் தெளிவான விளக்கத்தை விளங்கியபோதும் அது எவ்வளவு தூரம் பாமரமக்களைச் சென்றடையும் என்பது கேள்வியாகவே உள்ளது.HIV வைரஸ் தொற்றிக் கொள்வதற்கான வழிகள் பலவாக இருந்தாலும் எமது சமுதாய மாற்றங்களும் இதற்கு வழிகோலுகின்றன.

தமிழ் கலாசாரத்தின் படி ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்க்கை முறையினையே எமது மூதாதையர் பின்பற்றி வந்தனர். இக்காலத்தினை எமது இளைய தலைமுறையினர் பின்பற்றுகின்ற போதும் திருமணத்திற்கு பின்பு தான் பாலியல் உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்று மரபுக்கோட்பாடு மாறிக் கொண்டே போகின்றது. இதற்கு உதாரணமாக அண்மையில் பாடசாலை மாணவிகள் பலர் கர்ப்பம் தரிப்பதாக வந்த செய்திகளைக் குறிப்பிடலாம். இச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டதா அல்லது தற்செயலானதா என்பதை அறிய வேண்டிய கடமை கல்விமான்களின் கைகளில் தான் உள்ளது.

மதரீதியான நம்பிக்கை வலுவிழந்து செல்கின்றமையும் அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக அமைகின்றது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இன்று கையடக்கத்தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி என்பவற்றின் பாவனைகளின் அதிகரிப்பால் கடவுள் மீது உள்ள நம்பிக்கை தளர்கின்றது. நம்பிக்கை தளரும் போது பயம் இல்லாது போகின்றது. இதனால் குற்ற உணர்வு அற்றுப் போய் தப்பான வழிகளில் செயல்பட தூண்டப்படுகின்றார்கள்.

பணத்திற்காகவும், பாலியல் மோகத்தாலும் ஈர்க்கப்பட்டவர்கள் தப்பான வழிகளில் சென்று தப்பானவர்களுடன் பழகி HIV வைரசை பெற்றுக்கொள்வதுடன் அதனை பரப்பியும் வருகிறார்கள்.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களும் இவ் HIV வைரஸை கொண்டு வந்து அதனூடாகவும் பரவுகின்ற சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இந்த கொடிய ஆட்கொல்லி வைரஸ் அப்பாவிகளை நெருங்க விடாது பாதுகாத்துக்கொள்ள வேண்டியது சுகாதார அதிகாரிகளின் பொறுப்பான கடமையாகும்.

வைத்திய நிலையங்களில், குருதி மாற்றீடு, ஊசிபோடுதல் போன்ற செயற்பாடுகளில் பணிபுரிவோரை சமூக அக்கறையுடன் செயற்பட அறிவுறுத்தல் வேண்டும்.

சிகை அலங்கரிப்பு நிலையங்களில் ஒருவருக்கு பாவித்த சவர அலகை (பிளேட்) மற்றவருக்கு பாவிக்காது தவிர்க்க வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட விடயங்கள் நடைமுறையில் உள்ள போதும் அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பாடசாலை ஆசிரியர்கள் இதில் முக்கிய கவனம் எடுத்து மாணவ மாணவிகளுக்கு தெளிவுபடுத்தி சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

பாடசாலைகள் மதரீதியான கலாசார பண்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தல், மாணவர்களுக்கு ஆன்மிக பற்றை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றைச் செய்ய வேண்டும்.

மகளிர் அமைப்புக்கள் தாங்களாகவே முன்வந்து பெண்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் நம்மை நாமே அழித்துக் கொள்ளுவதற்கு இது ஒப்பாகும்.

பெற்றோர்கள் பிள்ளைகள் மீது அக்கறையுடன் நடந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளை தனிமைப்படுத்துவது, தனித்துவிடுவது போன்ற செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கம் இடையில் நெருங்கிய உறவு இருத்தல் வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை கையாண்டுவந்தால் HIV வைரஸ் தொற்றுவதை தடுத்துக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் நெறிதவறாது வாழ்ந்த சமூகம். இன்று வழி தவறி செல்லுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் உள்ளது. இனி வரும் காலத்திலாவது சமூகப் பொறுப்புடன் நாம் அனைவரும் செயற்படுவோம்.

**பழனித்துரை தர்மகுமாரன்**
**ஆசிரியர்**
**(உடுவில் மகளிர் கல்லூரி)**

# மூலிகை மருத்துவம்

## வெண்டி

**B.N Hibisus esculentus**

**E.N Edible hibisus**



**மறுபெயர்:-** வெண்டுக்காய்

**உபயோகம்:-** இலை, காய்

**சுவை:-** இனிப்பு

**செய்கை :-** குளிர்ச்சியுண்டாக்கி
உள்ளழல் ஆற்றி
சிறுநீர் பெருக்கி
காமம் பெருக்கி
வறட்சி அகற்றி

**குணம்:-** கிரகணி, அதிசாரம், வெண்சீதரத்தம் போன்றன குணமாகும்

**உபயோகம்:-** வெண்டிப்பிஞ்சை துண்டு துண்டாக வெட்டி 3 அல்லது 4 பலம் எடுத்து 1/2 படி நீர் விட்டு குறுக்கி வடித்து வைத்துக் கொண்டு சர்க்கரை ஒரு வராகன் கட்டிக்கொடுக்கவும். கொடுக்க வேண்டிய அளவு 1/2-1 3-4 மணித்தியாலயம்

தீரும் ரோகம், வெள்ளை, இருமல் , நீர்க்கடுப்பு, கழிச்சல் வகை

இதன் ஆவியை பிடித்துவர தொண்டைப்புண், தொண்டை எரிச்சல், தொண்டைக்கம்மல், தொண்டை அரிப்பு குறையும்.

இளங்காய் அல்லது இலையை நன்றாக நசுக்கி புண்களுக்கு வைத்துக்கட்ட விறைப்புத் தணியும்.

**ரி. உமா** (2 ஆம் வருடம்)
லங்கா சித்த - ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரிடையே கலைகளை வளர்க்கும் மகாஜனசபையின் நிலாக்காலம் நிகழ்வு

அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டத்தினர் மகிழ்வான மாலைப் பொழுது என்னும் தொனிப் பொருளில் பிரதிபௌர்ணமி தோறும் 'நிலாக் காலம்' கலைகளின் சங்கம நிகழ்வினை நிகழ்த்தி வருகின்றனர்.

ஊரவர்களது இணைவிற்கும், திறமை கொண்டும் வெளிப்படுத்த முடியாமல் உள்ள இளம்கலைஞர்களுக்கான களத்தினை அமைப்பதற்கும், மான்சீயப் படைப்பாளிகளின் சுய முனைப்பிற்கான களவெளிகளினை ஏற்படுத்துதல், மூத்த கலைஞர்களினைக் கௌரவித்தல், என பல்துறை நோக்கங்களினை கடந்த 18 மாதங்களாக நிலாக்காலம் என்னும் கலைச்சங்கமம் நடத்தி வருகின்றது.

நிலாக்காலத்தின் பிறப்பியலுக்கு பின்னணிக் காரணம் பற்றி ஏற்பட்டாளர்கள் கருத்து பகிரும் போது கலாசார தனித்துவங்களை பேணுவதற்கான நிலையாக எண்ணி ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிடுகின்றனர்.

மாதமொரு மகிழ்வான மாலைப் பொழுதினும் வருடத்திற்கொரு முறை சித்திராப் பௌர்ணமியுடன் இணைந்து வருகின்ற இரு நாட்களினை முத்தமிழ்களைத் தினமொரு முறை கொண்டாடுவதென சிந்தித்து கடந்த வருடம் முத்தினங்களும் முக் கலைகளின் சங்கமமாக விளங்கியது. அதன் நீட்சியாக இம்முறையும் சித்திரை மாதம் நிகழ்த்துவதற்கான களவெளிகளின் ஒழுங்கமைக்கப்பட்ட போதும் துன்பமயமான சூழ்நிலை காரணமாக நிகழ்த்த முடியாதபோதிலும் மே மாதம் இதற்கான கள வெளிகள் உருவாக்கப்பட்டன.

இவ் அடிப்படையில் மே மாதம் 13 ஆம், 14ஆம், 15ஆம் திகதிகள் முத்தமிழ்களான இயல், இசை , நாடகம் என்பவற்றிற்கான விழாவாக விளங்கின.

அளவெட்டி நலன்புரிச்சங்கம் - சுவிஸ்லாந்து, அனுசரணையில் மகாஜன சபை திருமண மண்டபத்தில் இடம் பெற்றது.

மூன்று நாட்களும் மறைந்த கலைஞர்களினை கௌரவப்படுத்தும் நோக்குடன் அவர்களது அரங்கமாகியது. முதல் நாள் இசையரங்கானது அமரர் அ.திலகேஸ்வரன் அரங்கமாக விளங்கியது. இங்கு சிறப்பு பண்ணிசை, மெல்லிசை என்பன இடம் பெற்றன. இவை ஆத்மார்த்தமானவையாகவும் கலையியல் உயிர்ப்பாகவும் விளங்கின.

இரண்டாம் நாள் செந்நெறியோன் பண்டிதர் நாகலிங்கம் அரங்கமாக விளங்கியது. காலை அமரர் பண்டிதர் நாகலிங்கத்தின் பிரதான தொகுப்பில் உருவான வேரூன்றி விழுது பரப்பும் ஆலமரம் எனும் அளவெட்டி கிராமம் பற்றி தொகுப்பு நூலினது வெளியீடு இடம்பெற்றது.

மாலை நிகழ்வாக பட்டி மன்றம் , கவியரங்கம் என்பன இடம்பெற்றன. இவை வெறுமனே கேளிக்கைக்கும் பொழுது போக்கிற்குரியதாகவுமாக அமையாது கருத்தியல் பூர்வமான கதையாடல் களாக அமைந்திருந்தன.

மூன்றாவது நாளான இறுதி நாள் அமரர் பொன். கணேசமூர்த்தியின் நினைவாக நாடக அரங்கம் விரிந்தது.

> ஊரவர்களது இணைவிற்கும், திறமை கொண்டும் வெளிப்படுத்த முடியாமல் உள்ள இளம்கலைஞர்களுக்கான களத்தினை அமைப்பதற்கும், மானசீயப் படைப்பாளிகளின் சுய முனைப்பிற்கான களவெளிகளினை ஏற்படுத்துதல், மூத்த கலைஞர்களினை கௌரவித்தல், என பல்துறை நோக்கங்களினை கடந்த 18 மாதங்களாக நிலாக் காலம் என்னும் கலைச்சங்கமம் செயற்படுத்தி வருகின்றது.

கலைஞர் சு. சுகுமாரின் நெறியாழ்கையில் வசந்தன் கூத்து, மெண்டலின் வாத்தியக் கலைஞர் சிவகுமாரின் இசை நிகழ்வு, யாழ்ப்பாணம் நாட்டார் வழக்காற்றியல் கழகத்தினரின் பூதத்தம்பி இசைநாடகம் என்பன இடம் பெற்றன.

வசந்தன் கூத்து மரபின் உயிர்ப்பாகவும், மெண்லின் இசை நிகழ்வு ஆத்மீகமானதாகவும், பூதத்தம்பி மரபு வழிக் கலைச் சங்கமாகவும் இடம்பெற்றன.

அளவெட்டி மகாஜன சபை கலைஞர்வட்டத்தினர் இத்தகைய செயற்பாடானது அனைத்து கலைகளினை உயிர்ப்பு நிலைக்குகொண்டுவருவதற்கும் இளம் தலை முறையினரிடையே கலைக்கையளிப்பிற்கான களமாகவும் கொள்வதினை அவதானிக்கலாம்.

அருள்

# HOME டிப்ஸ்

•சமையலறையில் உபயோகிக்கும் துடைக்கும் துணிகளைக் கடலை மாவு/ பயத்த மாவு கலந்த தண்ணீரில் 1/2 மணி நேரம் ஊற வைத்து பிறகு துவைக்கலாம். துணியின் பிசுபிசுப்பு நீங்கி விடும்.

• 500 மி.லி உறை ஊற்றி பாலை ஒரு மண் சட்டியில் ஊற்றி 1/2 டீஸ்பூன் சீரகம், 2 டீஸ்பூன் மிகச்சிறிய நறுக்கிய கொத்தமல்லித் தழைகளையும் சேர்க்கவும். உறைந்த அந்தத் தயிர் புதிய சுவையுடன் இருக்கும்.

• பழங்களைக் கழுவி சில சில எலுமிச்சைச் சாறைத் தெளித்து வைக்கவும். நீண்ட நாட்கள் கெடாமல் பாதுகாக்கலாம்.

காளான்களைக் காகிதப் பையில் வைத்துக் குளிர் சாதனப் பெட்டியில் வைக்கவும்.

• பீங்கான் பாத்திரத்தில் உறை ஊற்றிய பாலை (சிறிது தயிர் கலந்து) வோல்டேஜ் ஸ்டெபிலைசர் மீது இரவில் வைப்பதால் குளிர்காலத்தில் காலையில் தயிர் கெட்டியாக உறைந்திருக்கும்.

• வினிகரில் ஒரு துணியை நனைத்து சமையலறை மேடையை துடைக்கவும். எண்ணெய் பிசுக்கு போன்றவை நீங்கி மேடை புதியதுபோல் காணப்படும்.

• உலர்ந்த திராட்சையை வீட்டிலேயே தயாரிக்கலாம். 1 கப் பாலில் 3 கப் தண்ணீர் கலந்து கொதிக்க வைக்கவும். சில கொத்துக்களாகத் திராட்சைகளை 2 நிமிடங்கள் முக்கி எடுக்கவும். பின்னர் துணியால் போட்டு உலர்த்தவும். 5,6 நாட்கள் நல்ல வெயிலில் உலர்த்துவதால் அவை உலர்ந்து சுருங்கி விடும்.

• சோளப் பொரி (pop corn) நன்றாகப் பொரிய ஒரு மணி நேரம் முன்பு அவற்றின் மீது வெதுவெதுப்பான வெந்நீரைத் தெளிக்கவும்.

• வழுக்கும் மீனைக் கழுவும் போதும் வெட்டும் போதும் விரல்களில் உப்பைத் தேய்க்கவும்.

• கேஸரோலில் தயாரிக்கப்பட்ட தயிர் கெட்டியாகவும், ருசியாகவும் இருக்கும்.



• பெருங்காயம் கெட்டியாகவும் இருந்தால் அதனுடன் சில பச்சைமிளகாய்களைப் போடவும். பெருங்காயம் இளகிவிடும்.

• வாழைப்பழம் கெடாமல் இருக்க அவற்றை செய்தித்தாளில் அழுத்தமாகச் சுற்றி குளிர் சாதனப் பெட்டியில் வைக்கவும்.

• பச்சைமிளகாயையும், இஞ்சியையும் சிறு துண்டுகளாக நறுக்கி உப்பு கலந்த எலுமிச்சைச் சாற்றைச் சேர்த்து வைக்கவும். சில தினங்களுக்குப் பிறகு குளிர் சாதனப் பெட்டியில் வைத்தால் நிறைய நாட்களுக்குப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிக் கீற்றுகள்

தொகுப்பு: அஸ்வின்

### 'வல்லூறு'

நிதர்சன் மூவிஸ் 'வல்லூறு' என்னும் குறும்படத்தினைத் தயாரித்து வருகின்றது. சிறுவர் துஸ்பிரயோகத்துக்கு எதிரான நடவடிக்கைகளை கதைக்களமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இக்குறும்படத்தினை எஸ்.ஜசிதரன் இயக்கி ஒலிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனத்தை அ.நிசாந்தன் எழுதியுள்ளார்.

இதன் படப்பிடிப்புக்கள் யாழ்ப்பாணம், மன்னார் போன்ற இடங்களில் நடைபெற்றுள்ளன. இப்படத்திற்கான பின்னணி இசையை கு.அற்புதன் வழங்கியுள்ளார்.

### 'அற்றைத் திங்கள்'

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் 'அற்றைத்திங்கள்' இசை நாடகம் நாடக ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றது. இந்நாடகத்தினை யோன்சன் ராஜ்குமார் நெறியாழ்கை செய்துள்ளார்.

நாடெங்கிலும் 10 மேடைகளுக்கு மேல் மேடை யேற்றப்பட்ட இந்நாடகத்திற்கு இசையமைப்பாளர் கு. அற்புதன் இசை வழங்கிவருகின்றார்.

### இசை இறுவட்டு வெளியீடு

பிரசித்திபெற்ற முல்லைத்தீவு வெட்டுவாய்க்கால் அருள்மிகு சப்த கன்னியர் ஆலயத்தின் சிறப்பினைக் கூறும் பாடல்கள் அடங்கிய இசை இறுவெட்டு வளியிடப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் எஸ்.யேசுரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இறுவட்டினை வெட்டுவாய்க்கால் இராணுவப் பொறுப்பதிகாரி வெளியிட்டு வைக்க வெட்டுவாய்க்கால் அ.மி.த. பாடசாலை அதிபர் எம். செல்வராசா மற்றும் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் எஸ். அல்பிறட் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இதற்கான இசையினை எஸ். ரூபனும் ஒலிப்பதிவினை எஸ். கோபாலனும் மேற்கொண்டுள்ளனர்.

திருமலையூர் பரணி, முல்லை ரமணன், கே.ரி.பகீரதன் ஆகியோரின் பாடல்வரிகளுக்கு எஸ்.பி. சாந்தன், எம். இறையமுதன், எஸ். ரூபன், எஸ். ஜானகி, ரி. ரஜிவ், கே. சாந்தி ஆகியோர் பாடி மெருகூட்டியுள்ளனர்.

### துளிர்களின் 'றிங்..றிங்' குறும்படம் வெளியீடு



யாழ்ப்பாணத்தில் இயங்கும் துளிர்கள் உளவள சமூக மேம்பாட்டு நிறுவனம் தயாரித்த 'றிங்.. றிங்' குறும்படம் கடந்த 20 ஆம் திகதி வெளியிடப்பட்டது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் இதனை வெளியிட்டு வைத்தார்.

துளிர்கள் நிறுவனத்தின் தலைவர் ரகுநாதன் இயக்கத்தில் உருவான இக்குறும்படத்திற்கான கதை வசனத்தை ஆ. அனுப்பிரியாவும் ஒளிப்பதிவினை நரேன், ஜெயம் (பாடல்கள்) ஆகியோரும் படத்தொகுப்பை மயன் கிரிஸ்ரிஸ் டெக்டஸ்சும் பாடல் ஒலிப்பதிவை கே. எஸ். கோபாலனும் பாடல்களுக்கான இசையினை எஸ்.ரி. ரூபனும் திரைப்படத்திற்கான பின்னணி இசையினை ஜெறி ஸ்ரலினும் மேற்கொண்டுள்ளனர்.

கைத்தொலைபேசி பாவனை சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களையும் அவற்றைக் கையாளுபவர்களின் மாறுதல்களையும் இக்குறும்படம் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளதாக இயக்குநர் ரகுநாதன் தெரிவித்துள்ளார்.

### குறும் திரைப்பட விமர்சனம்

## ஏடு

வவுனியூர் இரா. உதயனின் தயாரிப்பில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினரால் கலை நிலாவின் தயாரிப்பாக சு. வினோத்தின் இயக்கத்தில் வவுனியா மண்ணின் இயற்கை எழிலுடன் மொழி, கல்வி, பண்பாடு என்பவற்றைக் கூறும் 'ஏடு' குறும்படம் வெளிவந்துள்ளது.

இன்று பண்பாடு அழிவடைந்து கொண்டு செல்கின்றது. பழமைகள் மீண்டும் புதுபிக்க வேண்டும். எங்கள் பண்பாட்டுக்குக் கல்வியைப் பெற்று பயன் பெற வேண்டும் என்பதை இப்படைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

ஆரம்பத்தில் இருவரின் உரையாடலின் ஊடாக பண்பாட்டுக் கல்வி தொடர்பான உரையாடல்கள் நகர்த்தப்பட்டு எமது மரபு வழிக் கல்வி முறை கற்கச் செல்கின்ற குழுவினர் அவற்றைக் கற்று பண்பாட்டு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து வெளியேறுபவர்களாக கதையோட்டம் நகர்த்திச் செல்லப்படுகின்றது. கதையோட்டத்தில் குருகுல நடைமுறையை கற்று அறிந்துகொள்பவர்களுடைய துன்பியல் செயற்பாடுகள் நகைச்சுவையூடாக நகர்த்திச் செல்லப்படுகிறது.

எமது மரபுக்கமைய தமிழ் நீதி நூல்களைக் கற்று அதன் படி வாழ்ந்து வாழ்க்கையின் பயனை உணர்ந்து குருவின் உபதேசத்துடன் வாழ்வினை அமைத்துக் கொள்கின்ற வாழ்வியல் நடைமுறை சுட்டப்படுகின்றது. குருகுல கல்வியினூடாக ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய கல்வி வலியுறுத்தப்படுகின்றது.

இக் குறும்படத்தின் காட்சிச் சூழமைவு சிறப்பாக படைக்கப்பட்டுள்ளது. இயற்கையோடிணைந்த ஆச்சிரமச் சூழலின் பின்னணி தத்ரூபமாக படமாக்கப்பட்டுள்ளது. இயற்கையோடு இணைந்த மனித வாழ்வில் நடைமுறையை 'ஆகாய வானில் உதயம் தோன்றுதே' பாடலூடாக ஆச்சிரம சூழலின் காட்சி சூழலும் சுட்டப்பட்டுள்ளது.

இப்படதின் கலையினை பே. இராகுலனும் அதற்கான உதவியினை சி.கலெக்ஷன் , த. குணசீலன் ஆகியோர் செய்துள்ளனர். உடையமைப்பினை கி. நிக்சலன், த.லுஜிதரன் ஆகியோரும் ஒப்பனையினை மா. தர்சிகன், பி.சனுசன் ஆகியோரும் ஒளிப்பதிவினை ப.குமாரும் படத்தொகுப்பு இசையினை பா. கேதீஸ்வரனும் பாடல்வரிகளை த. தவயோகனும் பின்னணிப்பாடலினை பா. கேதீஸ்வரனும் செய்துள்ளார்கள். தயாரிப்பு மேற்பார்வையினை தமிழ்மணி அகளங்கன், கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோரும் கதை வசனத்தினை த.தவயோகன் எழுதியுள்ளார்.

குறும்படத்திற்கான பாடல் இசை சிறப்பாக அமைந்துள்ளது. ஆரம்ப இசை முதல் காட்சிப் பின்னணி இசை காட்சி சம்பவங்களின் நகர்வு என்பன சிறப்பாக அமைந்துள்ளன. இதற்கேற்ப ஒளிப்பதிவாளரும் தன் பங்கினை திறம்பட மேற்கொண்டுள்ளார். இயற்கை சூழலின் ஒலிகள் தத்ரூபமாக பதிவாக்கப்பட்டுள்ளன. பாடல்கள் கதையோட்டத்தோடு இணைந்ததாகவும் தத்துவமாகவும் எமது பண்பாட்டு அம்சங்களைச் சொல்வனவாகவும் அமைந்துள்ளன.

''எல்லோரும் இப்படித்தான் கற்க வேண்டும் என்று வலியுறுத்தவில்லை ஆனால் இக்கல்வி முறையின் தேவை இன்று உணரப்படுகின்றது''. எனும் சிந்தனைத்தளத்தினூடாக பண்பாட்டுக்கல்வியின் சிறப்பை அழகாக படைப்பாக்கம் செய்துள்ளார் இயக்குனர். வினோத்தினுடைய படைப்பாக்கச் சிறப்புக்கு மெருகூட்டும் வகையில் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. திரைக்கதை இயக்கம் என்பவற்றை மேற்கொண்டு பண்பாட்டு கல்வியின் சிறப்பை உணர்தியுள்ளார்.

**எஸ்.ரி.குமரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழமான வாசிப்பும் முழுமையாக எழுதும் ஆற்றலும் படைப்பாளிக்கு மிக அவசியம்



**ஈழத்துப் படைப்பாளிகள் வரிசையில் நன்கு அறியப்பட்டவர் ந. சத்தியபாலன். சமூக அக்கறை கொண்ட மறுமலர்ச்சி எழுத்தாள்களுள் இவரும் ஒருவராவர். ஆங்கில ஆசிரியர் என்ற நிலைதாண்டி தமிழ் இலக்கியத் துறையின் பால் அதிக ஈர்ப்பு கொண்ட இவர் பல்வேறு படைப்புக்களைத் தந்தவர். இவரை யாழ் ஓசை வாசகர்களுக்காக அவரை சந்தித்த போது....**

***கேள்வி:- உங்கள் இளமைக்காலம் பற்றிச் சொல்லுங்களேன்?***

***பதில்:-*** 1956 இல் நல்லூரில் பிறந்தேன். தந்தையார் ஒரு ஆசிரியர். ஐந்து பேரில் நானே கடைசிப்பிள்ளை. இளமைக்காலத்தில் இயல்பாகவே இருந்த உடற்பலவீனம் காரணமாக ஓய்வாக இருந்த பொழுதுகள் அதிகம். தந்தையார், தாயார், சகோதரர்கள் வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் கல்கி, கலைமகள், ஆனந்தவிகடன் என அதிகமான சஞ்சிகைகள் வாங்குவது தந்தையின் வழக்கம். எனவே எனக்கு நிறைய வாசிக்கும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அகிலன் , வரதராஜன் , நா. பா. எனத் தொடங்கி ஜெயகாந்தன், சுந்தரராமன் எனப் படைப்புலகம் பரிச்சயர்கள் தொடர்ந்தன. எனது பாடசாலைத் தமிழ் ஆசிரியையின் தூண்டுதல் என்னை மேலும் மேலும் வாசிக்கவும் எழுதவும் தூண்டியது. ஆரம்பத்தில் வானொலியிலும் தொடர்ந்து உள்ளூர் சஞ்சிகைகள் பத்திரிகைகளிலும் எழுதினேன். 'திசை' பத்திரிகையில் எனது முதல் சிறுகதை பிரசுரமான மகிழ்ச்சியை நல்லூர் தாஸ் வந்து தெரிவிக்க அந்த சந்தோஷத்தில் மிதந்த அனுபவம் இன்றும் நினைவில் நிற்கிறது.

திரு. அ. யேசுராசா அவர்களின் தூண்டுதலும் வழிகாட்டலும் எனது எழுத்தைச் செம்மைப்படுத்த உதவியுள்ளன. அவரது'கவிதை' இதழிலும் 'தெரிதல்' ஏட்டிலும் எனது எழுத்துக்கள் பிரசுரமாகியுள்ளன.

***கேள்வி:- உங்களை இலக்கியத்துறையில் ஈடுபடத்தூண்டிய எழுத்துக்கள் - மற்றும் படைப்பாளிகள் பற்றி..***

***பதில்:-*** மிகச்சிறுவயதிலேயே வாசிக்கத் தொடங்கிவிட்டேன். கல்கி, அகிலன் போன்றோரைத் தாண்டி ஜெயக்காந்தனை அறிந்த போது அவரது எழுத்துக்களைத் தேடித் தேடிப்படிக்கும் ஆர்வம் தோன்றியது. எனது அரிய நண்பர் வ. திருச்செல்வம் எனக்கு அவரது படைப்புக்கள் யாவும் கிடைக்க உதவினார். அவரது எழுத்தின் தீவிரம் அவரது நடையிலிருந்த கம்பீரமும் எனது எழுத்தாற்றலை மேலும் கூர்மையடைய வைத்தன. ஒரு காலகட்டத்தின் பிறகு கவிதையில் எனது ஆர்வம் தீவிரமான போது பாரதியில் தொடங்கி மீரா மேத்தா எனத் தொடர்ந்து பின்னர் சுந்தரராமசாமி, பிரமிள் ஆத்மாநாம் எனத் தொடர்ந்தேன். தற்போது இடையிடையே மெல்லிசைப் பாடல்களும் எழுதி வருகிறேன்.

***கேள்வி:- உங்களது எழுத்துலக வாழ்வியலில் ஆதார புருஷர்களாக சில படைப்பாளிகளிகள் இருப்பார்கள் அவர்கள் பற்றி உங்கள் பார்வை?***

***பதில்:-*** முன்னரே குறிப்பிட்டது போல சிறுகதை, நாவல் பற்றி எழுத்துக்களில் தனித்துவ முத்திரை பதித்த ஜெயகாந்தன் எனக்குப்பிடித்த உரைநடைப் படைப்பாளிகள் வரிசையில் முன்னணியில் நிற்பவர், அவரது மொழிநடையும் பாத்திரவார்ப்பும் அற்புதமானவை. கருத்துக்கள் தெரிவிப்பதில் அவரது உறுதி வாய்ந்த போக்கு என்னைக் கவர்ந்தது. கவிதையைப் பற்றி கூறுவதனால் சுந்தரராமசாமிக்கு அதில் பெரும் பங்கு உண்டு. இவர்களோடு நான் விரும்பி வாசிப்பவர்கள் மிகப் பலர் உள்ளனர்

***கேள்வி:- இலக்கிய ஆர்வம் அதிகம் இருந்தாலும் படைப்பாளிகளாக உருவாவதில் பலர் தோல்வி காணுகின்றார்கள். ஒரு சிலர் தான் வெற்றிகரமான படைப்பாளிகளாக உருவாகிறார்கள். இது பற்றிய உங்களின் கருத்து?***

***பதில்:-*** எழுத விரும்புகிறவர்கள் எந்த துறையிலும் ஈடுபட விரும்புகிறார்களோ அந்தத் துறை சார்ந்த படைப்புகளை நிறைய வாசிக்கவேண்டும். அதன் மூலம் அத்துறை பற்றிய ஒரு தெளிவான கருத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். திருத்தமானதும் செழுமையானதுமான ஒரு மொழியைத் தமக்குரியதாக மாற்றிக் கொள்வது தெடர்பாக தெடர்ந்து பாடுபட வேண்டும். மொழியில் ஒரு ஈர்ப்பும் தனது கருத்தை முன்வைப்பதில் தனக்கான ஒரு முறையை வகுத்துக் கொள்கின்ற ஈடுபாடும் வர வேண்டும். பொறுமையாக கற்கும் நோக்கோடு வாசிக்கும் தன்மை வர வேண்டும். வாசிக்கும் விடயத்தில் ஆழ்ந்து போகின்ற ஒரு ரசனை முதிர்ச்சி ஏற்பட வேண்டும்.

இத்தகைய இயல்புகளை வளர்த்துக் கொள்பவர்கள் நிச்சயமாகப் படைப்புத் துறையில் மிளிர முடியும். மொழியின் நுண்மையை அவதானிக்கும் திறன் வளரும் போது பிரயோகத்திறனும் கூர்மை பெறுகிறது. எழுதும் ஆர்வம் உடையவர்கள் தம்மைத் தாமே திறம்பட உருவாக்க முடியும். ஒவ்வொரு வெற்றிகரமான படைப்பாளிக்கும் பின்னால் கடின உழைப்பு என்கிற ரகசியம் இருக்கிறது.

***கேள்வி:- இதுவரை காலமும் நீங்கள் மேற்கொண்ட படைப்பு முயற்சிகள் பற்றி...***

***பதில்:-*** 2009 இல் ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருக்கிறேன். 'இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்' என்பது அதன் தலைப்பு. இது தவிர இன்று வரை எனது கவிதைகள் மறுபாதி, கலைமுகம், ஜீவநதி போன்றன சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. கவிதைகள் தவிர பத்தி எழுத்துக்கள், சிறுகதைகள், கட்டுரைகள், குறுநாவல், மொழிபெயர்ப்புக் கவிதைகள் மற்றும் சிறுகதைகள் என்பன எழுதியுள்ளேன். அவை எதுவும் இதுவரை நூல் வடிவில் வெளிவரவில்லை.

***கேள்வி:- பல துறைகளில் ஈடுபட்டாலும் கவிதை துறையில் கூடிய ஆர்வம் காட்டக் காரணம்?***

***பதில்:-*** நான் ஈடுபடும் துறைகளில் கவிதையே எனக்கு மிகவும் சுத்திரமான தளமாக 'ஒரு தாய் வீட்டினைப் போல' அமைந்திருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். மேலும் மொழியின் நுண்ணியமான பிரயோகச் சாத்தியப்பாடுகள் மற்றும் கவிநயமான அழகியல் முயற்சிகள் என்னைக் கவிதையின் பக்கம் ஈர்க்கின்றன.

ஈடுபடுகின்ற ஏனைய துறைகளிலும் கவித்துவத்தின் சாத்தியப்பாடுகளைப் பரீட்சிக்கின்ற எண்ணமுண்டு. தென்னிந்தியாவின் லா. ச. ராமமிர்தம் இந்த முயற்சியினை மேற்கொண்டிருக்கிறார்.

எழுத்தின் முழுச் சக்திகளையும் பிரயோகித்து 'நெருப்பு' என்று எழுதினால் காகிதத்தில் பொசுங்கிய வாசனை வர வேண்டும் என்று சொல்பவர் அவர் 'மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்' என்று பாரதி சொல்லியிருக்கிறான் அல்லவா?

செவ்வி கண்டவர்
எஸ்.நதிபரன்

***கேள்வி:- தமிழகத்துடன் ஒப்பிடுகையில் ஈழத்துப் படைப்பாளிகளின் இலக்கிப் பிரவேசம் படைப்புவேகம் மற்றும் ஈடுபாடு என்பன குறைவாகவே உள்ளதே ஏன் இந்த நிலை?***

***பதில்:-*** தாங்கள் சொல்வது ஒப்பீட்டு அடிப்படையில் தம்மவர்களின் இலக்கியத் தொழிற்பாடு மந்த நிலையில் தான் உள்ளது. - ஆனாலும் சமீபகாலமாக கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை கிழக்கின் படைப்பாளிகள்

(28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான காலகட்டம் ஈழத்திலக்கிய வரலாற்றில் முக்கிய திருப்புமுனையை உண்டு பண்ணியது. அக்காலகட்டத்தில் இன முரண்பாடுகள் வலுப்பெறத் தொடங்கிய காலம். இதனால் அக்காலத்திலே தோன்றிய இலக்கியங்களும் வன்முறையின் வீச்சை படம் பிடித்துக் காட்டத் தவறவில்லை.

ஏறத்தாழ அறுபதுகளிலிருந்து ஈழத்துக் கவிதை துறை முற்போக்கு அலைகளை சுமந்து வரலாயிற்று. அக்காலத்தில் வெளிவந்த கவிதைகளில் கவிஞர்களின் முதிர்ச்சி, மனப்போக்குகள், சூழ்நிலை என்பவற்றை இங்காணமுடிகின்றது. தரமான பங்களிப்பை கவிஞர்கள் நல்கினர். அக்கால கவிதைத்துறை வளர்ச்சிக்கு கவிஞர் முருகையன், நீலாவணன், சில்லையூர் செல்லராசன் போன்றோர் அடித்தளமிட்டனர். இவர்களுள் சில்லையூர் செல்வராசன் குறிப்பிடத்தக்கவராக விளங்குகிறார். அவரது படைப்பாற்றலை பறைசாற்றுவதற்கு தகுந்த கவிதைத் தொகுதிகள் இதுவரை வரவில்லையாகினும் அவரது ஒரு சில கவிதைகள் மனங்கொள்ளத்தக்கவையாக உள்ளன. இவற்றுள் ஒன்று தான் 'ஹெலிகெப்டர் விடுதூது' என்ற கவிதை கவிஞர் வாழ்ந்த காலத்தில் இனப்போர் முனைப்புப் பெற்றிருந்த வேளை இனங்களுக்கிடையே ஊற்றெடுத்த முரண்பாடுகள் பிரளயமாக பிரவாகித்தோடிய நேரம். எங்கு பார்த்தாலும் வன்முறை, கொலை , கடத்தல் என்ற துயரங்களாகவே இருந்தன. அந்த நேரத்தில் செழுமையான கவிதைகள் கவிஞர்களது உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதனால் கவிஞரும் தான் காதலிக்கும் காதலியினுடைய வீட்டை அடைவதற்கு சிரமப்படுகிறார். காரணம் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கிறது. இதனால் அவனது வீட்டை அடைய முடியாது மிகுந்த துயரப்படுகிறார். தனது செய்தியை யார் மூலம் தெரிவிக்கலாம் என்றெண்ணி கடைசியில் தினமும் வானத்தில் பறந்து திரியும் ஹெலிகெப்டரை தூதுவிட எண்ணுகிறார். அவர் கற்பனையில் உதித்த கவிதை இதோ.

*'இயந்திரப் பறவாய்! இயந்திரப் பறவாய்!*
*இறக்கை முதுகிற் சுழற்றிப் பறக்கும்*
*ஹெலிகெப்டர் எனும் இயந்திரப் பறவாய்*
*வாழி நீ! நாட்டை வன்முறையினின்று*
*மீட்கும் பணியில் விழைகிறாய் வாழி!*
*இரவும் பகலும் எத்தனை தடவையோ*
*என்'இல்' தாண்டி ஏகித் திரும்புவாய்!*
*போகும் வழியில் என் மனக் காதலி*
*உறையுளும் உளது! என் உயிர்க்கோர் தூதரை!*
*அவசரகால நிலமையின் விளைவாய்*
*பாதி நாள் வீட்டிற் பதுங்கிக் கிடக்கிறேன்.*
*மீதிப் போதிலும் காதலி யாட்குச்*
*சேதி யனுப்பும் ஏதிலி யானேன்!*
*புகையிரதம் வருதல் போதல் நின்றது!*
*தொலையுரைக் கருவியோ துண்டித்துள்ளது!*
*கடிதம் அனுப்பினால் கைக் கெட்டாது!*
*கலவர ஒலிகளால் கலங்கின போலும்!*
*உனைத் தவிர பிற பறவைகளும்*
*என் மனைப் பக்கம் ஏகிடக் காணேன்!*
*ஆதலினால் என் அன்புருவான*
*காதல் மடந்தையைக்*
*கடந்து செல்கையில்*
*சற்றே தரித்துச் சாற்றாய்*
*இற்றை நிலையிலும் 'இருக்கிறேன்' என்றே!'*

இக்கவிதை 1971 இல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலிருந்த போது காணப்பட்ட சூழ்நிலையை மையமாகக் கொண்டு புனையப்பட்டது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் போரும் வாழ்வும் பழக்கப்பட்டதொன்று. கடந்த பல தசாப்த காலமாகவே போருக்குள் வாழ்ந்து பழக்கப்பட்ட மக்கள் வாழ்வில் அழிவுகள், வேதனைகள், ஏக்கங்கள் என எல்லாமே சோகமயமாக இருந்து வருகிறன. இதனால் போரியல் வாழ்விற்குள் இருந்த படைப்பாளிகளும் மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கத் தவறவில்லை. மக்களின் அன்றாட வாழ்வில் அனுபவித்தவைகளை இலக்கியங்கள் வாயிலாக பிரதிபலித்து வந்தனர். அத்தகைய படைப்பாளிகளுள் 1971 களில் வாழ்ந்த சில்லையூர்ச் செல்வராசன் குறிப்பிடத்தக்கவராக விளங்குகிறார். அவரது இக்கவிதை அக்காலத்தில் வாழ்ந்த மக்களது வாழ்பனுவங்களை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. போர் நடைபெற்ற காலங்களில் ஊரடங்குச் சட்டம் அவ்வப்போது நடைமுறையிலிருக்கும். இதனால் மக்கள் படும் அவஸ்தைகள் சொல்லி அடங்காது. மக்களின் இயல்பு வாழ்க்கை அனைத்துமே தகர்ந்து போகும் நிலை காணப்படும். இச்சூழ்நிலையை கற்பனை அழகோடு அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் துயரத்தை இக்கவிதை வாயிலாக வெளிப்படுத்திய கவிஞரின் கவித்துத்தை பாராட்டாமல் இருக்க முடியாது.

எஸ்.நதிபரன்

# ஊர் புதினம்



அரசாங்கத்தின் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதில் கிராம அலுவலர்களின் பங்கு முதன்மையானது. அரசின் திட்டங்களை, தகவல்களை, நடைமுறைகளை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய பணியும் இவர்களுக்குரியது. இவைகளை பொதுமக்கள் எல் தான் நன்மை பெற முடியும். இச்செயலை திறம்பட செய்யும் முகமாக அண்மையில் வவுனியா புறநகர் பிரதேச கிராம அலுவலர் ஒருவர் பொது மக்களுக்குத் தெரிவிக்கவேண்டிய தகவல்களை ஆட்டோ ஒன்றில் ஒலிபெருக்கியை இணைத்து தனது பிரதேசத்தில் தகவல்களை தெரிவிக்கின்றார். இரவு 8 மணியளவில் இவ் அறிவிப்பு பணி ஆரம்பமாகி 9 மணியளவில் முடிவடைந்து விடுகின்றது. அந்த நேரத்தில் பெரும்பாலும் யாவரும் வீட்டில் இருப்பது வழக்கம். அதனால் தெரிவிக்கப்படும் தகவல்கள் பொதுமக்களை சரியாகச் சென்றடைகின்றது. தேசத்தில் உள்ள ஆட்டோ உரிமையாளர்களும், ஒலிபெருக்கி உரிமையாளரும் தமது மக்களுக்காகக் கட்டணம் எதுவும் பெறாமல் கிராம அலுவலருக்கு உதவுகின்றனர். இவர்களின் பெருந்தன்மையும் பாராட்டுதற்குரியது. பெரும்பாலான கிராம அலுவலர்கள் தமது அலுவலகங்களிலும், சில பொது இடங்களிலும் துண்டுப் பிரசுரத்திலும் தகவலை எழுதி ஒட்டுகின்றனர்.

இதனை அனைத்துப் பொது மக்களும் அறிவதில்லை. இதனால் பொது மக்களுக்குச் சிறந்த சேவை கிடைப்பதில்லை. வவுனியா கிராம அலுவல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழிலக்கியத்தின் உயிர் நாடி

## பேராசிரியர் சிவத்தம்பி



பேராசிரியர் சிவத்தம்பி
இறப்பை தடுக்க எவராலும் முடியும்?
எனினும் அழுகின்றோம்
பிறப்பாலுயர்ந்த பெரியார்
பேராசிரியர் சிவத்தம்பி ஐயாவின்
இழப்பை எண்ணி பெருதும் வருந்துகின்றோம்

ஈழத்தமிழ் மக்களின் ஆய்வியல் அடையாளமாய்:
மும்மொழிகளிலும் சிறப்பு தேர்ச்சி பெற்ற
முத்தமிழ் அறிஞராய் தமிழ் வாழ நீங்கள்
சாற்றிய பணிகள் ஒன்றா! இரண்டா!

உலகத்து மொழிகளுக்கெல்லாம்
ஈழத்தமிழின் சுவையை
உணர வைத்த உத்தமர்
பிற மொழிச் சொற்களை
தமிழ் மொழிப் படுத்துவதில்
வெற்றிகண்ட வித்தகர் - இன்று
எம்முடன் இல்லையென்பதை
ஏற்க மறுக்கிறது எம்முள்ளம்!

சிந்தையில் சிறப்பான எண்ணங்களும்
செயற்திறனில் மங்காம வீரியமும் கொண்டு
திக்கெட்டும் புகழ் பரப்பி- நீங்கள்
செய்த சாதனைத் தமிழ்ப்பணிகள்- இந்த
செகமுள்ளவரை நிலைத்திருக்கும்
இது உறுதி...!

யோகர் சுவாமிகளால் ஆசிர்வதிக்கப்பட்ட
யோக புரஷராய்;
இருபதாம் நூற்றாண்டின்
இணையற்ற புலமைகளின்
பொக்கிஷமாய்;
இலக்கிய வானில் ஒளிவீசிப்
பிரகாசித்த உங்கள் இழப்பு
ஒட்டுமொத்த கலையுலகிற்கும்
ஈடுசெய்ய முடியாத இடைவெளியை
ஏற்படுத்திய பேரிழப்பு

காலத்தால் அழிய முடியாத
எழுத்துக்களின் கலங்கரை விளக்கமாய்;
உய்யுநெறி காட்டி
உபதேசங்கள் பல வகுத்தளித்து
சென்றனையே மேலுலகம்
சிறப்பான மாணவர் பரம்பரைக்கு வித்திட்டு...!

கல்லையொத்த மனமும்
கசிந்துருகச் செய்யும்
இலக்கிய வளமும் நயமும்
இனிமையான சொற்பேச்சும்
காணாமற் போனது கண்டு
கலைகளின் அதிபதியும் ஒரு கணம்
கலங்கித்தான் போனாளோ?
கடல் நீரும் வற்றிப் போக
கண்ணீர் மழை வந்து
மனித முகங்களை நிறைத்ததுவோ?

பல்துறை ஆளுமை விற்பன்னராய்;
தோண்ட தோண்டப் பயன் கொடுக்கும்
அனைத்துறை ஆய்வுகளின்
அற்புத சுரங்கமாய்:
எம் இதயங்களை வென்ற இமயம் சாய்ந்து போன
செய்தி கேட்டு வெந்த புண்போல எம்மனம்
வெதும்பித் தவிக்கிறது

பழமைக்கும் புதுமைக்கும் பாலமமைத்து
பார் போற்றும் வண்ணம்
தனித்துவமான தமிழ் ஆளுமைகளை
வெளிப்படுத்தி நின்ற உவமை சொல முடியாத
உலகு புகழ் தமிழ்த் தலைவா!
பூவுடலை விட்டு புகழுடலை ஏற்ற
உங்கள் ஆத்மசாந்திக்காய்
உளமாரப் பிரார்த்திக்கின்றோம்
அடுத்து ஒரு பிறப்பிருந்தால்
மீண்டும் ஈழத்தில் பிறப்பெடுப்பீர்...!
இப்போது கண்ணீருடன் தந்தோம் ஐயா
உமக்கு இறுதி விடை
கைலாயத்தில் கருத்தொன்றிப்
பெற்றிடுவீர் சாந்தி!

*குறிஞ்சிக்கவி - செ. ரவிசாந்*
*வீரமனை, குப்பிளான்.*

# முத்திரை பதித்த எம் வித்தகர் சிவத்தம்பி



*யாழ்ப்பாணத்தின் மூளை*
*வடமராட்சி என்ற*
*கோட்பாட்டிற் கணி சேர்த்த*
*கொள்கை வீரன் சிவத்தம்பி*
*முத்தமிழில் மட்டுமல்ல*
*மூன்று மொழிகளிலும்*
*முத்திரை பதித்த வித்தகர் சிவத்தம்பி*

*தமிழைத் தமிழாகப் பேசிய யாழ்ப்பாண*
*அமிழ்தெனும் பல அறிஞர்*
*அவதானித்த கரவை*
*கமழ்ந்திடும் வண்ணமாய் காசினியில் புகழ்*
*உமிழ்ந்திட உழைத்தவர் உத்தமர் சிவத்தம்பி*

*நாடக நடிகராய் ஊடக ஒருவராய்*
*நாடாளுமன்றத்தின் மொழிபெயர்ப்பாளராய்*
*பேராசிரியராக பெரிய ஆய்வாளராக*
*பாராளுமன்ற வண்ணமாகப்*
*பல்லாழுமைகள் கொண்டார்*

*ஈழத்தில் மட்டுமல்ல இங்கிலாந்திலுங் கூட*
*பாரதந் தொட்டுப் பல*
*வெளிநாடுகளிலும் கூட*
*பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளராக*
*நன் கலை வளர்த்த எங்கள்*
*நாயகன் சிவத்தம்பி*

*அன்னையெம் தமிழ் மொழியாய்*
*அவனியில் செம் மொழியாய்*
*சென்னையிலுள்ளோருடன்*
*சேர்ந்து விழாவெடுத்து*
*தன்னருந் தேடல்களால் தமிழக்கு அணிசேர்த்து*
*பின்னையோருக்குதவ பெரிதும் உழைத்த செம்மல்*
*அரைவேக்காடுகள் போல் அலறிப் பிளிறிடாது*
*வரையறையோடு வாழ்ந்து*
*வாழ்விற்கு அர்த்தங்காட்டி*
*உரையாடுதலிலுமல்ல உறவாடுதலிலுங்கூட*
*நிறை குடமாக வாழ்ந்து நினைவினில் நிற்கும் செம்மல்*

***கவிமணி அன்னைதாஸன்***
[illegible]

# கவிதைகள் மாதிரி

இனியும்
பாக்கவாட்டில்
பார்க்காதே!
என்
கைக்கடிகாரமே
நின்று விடுகிறது!

உன்னால்
அனதாலே...
சோகத்தையும்
வரவேற்கின்றேன்!

பூக்களுக்கு
கற்றுக்
கொடுத்துக்
கொண்டிருக்கிறேன்
உன்னைமாதிரி
புடவை
கட்ட....

உடைந்து
போன
உன்...
வளையல்கள்
சங்கீதம்
சொல்லிக்
கொடுத்துக்
கொண்டிருக்கிறது!

உன்னை
காதலிக்க
எனக்கு
நானே
சொல்லிக்
கொடுக்கிறன்...

ஒரு
கட்டத்தில்
பூவில்
விஷமே கசிந்தது
செடிக்கு
சம்மதம்
இல்லாமல்....

அடுத்த
பிறவியிலாவது
நெருங்குவதற்கு
இப்போதே
பயிற்சி
எடுக்கிறேன்!

உன்னை...
வாங்குவதற்கு
உயிரையே
செலவு
செய்தேன்!

தும்மும்
பொழுதுகளில்
நீ
நினைக்கின்றாய்
என்று...
நானே
உன்னை
நினைக்கிறேன்!



நெடுந்தீவு
முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'கிரிடா சக்தி' நிகழ்ச்சியின் 24 ஆவது திட்டம் கிளிநொச்சியில்

## அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆரம்பித்தார்

அரியாலை

தேசிய ரீதியில் விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட 'கிரிடாசக்தி' நிகழ்ச்சித்திட்டத்தின் 24 ஆவது திட்டமானது கடந்த 15ஆம் 16ஆம் திகதிகளில் கிளிநொச்சி பொது மைதானத்தில் நடைபெற்றது.

இத் திட்டத்தினை விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்விற்கு பாராளுமன்ற குழுக்களின் தலைவரும் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினருமாகிய மு.சந்திரகுமார் மற்றும் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை, பூநகரி, கண்டாவளை, கிளிநொச்சி ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த ஆயிரத்து 200ற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்து தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தனர். இத்திட்டத்தில் 14 வகையான விளையாட்டுகளுக்கும் தலா 15 தொடக்கம் 20 வரைக்குமான வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதி நாள் நிகழ்வில் கலந்து சிறப்பித்த விளையாட்டுத் துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி ரஞ்சினி ஜெயக்கொடி பயிற்சிகளை வழங்கிய 60ற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களுக்கு தனது நன்றியினைத் தெரிவித்தார். அத்துடன் இத்திட்டத்திற்காக கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட அனைத்து விளையாட்டு உபகரணங்களையும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறைப் பணிப்பாளரிடம் கையளித்து இதனை சரியான முறையில் பயன்படுத்தி தேசிய வீரர்கள் இங்கிருந்து உருவாக வேண்டும் எனக்கூறினார்.

# யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு

தெல்லிப்பழை

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை சென்.ஜோசப் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது. இவ் நிர்வாகிகள் தெரிவில் தலைவராக இ.ஆனல்ட், செயலாளராக அ.அஜித்குமார், பொருளாளராக செ.சுரேந்தர், உப செயலாளராக அ.அரவிந்தன், உபதலைவர்களாக எஸ்.அன்ரனிப்பிள்ளை, எம்.பிரான்ஸிஸ், ஏ.சுரேந்திரன், க.நாகேந்திரன், சி.நொலஸ்கோ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக ரி.கருணாகரன், ப.வின்சன், சி.கனியூட், சி.சுரேஸ், ஏ.தமிழினியன், என்.யோகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் கணக்காய்வாளராக அ.அகஸ்ரின் தெரிவு செய்யப்பட்டார்.

## புதிய சாதனை

54 ஆவது கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி புதிய சாதனை நிலைநாட்டியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற 20 வயது பிரிவுப் பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் பியுமானி 2.9 மீற்றர் உயரத்தினை பாய்ந்தமை இது வரையில் சாதனையாக உள்ளது. இதனை 2011 ஆண்டு அளவெட்டி அருணோதயாக்கல்லூரி மாணவி எஸ். தனுஜா 3 மீற்றர் உயரத்தினை பாய்ந்து புதிய சாதனை நிலைநாட்டியுள்ளார்.

## ஆழமான வாசிப்பு

*(25ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பலரின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான நல்ல படைப்புக்களைத் தந்து கொண்டிருக்கின்றமையை மறந்து விடக் கூடாது. குறிப்பாக முஸ்லிம் படைப்பாளிகள் பலர் படைப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதும் - பல படைப்புகள் சிறப்பாக அமைந்திருப்பதும் கவனிக்கவேண்டிய ஒரு நல்ல அம்சம் தமிழகத்தில் நிகழ்வது போன்று அதிக அளவிலான படைப்பாளிகள் படைப்பில் ஈடுபட முன்வராதுள்ளமை ஏனையபகுதிகளைப் பொறுத்தவரை உண்மைதான். பல பகுதிகளில் வாசிப்பையே பலரும் மறந்து போய் விட்ட நிலைமையும் காணப்படுகிறது.

***கேள்வி:- எழுத விரும்புகிறவர்களுக்கு நீங்கள் என்ன சொல்லவிருப்புவது?***

***பதில்:-*** ஆழமான வாசிப்பும் அத்துடன் ஒரு படைப்பை அது முழுமையடையும் வரை மீண்டும் மீண்டும் எழுதுவது அவசியம். ஜானகிராமன் 'அம்மா வந்தாள்' நாவலை பல தடவைகள் திரும்ப திரும்ப எழுதினார் என்பதை அறிந்திருப்பீர்கள். அவ்வாறான அசுர உழைப்பு படைப்பாளிக்கு அவசியம் வேண்டும்.

# சிவப்பிரகாச வித்தியாலய மாணவனுக்கு தலா ஒரு தங்கம் வெண்கலப் பதக்கங்கள்

அரியாலை,

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த வாரம் வவுனியா கல்வியற் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலைய மாணவன் செல்வன் எஸ்.சாருஜன் நீளம் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும் 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.



வெற்றிபெற்ற மாணவன் சாருஜன் பயிற்றுவிப்பாளர் சுந்தருடனும் வலிகாம வலய விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் நடராஜாவுடன் காணப்படுகின்றார்.

# தேசிய பெருவிளையாட்டுப்போட்டிக்கு தெரிவான வட மாகாண அணிகள்

வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மாகாண மட்ட பெருவிளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளின் விபரம் அறிவிக்கப் பட்டுள்ளன.

இந்த அணிகள் தேசியமட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்வதற்கு தகுதி பெற்றுள்ளன.

**எல்லே 19 வயதுப் பிரிவு**

பருத்தித்துறை காட்லிக் கல்லூரி; நெல்லியடி மகாவித்தியாலயம்; வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம்

**கபடி 19 வயதுப் பிரிவு**

இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி; வடமராட்சி வேலாயுதம் மகாவித்தியாலயம்; முல்லைத்தீவு மகாவித்தியாலயம்

**உதைபந்தாட்டம் 19 வயதுப் பிரிவு**

மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி; ஏழாலை ஸ்ரீ முருகன் மகாவித்தியாலயம்; கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி

**உதைபந்தாட்டம் 19 வயதுப் பிரிவு**

மன்னார் சென் சேவியர் கல்லூரி; மானிப்பாய் இந்துக் கல்லூரி; யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி

**கரப்பந்தாட்டம் 15 பிரிவுப் பிரிவு**

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி

**கரப்பந்தாட்டம் 17 பிரிவுப் பிரிவு**

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

**கூடைப்பந்தாட்டம் 19 வயதுப் பிரிவு**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**மென்பந்து கிரிக்கட் 19 வயதுப் பிரிவு**

வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, வவுனியா பெரிய பூவரசங்குளம் மகாவித்தியாலயம்

**மேசைப் பந்தாட்டம் 19 வயதுப் பிரிவு**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மன்னார் சென் அனிஸ் மத்திய மகா வித்தியாலயம்

**சதுரங்கம் 15 வயதுப் பிரிவு**

பருத்தித்துறை காட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

**சதுரங்கம் 19 வயதுப் பிரிவு**

பருத்தித்துறை காட்லிக் கல்லூரி,யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி

**பூப்பந்தாட்டம் 19 வயதுப் பிரிவு**

மானிப்பாய் இந்துக் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி

**கரம் 15 வயதுப் பிரிவு**

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்

**கரம் 19 வயதுப் பிரிவு**

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்

**ஹொக்கி 19 வயதுப்பிரிவு**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

**உடற்பயிற்சிப் போட்டி**

இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரி, ஊர்காவற்துறை சென் அன்னிஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேட்டூர் அணையை காக்கும் இடிதாங்கி முனியப்பன்




சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் குளுகுளு சூழலில் அமைந்துள்ளது முனியப்பன் கோயில். ஆண்டு முழுவதும் அசைவ படையலிட்டு முனியப்பனை பக்தர்கள் பயபக்தியோடு கும்பிடுகிறார்கள்.

முனியப்பன் கோயில் உருவான வரலாறு வியப்படைய வைக்கிறது.

அணை கட்டுவதற்கு முன்பே அங்குள்ள ஊஞ்சமரத்தடியில் மண் கூட்டுக்குள் சிறிய முனியப்பன் சிலையை வைத்து கிராம மக்கள் வழிபட்டு வந்தனர்.

1925ஆம் ஆண்டு மேட்டூர் அணைக்கட்டு கட்டும் பணி துவங்கியது. பிரிட்டிஷ் இன்ஜினியர் எல்லீஸ் மேட்டூர் அணையை வடிவமைத்து கட்டியவர். அணையின் மேல்மட்ட மதகில் இருந்து டெல்டா பாசன கால்வாயில் தண்ணீரை சேர்ப்பதற்காக மற்றொரு கால்வாயை வெட்டும் பணி நடந்தபோது முனியப்பன் சிலையை அங்கிருந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. வேலையாட்களிடம் சிலையை அப்புறப்படுத்தும் படி கூறிவிட்டு சென்ற பிரிட்டிஷ் இன்ஜினியரின் கனவில் ஆக்ரோஷமாய் தோன்றிய முனியப்பன் சிலையை அகற்ற கூடாது என உத்தரவிட்டாராம்.

இதனால் பதைபதைத்துபோன 'இன்ஜினியர்' கால்வாயை வேறு இடத்தில் வெட்ட சொல்லியதாக கிராமமக்கள் கூறுகின்றனர்.

இறைவனே காட்சி கொடுத்ததாக கருதிய இன்ஜினியர் சிறிய சிலையாக இருந்த முனியப்பனுக்கு பிரமாண்ட சிலையை சொந்த செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார். அந்த சிலை தான் தற்போது மக்களால் வழிபடப்பட்டு வருகிறது. தமிழக கிராம தெய்வத்துக்கு ஆங்கிலேயர் ஒருவர் சிலை எடுத்து கொடுத்தது எங்கும் இல்லாத அதிசயம் என்றும் அணைக்கு காவலாக இருப்பதே முனியப்பன்தான் என்றும் கூறுகிறார்கள் கிராமத்தினர். இதனாலே இவருக்கு 'இடிதாங்கி முனியப்பன்' என்ற பெயரும் உண்டாம்.

இதற்கு சாட்சியாக கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் சொல்லப்படுகின்றன. 1947ஆம் ஆண்டில் ஒருநாள் மாலை மேட்டூர் அணையை இடி தாக்கியது. ஆனால் அணையில் சிறு விரிசல்கூட ஏற்படவில்லை. அதேபோல் கடந்த 1999ஆம் ஆண்டு அக்டோபரில் ஒருநாள் இரவில் இடி விழுந்தது. அப்போதும் அணைக்கு சிறு சேதம் கூட இல்லை. எல்லாம் முனியப்பனின் அருள் என்று பயபக்தியோடு சொல்கிறார்கள் ஊர்வாசிகள்.

அதுபோல சித்த சுவாதீனம் இல்லாதவர்கள் தலையில் எலுமிச்சை பழத்தை தேய்த்து காவிரியில் தலை முழுகி இங்குள்ள முனியப்பனை வணங்கினால் பூரண குணமடைவார்கள் என்பதும் பக்தர்களின் நம்பிக்கையாக இருக்கிறது.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [22.07.11 முதல் 28.07.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### * மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு, சிறு சிறு சுகயீனங்கள் ஏற்படும், தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் அமையும். சிறு மனச்சஞ்சலங்கள். குடும்ப உறவினர் மூலமாக தொல்லைகள் என்பன ஏற்படும் நிலையுண்டு. பணவரவு ஓரளவிற்கு அனுகூலமானதாக அமையும். கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பெண்களுக்கு சுப பலன் உண்டு. மாணவர்கள் வெற்றி பெறலாம்.



### * இடபம்

இடபராசி அன்பர்களுக்கு, அனுகூலமான பலா பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் முன்னேற்றம் இருக்கும், முயற்சிகளில் சற்று இழுபறி, தாமத நிலை அமையும். சகோதரர் வழியில் சிறு சிறு சஞ்சலங்கள் ஏற்படும். பண வரவு ஓரளவிற்கு அனுகூலமாய் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலன் ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும், மாணவர்கள் முயற்சி தேவை.



### * மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான, அனுகூலமான பலா பலன் ஏற்படும். தொழில் நிலையில் மேன்மை ஏற்படும். குடும்பத்தில் சிறப்பான, அனுகூலமான பலா பலன் உண்டு. பண வரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான வெற்றி ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு வெற்றியுண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.



### * கடகம்

கடகராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலா பலன்கள் அமையும் நிலை உண்டு. தொழில் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சிறப்பான பலாபலனும் அமையும். பண வரவு சிறப்பான நிலையில் அமையும். வர வேண்டிய வரவுகள் உங்களை நாடி வரும். கொடுக்கல், வாங்கல், கடன் நிலைகள் அனுகூலம் தரும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று அலைச்சல் நிலைகள் இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலையில் வேலைப்பழு அதிகமாக அமையும். பண வரவு ஓரளவிற்கு தேவைகளை பூர்த்தி செய்யும். எதிர்பாராத வகையில் பிரயாணங்கள் ஏற்படும் நிலையுண்டு. கடன் நிலைகளில் பொறுமையுடன் செயற்பட வேண்டும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான நல்ல பலா பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் நல்ல மகிழ்வும் வெற்றிகளும் ஏற்படும். பண வரவு திருப்திகரமான நிலையிலேயே அமையும். கொடுக்கல் வாங்கல் கடன் நிலைகள் சுமுக நிலை தரும். பெண்களுக்கு மகிழ்ச்சி நிலை அமையும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * துலாம்

துலா ராசி அன்பர்களுக்கு, சற்று சுமாரான பலா பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் சிறுசிறு அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். உடல் நிலையில் சுகயீனம் மருத்துவ செலவுகள் என்பன ஏற்படும் பலன் உண்டு. கொடுக்கல், வாங்கல், கடன் நிலைகளில் நிதானம் தேவை. பெண்களுக்கு மனச் சஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### * விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு, ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும். குடும்பத்தில் அனுகூலமான நன்மைகள் அமைய இடமுண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் சற்று வேலைப்பளு அமைந்திருக்கும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலம் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### * தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு, சற்று மத்திமமான சுமாரான பலனே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலன் உண்டு. குடும்பத்தில் சற்று மத்திமமான பலன்களே அமையும் பலனுண்டு. கடன் கொடுக்கல் வாங்கல் விடயங்களில் நிதானம் தேவை. பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * மகரம்

மகரராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான நல்ல பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் முன்னேற்றம் இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி ஏற்படும். பண வரவு திருப்திகரமான நிலையிலே அமைந்திடும். குடும்பத்தில் மகிழ்சிகரமான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு, ஓரளவிற்கு நன்மை அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும் நிலையுண்டு. தொழில் நிலையில் சிறு சிறு அலைச்சல் அமைந்திருக்கும். பண வரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்படும். குடும்பத்தில் சற்று மத்திமமான பலா பலன்கள் அமையும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர் முயற்சி வேண்டும்.



### * மீனம்

மீனராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலையில் சிறுசிறு அலைச்சல் இழுபறி நிலையிருக்கும். எடுக்கின்ற விடயங்களில் அலைச்சல் நிலை இருக்கும். குடும்பத்தில் சற்று மத்திம பலன்கள் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் நிதானமாக செயல் வேண்டும். பெண்களுக்கு மன சஞ்சலம் உண்டு. மாணவர்கள் நிதானம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் – பிள்ளைகள்



# தலைமுறை இடைவெளி



**பெற்றோர் கல்விக்கு பணம் கொடுக்கும் போதும் செலவழிக்கும் போதும் அவர்கள் எத்துணை கஷ்டப்பட்டு அப்பணத்தைப் பெற்றனர் என்ற உணர்வு அவர்களுக்கு வருவதில்லை. அதாவது பல பிள்ளைகள் பெற்றோர்கள் படும் பாட்டை அறியாமலே அவற்றைச் செலவழிக்க முற்படுகின்றனர்.**

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

கல்வியில் கவனம் மிகக் குறைந்து பெறுபேறுகளும் பாதிக்கப்படுகிறது. பரீட்சைக்காக கண் விழித்துப் பிள்ளை படிக்க முற்பட்டாலும் ''சுடு தண்ணீர் போத்தலில் தேநீர் வைத்துள்ளேன் எடுத்துக் குடி'' எனக்கூறிவிட்டு பெற்றோர்கள் நித்திரை கொள்வது அல்லது தொலைக்காட்சி பார்ப்பது இதைத் தான் இன்று பலர் செய்கின்றனர். முன்னைய பெற்றோர் போல தமது பிள்ளை படிக்கின்ற போது தாமும் உடனிருந்து உற்சாகம் வழங்க வேண்டுமென்ற தியாக சிந்தனை பல பெற்றோரிடம் இல்லை. அதாவது பிள்ளைக்காக தமது ஆசாபாசங்களை விட்டுக்கொடுக்கவோ, அர்ப்பணிப்பு தியாகம் செய்யவோ பின்னடிக்கின்றனர். இதனால் பிள்ளையும் கல்வியில் ஊக்கம் குறைவதுடன் பெற்றோரை மதிக்கும் பண்பும் குறைவாகவும் இருப்பதாக சமூக நோக்கர்கள் கூறுகின்றனர்.

பொருளாதாரத்திலும் ஒன்றை விட்டுக்கொடுத்தால் தான் இன்னொன்றைப் பெற முடியுமென்று அமையச் செலவுக்கோட்பாடு கூறுகின்றது. அது போலப் பெற்றோரும் தம்மை தியாகம் செய்தால் தான் பிள்ளைகள் உயர்வடைவார்கள். இதை அன்றைய பெற்றோர் நன்றாகவே உணர்ந்தனர். ஆனால் இன்றைய பெரும்பாலான பெற்றோரோ ரீயூசன் அனுப்பினால் எல்லாம் சரி தாம் வீட்டில் கவனிக்கத்தேவையில்லை என்னும் மனோபாவம் வளர்ந்து விட்டது.

பிள்ளைகள் நன்றாகப் படிக்காவிட்டாலும் பாடசாலை செல்லும் போது நல்ல ஆடை அலங்காரங்களுடன் பளிச்சென்று வந்தால் தமக்குப் பெருமையென நினைக்கும் மனோபாவமும் வளர்ந்து வருகின்றது. பெற்றோர் கல்விக்கு பணம் கொடுக்கும் போதும் செலவழிக்கும் போதும் அவர்கள் எத்துணை கஷ்டப்பட்டு அப்பணத்தைப் பெற்றனர் என்ற உணர்வு பிள்ளைகளுக்கு வருவதில்லை. அதாவது பல பிள்ளைகள் பெற்றோர்கள் படும் பாட்டை அறியாமலே அவற்றைச் செலவழிக்க முற்படுகின்றனர். பாடசாலை, ரியூசன் அமைப்புக்களிலும் புதிய, புதிய நிகழ்வுகள் செலவுத்தனங்கள் ஏற்பட்டு பெற்றோரின் பணச் சுமை மிக உயர்ந்து விட்டது.

பிள்ளைகள் ஏழ்மை அறியாமலே வளரும் தன்மையை பரவலாகவே காணமுடிகின்றது. ஏழ்மை தமக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், ஆசானாகவும் இருந்தது என்ற தமது வாழ்க்கை அனுபவத்தை கூறினால் 'அது அப்ப, இது இப்ப' என முகத்துக்கு நேரே திருப்பியடிக்கும் பண்பை காணமுடிகின்றது.

சிறுபராயத்தைத் தாண்டி விட்டால் கைத்தொலைபேசியும், மோட்டார் சைக்கிளும் கட்டாயம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற நிலையும் வந்து விட்டது. நடுத்தர, பணக்காரப் பெற்றோர் இவற்றைக் கட்டாயம் செய்ய வேண்டியே உள்ளது. கைத்தொலைபேசி வழியான குறுந்தகவல் வழங்குதல், இணையச்சேவை மூலமாக வழி தவறும் மாணவர் தொகையும் கூடி வருகின்றது. தகவல் தொழில்நுட்பத்தின் உயர்வுகளையெல்லாம் பருவ வயதுக் குழப்படிகளுக்கு உபயோகிக்கும் மாணவர்களின் தொகை தான் அதிகமாக உள்ளது.

ஏழ்மையை உணர்ந்து பகுதிநேர வேலை, கூலி வேலை செய்யும் மாணவர்கள் சிலரும் ஆங்காங்கே இருக்கத் தான் செய்கின்றனர்.

கால மாற்றம் மனித விழுமியங்களையும் மெல்ல மெல்லவோ வேகமாகவோ அசைத்து வருகின்றது. அன்றைய வாழ்க்கையை அப்படியே அச்சொட்டாக கடைபிடித்து வாழமுடியாது. ஆயினும் நற்பண்புகளைத் தவற விடாமல் நல்ல மனிதர்களாக வாழ வேண்டுமல்லவா.

'கடிகாரம் ஓட முன்பு நீ ஓடு' என்ற அவசர யுகத்தில் பெற்றோர், மாணவர் என்ற இரு பிரிவினருமே அன்பு, பண்பு உள்ள அந்நியோன்னிய உறவைப் பேண வேண்டும்.

பூமி சுழலும் வரை மனித சமூகமும் வாழ வேண்டியுள்ளது. ஆரோக்கியமான உறவுக் கட்டமைப்பு பொது சமூகத்தின் அமைதி வாழ்க்கைக்கும் உதவும்.

பெற்றோர் பிள்ளைகளின் சிறந்த உறவு தான் யாழ். மாவட்டத்தில் இழந்து போன கல்வித் தரத்தை மீட்டெடுக்க உதவும்.

வே. தபேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு வருகை தந்த இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசரும் இலங்கை நீதிபதிகள் பயிற்சி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளரும் சட்ட உதவிமன்ற தலைவருமான நீதியரசர் என்.கே.உடலகம, மாவட்ட நீதிபதி மா.கணேசராசா மற்றும் சட்டத்தரணிகளுடன் இருப்பதை படத்தில் காணலாம். (படம் - சாவகச்சேரி நிருபர்)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் கடந்த வருடம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் முன்னாள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், அதிபர் திருமதி வி. கடம்பமலர், வள்ளுவர் மேம்பாட்டுகழக உறுப்பினர், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் சித்தியடைந்த மாணவர்களைப் படத்தில் காணலாம். (படம் - ஏழாலை நிருபர்)



குப்பிளான் விவசாயிகள் சம்மேளனம் நடத்திய சுன்னாகம் இலங்கை வங்கி மேற்குக்கிளை முன்னாள் முகாமையாளருக்கான கௌரவிப்பு நிகழ்வில் முன்னாள் முகாமையாளர் எஸ்.அரசகுமாருக்கு குப்பிளான் விவசாயிகள் சம்மேளனத் தலைவர் எஸ்.நவரத்தினராசா பாராட்டுக் கேடயம் வழங்குவதனை படத்தில் காணலாம். (படம் - ஏழாலை நிருபர்)




வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரியின் அதிபர் நோயல் ஏ. விமலேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (படம் - யாழ். மத்தி நிருபர்)



வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் 'ஆளுமை விருத்தி' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடத்திய பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா, கல்லூரி உப பீடாதிபதி கு.சிதம்பரநாதனுக்கு நூல் ஒன்றை அன்பளிப்பு செய்வதைப் படத்தில் காணலாம். (படம் - நல்லூர் நிருபர்)



மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற அணியின் வீரருக்கு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ் [illegible]ன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் - சாவகச்சேரி நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவுக்கு பெருமை சேர்த்த ஜப்பான்

'பீபா' மகளிர் உலகக்கிண்ண கால்பந்தாட்ட வரலாற்றில் புதிய வரலாறு படைத்த ஜப்பான் ஆசியாவுக்கே பெருமையைத் தேடித்தந்தது. முதல் முறையாக காலிறுதி, அரையிறுதி என ஆடுத்தடுத்து அதிரடியாக முன்நகர்ந்த ஜப்பான் இறுதிப்போட்டியிலும் அமெரிக்காவை வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியதுடன் மகளிர் கால்பந்து உலகில் புதிய வரலாறு படைத்தது.

22 நாட்களாக ஜேர்மனியில் நடைபெற்ற சவால்மிக்க இந்த போராட்டத்தில் நடப்பு சம்பியன் ஜேர்மனி உட்பட ஐரோப்பிய அணிகளுக்கு சவால் விடுத்த இந்த ஆசிய அணியான ஜப்பான் ஜேர்மனியில் தன் வரலாற்றைப்பதிவு செய்தது.

6 ஆவது மகளிர் உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டி கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி ஜேர்மனியில் கோலாகலமாக ஆரம்பமானது. 16 அணிகள் களம் கண்ட இத்தொடர் கடந்த 17 ஆம் திகதி வரை கால்பந்து உலகினையே அலங்கரித்தது. 'ஏ' பிரிவில் ஜேர்மனி, பிரான்ஸ் , நைஜீரியா, கனடா ஆகிய அணிகளும் 'பி'பிரிவில் இங்கிலாந்து, ஜப்பான், மெக்சிக்கோ, நியூஸிலாந்து அணிகளும் 'சி' பிரிவில் சுவீடன், அமெரிக்கா , கொலம்பியா, பரகுவே அணிகளும் 'டி' பிரிவில் பிரேஸில், அவுஸ்திரேலியா, நோர்வே ஆகிய அணிகளும் மோதின.

ஆரம்பச்சுற்றுக்களே இத்தொடரின் மீதான எதிர்பார்ப்பினை அனைவரிடத்திலும் ஏற்படுத்தும் வகையில் அமைந்தன. மகளிர் அணிகள் என்று சொல்லமுடியாது மூக்கின் மேலலே விரலினை வைக்கும் அளவிற்கு போட்டிகள் விறுவிறுப்பை ஏற்படுத்த ஆரம்பித்தன.

அந்தவகையில் இத்தொடரின் காலிறுதிக்குள் பலம் பொருந்திய அணிகள் அனைத்தும் நுழைந்து கொண்டன. இச்சுற்றிலேயே அதிரடியான பல மாற்றங்கள் நிகழ்ந்தேறின. கடந்த இரு உலகக்கிண்ணதொடர்களில் சம்பியன் பட்டத்தினை வென்று நடப்பு சம்பியனாக இத்தொடரிலும் கிண்ணத்தை கைப்பற்றி ஹெற்றிக் வெற்றி பெறும் கனவுடன் களம் புகுந்த ஜேர்மனிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது ஜப்பான்.

காலிறுதிச்சுற்றுக்குள் முதல் முறையாக நுழைந்த ஜப்பானை இலகுவான அணியாக எண்ணி காலிறுதியில் எதிர்கொண்ட ஜேர்மனி அதன் அதிரடியான தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியவில்லை. இதனால் ஜப்பான் 1-0 என்ற கோல்கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி தொடரிலிருந்து வெளியேற்றியதுடன் அதன் கனவுகளையும் தவிடுபொடியாக்கியது.

இதே உத்வேகத்துடன் அரையிறுதியில் சுவீடனை சந்தித்த ஜப்பான் தனது வெற்றி வேட்டையை நிறுத்திக்கொள்வதாக இல்லை. கடும் போராட்டத்துக்கு மத்தியில் பனால்டி முறையில் 3-1 என்ற கோல்கணக்கில் வென்று இறுதிப்போட்டியை அடைந்தது.

இந்நிலையில் கால்பந்தாட்ட உலகில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய போட்டியாக இத்தொடரின் இறுதிப்போட்டி அமைந்துவிட்டது. கடந்த 17 ஆம் திகதி ஜப்பானும் - அமெரிக்காவும் உலகையே பெரும் எதிர்பார்ப்புகளுக்கு உள்ளாக்கி இறுதிப் போட்டியில் களம் கண்டன.

போட்டியின் ஆரம்பமே கிண்ணத்தை கைப்பற்றும் அணி எது என்பதை தீர்மானிக்கமுடியாத அளவில் அமைந்து விட்டது. இரு முறை உலகக்கிண்ணத்தை கைப்பற்றி அமெரிக்கா முதல் முறை இறுதிப்போட்டிக்குள் நுழைந்த ஜப்பானிடம் வெற்றியைப் பறிப்பதற்கு தடுமாற்றத்தை வெளிப்டுத்தியது.

இரு அணிகளது கோல் எல்லைகளை மாறிமாறி நெருங்கிய பந்துகள் கோல் கம்பத்துக்குள் நுழைவதாக இல்லை. இரு கோல் காப்பாளர்களும் அபாரமாகவே செயற்பட்டனர். இந்நிலையில் முதல் பாதி கோல் எதனையும் பெறாத நிலையில் முடிவுற இரண்டாவது பாதி பெரும் விறுவிறுப்பை ஏற்படுத்தியது.

இதில் எப்படியாவது வெற்றியைத் தீர்மானிக் வேண்டும் என இரு அணிகளுமே அதீத முனைப்பு காட்டினா. இந்நிலையில் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொண்ட அமெரிக்க வீராங்கனை மிக வேகமாக ஒரு பந்தினை செலுத்தி அணியினை முன்னிலைப்படுத்தினார். ஆட்டநேரம் முடிவை அண்மித்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே அமெரிக்கா இந்த கோலினைப்போட்டது. இதனால் கிண்ணம் அமெரிக்காவுக்கே என அனைவரும் தீர்மானிக்கும் வகையில் போட்டி நகர்ந்தது.

ஆனால் அவற்றை பொய்யாக்கியது ஜப்பான். ஆட்டநேரம் முடிவதற்கு இன்னும் சில மணிநேரங்களே உள்ளநிலையில் ஜப்பான் பதில் கொடுத்தது. இதனால் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் 1-1 என சமநிலை பெற்றன. இதனால் மேலதிக நேரத்துக்கு போட்டி நகர்ந்தது. இதிலும் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் இல்லை என்பதையே காட்டின. அரங்கிலிருந்த ரசிகர்களை ஆசனத்தின் நுனிக்கே அழைத்து வந்துவிட்டது.

வழங்கப்பட்ட மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப்போட அட்டநேர முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் இரு அணி களும் சமநிலை பெற்றன. இதனால் வெற்றியை தீர்மானிக்கும் இறுதி முடிவான பனால்டி உதைக்கு போட்டி நகர்ந்தது.

இதில் வழங்கப்பட்ட 4 சந்தர்பங்களில் 3 சந்தர்ப்பங்களை அமெரிக்க அணியின் வீராங்கனைகள் கோட்டைவிட்ட அதே வேளை 3 சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்திய ஜப்பான் 3-1 என்ற கோல்கணகில் வெறி பெற்று கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

1991 ஆம் ஆண்டு முதலாவது மகளிர் உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டி நடைபெற்றது. சீனாவில் நடைபெற்ற இத் தொடரில் இறுதிப்போட்டியில் நோர்வேயை வீழ்த்தி அமெரிக்கா, கிண்ணத்தை கைப்பற்றியது. இதனையடுத்து 1995 ஆம் ஆண்டு நோர்வே, 1999 ஆம் ஆண்டு அமெரிக்கா 2003, 2007 ஆம் ஆண்டு ஜேர்மனி ஆகிய அணிகள் கிண்ணத்தை கைப்பற்றின.

இவ்வாறு ஐரோப்பிய அணிகளின் கைகளிலேயே மாறி மாறி தவழ்ந்து வந்த இக்கிண்ணம் இம்முறை முதல் முறையாக ஆசிய அணியின் கைக்கு மாறியுள்ளது. இது ஆசியாவில் விளையாட்டின் பெருமையை மேலும் ஒரு படி உயர்த்தியுள்ளது. அண்மைக்காலமாக விளையாட்டு உலகில் ஆசிய அணிகளே ஆதிக்கத்தினை செலுத்தி வருகின்றன. குறிப்பாக அண்மையில் நடைபெற்ற பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டியில் சீன வீராங்கனையான லீ நா கிண்ணத்தை கைப்பற்றி ஆசியாவுக்கு பெருமையைச் சேர்த்தார்.

எனவே இவ்வாறு விளையாட்டு உலகில் மெல்லமெல்ல அதிகரித்து வரும் ஆசியாவின் ஆதிக்கம் தொடரும் பட்சத்தில் எதிர்காலத்தில் விளையாட்டு உலகில் அனைத்திலும் ஆசியாவின் ஆதிக்கமே இருக்கும் என்பது மறுப்பதுக்கில்லை.

ப. சுகிர்தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday July 22, 2011